Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 12 செவ்வாய்க்கிழமை (26.06.2012) பக்கங்கள் 20 ஓசை – 269
















# மீள்குடியேற்ற தாமதத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு, மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகளில், இதுவரை மக்கள் மீள்குடியேற்றப்படுவதிலுள்ள, அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக நேற்றைய தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் படையினரால் மீள்குடியமர்விற்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் நீர், சுகாதாரம், போக்குவரவு, கல்வி போன்ற பல்வேறு அடிப்படை வசதிகள் இன்மை காரணமாக, மீள்குடியேறாத மக்களது தேவைகள் குறித்து விரிவாக, துறைசார் அதிகாரிகளுடன் ஆராயப்பட்டது.

19 ஆம் பக்கம் பார்க்க

## தந்தையின் டிப்பர் வாகனம் மகளுக்கு எமனானது

(கிளிநொச்சி)

பளை - கரந்தாய்குளம் வீட்டுத்திட்டப் பகுதியில் டிப்பர் வாகனச் சில்லில் நசியுண்டு இரண்டு வயதுச் சிறுமி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்றுக்காலை 6.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த திருச்செல்வம் கோபிசா (வயது-2) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவியவருகையில்,

சிறுமியின் தந்தையாகிய திருச்செல்வம் தொழிலுக்கு செல் வதற்காக சிறுமிக்கு முத்தம் கொடுத்துவிட்டு அவரை வீட்டில் விட்டுவிட்டு அவரது டிப்பர் வாகனத்தை இயக்கியுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## பலாலி விமானநிலைய புனரமைப்பு இந்தியாவிற்கு வழங்கப்படமாட்டாது

போர் முடிவுக்கு வந்த நிலையில் வடக்கில் காங்கேசன் துறைமுக அபிவிருத்தி, ரயில் பாதைப் புனரமைப்பு உட்பட பல்வேறு திட்டங்களுக்கு உதவ முன்வந்த இந்தியா பலாலி விமான நிலையத்தையும் நவீன மயப்படுத்த உதவுவதாகவும் உறுதியளித்திருந்த நிலையில், பலாலி விமான நிலைய அபிவிருத்திப் பணிகளை, இந்தியாவிடம் ஒப்படைப்பதில்லை எனவும், இந்தியாவின் உதவியின்றி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனை குடியியல் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரியங்கார ஜெயரட்ண உறுதிப்படுத்தியுள்ளார். பலாலி விமான நிலைய விரிவாக்கத் திட்டத்தை குடியியல் விமானப் போக்குவரத்து அமைச்சே மேற்கொள்ளவுள்ளது எனவும்,

19 ஆம் பக்கம் பார்க்க

## இஸட் புள்ளிகள் இரத்து உயர் நீதிமன்றம் உத்தரவு

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் இஸட் புள்ளி பட்டியலை இரத்துச் செய்யுமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. க.பொ.த. உயர்தர மாணவர்கள் 16 பேருடன் மற்றும் இலங்கை ஆசிரியர்கள் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பாகவே உயர்நீதிமன்றம் இத்தீர்ப்பை அளித்தது. ஏற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிவிபர முறைமைகள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையில், பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களுக்கு தனித தனியாக இஸட் புள்ளி பட்டியல்களை மீண்டும் கணிப்பீடு செய்து வெளியிடுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பிரதம நீதியரசர் ஷிராணி ஏ பண்டாரநாயக்க, நீதியரசர்கள் என்.ஜி. அமரதுங்க, கே.ஸ்ரீபவன் ஆகியோரடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்தத் தீர்ப்பை அளித்தது.

பழைய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களையும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களையும் ஒன்றாகக் கருதி இஸட் புள்ளி கணிப்பிடப் பட்டுள்ளதாகவும் இது தவறானது எனவும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதன்மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

19 ஆம் பக்கம் பார்க்க

## புலம்பெயர்ந்த தமிழரின் தேவையை நிறைவேற்றிவரும் கூட்டமைப்பு

### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)


புலம்பெயர்ந்து வாழும் விடுதலைப் புலி ஆதரவு தமிழர்களின் விருப்பு வெறுப் புக்களையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறைவேற்றிவருவதாக ஊடக அமைச்சர் கெஹலியரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

வடக்கு இராணுவ மயமாக்கல் மற்றும் காணி அபகரிப்பு எனத் தெரிவித்து செய்யப்படும் பிரசாரங்களின் பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இயங்கி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். புலம்பெயர் தமிழர்களின் அழுத்தம் காரணமாகவே

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்குத் தேர்தல் இழுத்தடிப்பிற்கு கூட்டமைப்பின் வெற்றியே காரணம்

### என்கிறார் சுரேஷ் எம்.பி.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் வெற்றி பெற்று விடும் என்ற காரணத்தினாலேயே வட மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் இந்த வருடத்திலேயோ, அடுத்த வருடத்திலேயோ நடத்துவது குறித்து தீர்மானிக்கவில்லை என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தை விடுதலைப்புலிகளிடம் இருந்து கைப்பற்றிய உடன் தேர்தலை நடத்திய அரசாங்கம், வட மாகாணத்[illegible] புலிகளிடம் இருந்து கைப்பற்றி பலகாலம் ஆனநிலையிலும் தேர்தலை நடத்த அக்கறை காட்டாவில்லை. அத்துடன் அந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ள வேண்டியப் பல வேலைத்திட்டங்க்ளை சரிவர நிறைவேற்றவில்லை.

வடமாகாண சபைத் தேர்தலை நடத்தினால், கட்டாயம் அந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெறும் என அறிந்துள்ளதால் அரசாங்கம் தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்து வருகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்று விட்டால் அரசாங்கத்திற்கு தேவையானவற்றை செய்து கொள்ளமுடியாது. இதன் காரணமாகவே இராணுவத்தை பயன்படுத்தி தமக்கு தேவையானவற்றை செய்து வருகிறது. யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவத்தினர் யாழ். மாவட்ட நாடாளுமன்ற

19 ஆம் பக்கம் பார்க்க

## சொந்தக்காணிகளில் குடியமர்த்த திருமுறிகண்டி மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டம் திருமுறிகண்டிப் பிரதேசத்தில் மீள்குடியேற்றுவதற்காக மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் இருந்து அழைத்து வரப்பட்ட 49 குடும்பங்களில் ஒரு தொகுதியினரை மீண்டும் மெனிக்பாம் முகாமுக்கே கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை அழைத்து வரப்பட்டு முறிகண்டிப் பாடசாலையில் தங்கவைக்கப்பட்டிருந்த இந்தக் குடும்பங்களில் ஒரு தொகுதியினர் அதிகாரிகள் காட்டியுள்ள காணிகளில் குடியேறுவதற்கு மறுப்புத் தெரிவித்து, தமக்குச் சொந்தமான காணிகளிலேயே மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும் என கோரியிருக்கின்றார்கள்.

மெனிக்பாம் முகாமில் இருந்து அழைத்து வரப்பட்டவர்களில் 28 குடும்பங்கள் அவர்களது சொந்தக் காணிகளில் மீள்குடியேற்றப் பட்டிருப்பதாகவும், ஏனைய குடும்பங்கள் அதிகாரிகளினால் தெரிவு செய்யப்பட்ட காணிகளில் குடியேற மறுப்புத் தெரிவித்து சொந்தக் காணிகளிலேயே தங்களைக் குடியேற்ற வேண்டும் என கோரியிருந்தார்கள் என்றும் முல்லைத்தீவு அரசரங்க அதிபர் தெரிவித்தார். எனினும் இவர்களிடம்

19 ஆம் பக்கம் பார்க்க

# பிரதேச அபிவிருத்தி வங்கி யாழ்.நகரில் நேற்று திறப்பு






(யாழ்ப்பாணம்)

பிரதேச அபிவிருத்தி வங்கியின் 258ஆவது கிளை நேற்று யாழ்.ஸ்ரான்லி வீதியில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க ஆகியோர் நாடா வெட்டி திறந்து வைத்தனர்.

யாழ்.மாவட்டத்தில் சிறுதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், சிறு தொழில் வியாபாரப் பொருட்களைச் சிறந்த முறையில் விவசாயிகள் உற்பத்தி செய்து தமது வாழ்வாதாரத்தினை மேம்படுத்த பிரதேச அபிவிருத்தி வங்கி தனது பங்களிப்பைச் செய்து சிறுதொழிலா ளிகளுக்கு கடன் உதவிகளை வழங்க முன்வர வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டார்.

பிரதேச வங்கியில் ஆரம்ப வைப்புக்களை இட்டு வெற்றி பெற்ற பாடசாலை மாணவர்களுக்கும், சிறுவர்களுக்கும் துவிச்சக்கர வண்டிகள் பரிசில்களாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா உட்பட மதத் தலைவர்கள், வாடிக்கையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எஸ், 02)

# B+ குருதி வகைக்கு தேவை அதிகம்

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு ஏனைய குருதி வகைகளை விட B+ இனக் குருதிக்கே அதிக தேவை இருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி அதிகாரி வைத்தியர் தாரணி குருபரன் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் படைத்தரப்பின் முன்வந்து இரத்த வங்கியின் கோரிக்கைக்கேற்ப இரத்ததானம் செய்து வருகின்ற போதும் அதன் தேவை இருந்த வண்ணமேயுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு கடந்த ஆறு மாதத்தில் 5 ஆயிரம் பேருக்கு மேல் இரத்த வங்கிக்கு இரத்த தானம் செய்திருப்பதாகவும் குறிப்பிட்ட அவர், மாதாந்தம் சுமார் 800 முதல் 900 பேர் இரத்ததானம் செய்து கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் முல்லைத்தீவு, கிளிநொச்சி, பருத்தித்துறை போன்ற வைத்தியசாலைகளுக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வைத்தியசாலைகளுக்கும் இரத்தம் விநியோகிக்கப்படுவதாக தெரிவித்த அவர், தனியார் வைத்தியசாலைகள் குறித்த கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக் கொள்வதாக வும் தெரிவித்தார்.

அதேபோன்று கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் இன்று யாழ்.இரத்தவங்கிக்கு இரத்த தானம் செய்ய முன்வருவோர் அனுப்பி வைக்கப்படுவதாகவும் தெரிவித்தார். (பா)

# மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான ஆறாவது (ஜூன் மாத) மாதாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## நீதிமன்றச் செய்திகள்

# மதுபோதையில் அநாகரிகம் நீதிமன்றில் செலுத்தினர் அபராதம்

(திருநெல்வேலி)

மதுபோதையில் அநாகரிகமாக நடந்து வீதியில் போக்குவரத்துச் செய்த பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்திய நால்வர் பொலிஸாரிடம் சிக்கிக்கொண்டனர்.

இவர்களை யாழ்.நீதிமன்றில் பொலிஸார் நேற்று ஆஜர்படுத்திய போது இவர்களில் மூவருக்கு அபராதத் தொகையுடன் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. ஒருவருக்கு மட்டும் அபராதம் செலுத்தும்படி உத்தரவிடப்பட்டது.

காங்கேசன்துறை வீதியில் ஒருவருக்கு 6000 ரூபா அபராதமும், ஒருவார கால சிறைத்தண்டனையும், அபராதம் செலுத்தத் தவறினால் ஒரு மாத சிறையும் எனவும், குருநகரைச் சேர்ந்த மற்றொருவருக்கு 5000 ரூபா அபராதமும், ஒரு வார கால சிறையும், அபராதம் செலுத்தத்தவறும் பட்சத்தில் ஒரு மாத சிறையும், இன்னொருவருக்கு 5000 ரூபா அபராதமும், ஒரு வார சிறையும், அபராதம் செலுத்தாது போனால் ஒரு மாத காலச் சிறைவாசமும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

வேறு ஒருவருக்கு 5000 ரூபா அபராதமும், அதனைச் செலுத்தாது விட்டால் ஒரு மாத சிறைத்தண்டனையும் எனக் கட்டளையிடப்பட்டது.

வேலணைச் சேர்ந்த ஒருவர் 180 மில்லி லீற்றர் அரச சாராயத்தை 200 ரூபாவுக்கு விற்பனை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டதால் 5000 ரூபாவை தண்டமாகச் செலுத்தினார்.

பொது இடத்தில் புகைப் பிடித்த ஒருவருக்கும் 2500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (137, எஸ்)

# மின்சாரம் திருடிய பலருக்கு யாழ்.நீதிமன்றம் வழக்கு

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸார் மின்சார சபை ஊழியர்களுடன் இணைந்து மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனை நடவடிக்கையின் போது மின்மானியில் வேகம் குறைத்தல் மோசடியைச் செய்து மின்சார சபைக்கு நட்டம் ஏற்படுத்திய பல மின் பாவனையாளர்களுக்கு யாழ்.நீதவான் மா.கணேசராசா நேற்று அபராதம் விதித்து மின்சார சபைக்கு நட்டஈடு செலுத்தும்படி உத்தரவிட்டார்.

யாழ்.நீதிமன்றில் பொலிஸாரால் இவர்கள் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

இராசாவின் தோட்டம், அரசடி வீதி. கொழும்புத்துறை, பிறவுண் வீதி, கோப்பாய் தெற்கு, உரும்பிராய் தெற்கு, அரியாலை பாஷையூர், இருபாலை, கோப்பாய் வடக்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த 13 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா அபராதமும், முறையே 77 ஆயிரத்து 541 ரூபா, ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 950 ரூபா, 6 ஆயிரத்து 305 ரூபா, 80 ஆயிரத்து 147 ரூபா, 8 ஆயிரத்து 319 ரூபா 19 ஆயிரத்து 964 ரூபா, 6 ஆயிரத்து 107 ரூபா, 5 ஆயிரத்து 900 ரூபா, 6 ஆயிரத்து 170 ரூபா, 50 ஆயிரத்து 257 ரூபா, 8 ஆயிரத்து 700 ரூபா, 5 ஆயிரத்து 900 ரூபா 10 ஆயிரத்து 590 ரூபா மின்சார சபைக்கு நட்ட ஈடாகவும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது. (137, எஸ்)

# வாய்மொழிப் பரீட்சை

(கரணவாய்)

கரணவாய் மணியகரன் தோட்டம் அ.த.க.பாடசாலையில் கற்கும் தரம் - 1 வகுப்பு மாணவர்களுக்குரிய E.L.R.T.C (Oral) வாய்மொழிப் பயிற்சிக்குரிய பரீட்சை யா/கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் இன்று பிற்பகல் 2.45 மணிக்கு நடைபெறும். எனவே பிள்ளைகளை தவறாது பரீட்சையில் கலந்து கொள்வதற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு அழைத்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இன்று காலை பெற்றோர் பாடசாலைக்கு வந்து பொறுப்பாசிரியரைச் சந்தித்து புகைப்படம் எடுக்காத மாணவர்களுக்குரிய புகைப்படத்தை உடனடியாக எடுத்துக்கொண்டு வருமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. (18)

# பாம்பு தீண்டியவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

பாம்பு தீண்டிய ஒருவர் நேற்றுக்காலை.யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

உடுவில் அம்பலவாணர் வீதியைச் சேர்ந்த சேயானந்தம் (வயது-64) என்ற வயோதிபரே பாம்பு தீண்டி யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் வீட்டின் கொல்லைப் புறத்தில் இருந்த பொருட்களைப் புரட்டிப் பார்த்த போது அங்கே மறைந்திருந்த கொம்பேறிமூக்கன் இனப்பாம்பு அவரது கையில் தீண்டியது. உடனடியாக இரத்தம் பீறிட்ட நிலையில் அவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டு உடனடியாக அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# ஆட்சேர்ப்பில் பாரபட்சம்

(நயினாதீவு)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய திருவிழாக் காலத்தில் அங்கு பணியாற்றுவதற்கான பணியாளர் ஆட்சேர்ப்பில் பாகுபாடு காட்டப்பட்டிருப்பதாக விசனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆட்சேர்ப்பிற்காக நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் முறைகேடுகள் நடந்ததாகவும், இதனால் ஆட்சேர்ப்பு நியாயமான முறையில் மேற்கொள்ளப்படவில்லையென்றும் இத்தெரிவினால் பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவித்தனர். (175)


# முதியவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

எழுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான ஆயிரம் ரூபா மாதாந்தக் கொடுப்பனவுக்கான விபரம் திரட்டும் நோக்கிலான பதிவுகள் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை யாழ்.செயலக சமூக சேவைத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

இதற்காக யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்கள் இதற்கான கால அட்டவணை தயாரித்து தகவல் திரட்டும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளன.



காரைநகர் பிரதேச முன்பள்ளிகள் இணைந்து நடத்திய வருடாந்த விளையாட்டு விழாவில் முன்பள்ளியின் இணைப்பாளரும், தலைவருமான செல்வி அ.புஸ்பராணி தலைமையில் யாழ்ரன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினர்களாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன், காரைநகர் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர் தி.சசிகுமார் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக தீவக முன்பள்ளிகளின் உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விக்னேஸ்வரன், யாழ்ரன் கல்லூரியின் அதிபர் வே.முருகமூர்த்தி ஆகியோருடன் காரைநகர் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களையும் காணலாம். (50)

# இந்து சமய அறிவியல் சிந்தனையே நவீன விஞ்ஞானத்தின் முன்னோடி

— ஆசிரிய ஆலோசகர் ஶ்ரீந்திரன் —

(யாழ்ப்பாணம்)

இந்து சமயத்தின் அறிவியல் சிந்தனைகளே நவீன விஞ்ஞானத்தின் முன்னாடிகள் என வலிகாமம் கல்விவலய சைவ சமய பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் என்.பி.ஶ்ரீந்திரன தெரிவித்துள்ளார்.


குப்பிளான் சொக்கவளவு சோதிவிநாயகப் பெருமானின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் 5ஆம் நாள் விழாவில் சொற்பொழிவு ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சொற்பொழிவில் மேலும் தெரிவித்ததாவது, விஞ்ஞானமும் மெய்ஞானமும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். விஞ்ஞானம் என்ற சொல்லிற்கு நல்ல தமிழ்ச் சொல் 'அறிவு' என்பதாகும். இந்து சமயத்தின் முதல் நூலான வேதம் என்ற சொல்லுக்கும் கருத்து 'அறிவு' என்பதாகும். வேதம் இருவிதமான அறிவுபற்றிக் கூறுகின்றது. ஒன்று இவ்வுலகப் பொருள் பற்றியும், அத்துடன் இணைந்த வாழ்வியல் பற்றிய அறிவு. மற்றது மறுமை பற்றிய அறிவு. வேதங்களைத் தொடர்ந்து எழுந்த "ஆகமங்கள்" என்பதன் கருத்தும் தொன்று தொட்டு வரும் அறிவு எனப்பொருட்படும்.

ஆகவே இந்துக்களின் நூல்களும் அறிவுபற்றிப் பேசுகின்றன. விஞ்ஞானமும் இந்தப் பிரபஞ்சத்தின் அறிவு பற்றிப் பேசுகிறது. ஆனால் ஒரு முக்கியமான வேறுபாடு. மேற்கத்தைய விஞ்ஞானிகள் புறவுலக ஆய்வு பற்றித் தமது ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர். இந்து சமய மெய்ஞானிகள் இப்புறவுலக ஆய்வுகளுடன், மறுமைபற்றிய ஆய்விலும் ஈடுபட்டு வெற்றிகொண்டனர். நவீன விஞ்ஞானிகள் புறவுலகை ஆய்வு செய்வதுடன் நிற்க, எமது இந்து சமய மெய்ஞானிகள் (இந்து சமய விஞ்ஞானிகள்) இயல்புறவுலகுடன் மறுமைபற்றிய ஆய்விலும் ஈடுபட்டு வெற்றி கண்டனர்.

இந்த வகையில் தான் இந்து சமய மெய்ஞானிகளின் அறிவியல் சிந்தனைகள், நவீன விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புக்களிற்கு முன்னோடிகளாக விளங்கியுள்ளன என்றார். (22)

# கிளிநொச்சி ஐந்தடிவான் பாலம் மக்கள் பாவனைக்கு திறப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கிழக்கு பகுதியினை கிளிநொச்சி நகருடன் இணைக்கும் மிக பிரதான பாதையில ஒன்றான கிளிநொச்சி வட்டக்கச்சி பிரதான பாதையில் கிளிநொச்சி குளத்திற்கு அருகில் உள்ள ஐந்தடி வான் பாலம் இருநூறு இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

மழைக்காலங்களில் கிளிநொச்சி நகருக்கும் கிளிநொச்சி கிழக்கு பகுதிக்கும் இடையேயான போக்குவரத்திற்கு கடந்த காலங்களில் பெரும் சிரமத்தை ஏற்படுத்தி வந்த ஐந்தடி வான் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட பாலம் மூலம் அந்த போக்குவரத்து சிரமத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் தனியார் போக்குவரத்து துறை அமைச்சர் சி.பி.ரட்ணாயக்க, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார், அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், வட மாகாண கால்நடை விவசாய நீர்ப்பாசன மற்றும் காணி அமைச்சின் செயலாளர் ஷால் டீன், நீர்ப்பாசனத் திணைக் களத்தின் பொறியியலாளர்கள், அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சட்டத்தரணி மக்களால் கௌரவிப்பு



(வவுனியா)

வவுனியாவின் சிரேஸ்ட சட்டத்திரணியும் சமூக சேவையாளருமான முருகேசு சிற்றம்பலத்தின் 45 வருடகால சட்டத்துறை மற்றும் பொது வாழ்வை கௌரவிக்கும் முகமாக பொதுமக்களால் நேற்று முன்தினம் வவுனியா றோயல் காட்டின் மண்டபத்தில் சேவைநலன் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ். சிறிபவன் மற்றும் மேல் முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் எஸ். சிறீஸ்கந்தராஜா ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்ட இந்நிகழ்வுக்கு மேல் நீதிமன்ற நீதிபதி எஸ். விஸ்வநாதன் தலைமைதாங்கியிருந்தார்.


வடக்கு மற்றும் கிழக்கு நீதிபதிகள் அனைவருடனும் நூற்றுக்கணக்கான சட்டத்தரணிகள் புடைசூழ கொரப்பத்தான வீதியில் இருந்து அழைத்து வரப்பட்ட விழா நாயகன் மண்டபத்தில் மக்களின் பெரும் வரவேற்புடன் அழைத்து வரப்பட்டார்.

அதனையடுத்து இடம்பெற்ற நிகழ்வுகளில் நீதிபதிகள் மற்றும் சமூக பிரதிநிதிகளின் உரைகள் இடம்பெற்றதுடன் விழாநாயகனின் ஏற்புரையும் இடம்பெற்றது.

நூற்றுக்கணக்கான பொதுமக்களும் சட்டத்தரணிகளும் நினைவுப்பரிசில்களும் பொன்னாடைகளும் போர்த்தி விழா நாயகனான மு. சிற்றம்பலத்தினை கௌரவித்தனர்.

சட்டத்திரணி மு. சிற்றம்பலம் வவுனியாவில் வறிய மக்களின் நீதிக்காக இலவச சட்ட உதவி நிலையத்தை ஸ்தாபித்து நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (160)

# பாராளும் நயினை நாகபூசணிக்கு பாமாலை சூடுவோம்




அலைகடல் சூழ் நடுவினிலே; நிதம்
அடைக்கலமா யருள்பொழிந்து; எம்முள்
நிலையாகி என்றென்றும்; துயர்
நீக்கிடவாய் நிற்பவளே; புகழ்
மலைபோல யுயர்ந்தோங்கி; பக்தர்
மனங்களிலே கொலுவிருந்து; பேர்
குலையாத குன்றெனவாய்; தீவுள்
குந்தியிருப்பாள் நாக பூசணியே.

அலெக்ஸ்பரந்தாமன்
புதுக்குடியிருப்பு.

(நயினை நாகபூசணி மஹோற்சவ கால பாமாலை)

# நாடிவந்து அருள் நயந்திட வேண்டுமையா!



பொலிகை பதிதனில் வந்த முகம் ஒன்றே
பொய்கையிலே வீற்றிருந்தமுகம் ஒன்றே
வன்னிமரகீழ் அமரவந்த முகம் ஒன்றே
பன்னிரு வேலனாயிருந்த முகம் ஒன்றே
புண்டரீகமதில் தவழவந்த முகம் ஒன்றே
புன்னகை சிந்தும் அழகனாய் ஆறுமுகம் ஒன்றே
கற்பூரகுளத்தில் உதிக்க வந்தமுகம் ஒன்றே
அற்புதங்கள் பலகாட்டும் அழகன் முகம் ஒன்றே

-பொலிகையூர் விசிந்தன்-

(பொலிகண்டி கந்தவன கல்யாண வேலவ சுவாமி மஹோற்சவம்: இன்று 08ஆம் திருவிழா)

# மிதிவெடி அகற்றும் பணியாளர் நொச்சிமோட்டை விபத்தில் பலி

(வவுனியா)

வவுனியா- நொச்சிமோட்டை பாலத்தில் இடம்பெற்ற விபத்தொன்றில் மிதிவெடி அகற்றும் நிறுவனத்தில் பணியாற்றும் இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார்.

நேற்று அதிகாலை இடம் பெற்ற இவ்விபத்திலேயே திருகோணமலையை சேர்ந்த ஜே. புஸ்பராஜா (வயது 32) என்பவர் பலியாகியுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இவர் எவ்வாறு பாலத்தினுள் வீழ்ந்தார் என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவ இடத்தில் இருந்த சடலத்தினை ஓமந்தை பொலிஸார் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (160)

# புகைப்பொருள் எதிர்ப்பு தினம்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் புகைப் பொருள் எதிர்ப்புத்தினம் இன்று பிற்பகல் 1.00மணிக்கு வடபிரதேச நல்லொழுக்கத்தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வைத்தி கலாநிதி வை.யோகேஸ்வரன் பிரதமவிருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக வலி வடக்கு பிரதேச செயலாளர் க.ஶ்ரீமோகனன், தெல்லிப் பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முக குலகுமார், ஸ்கந்தவரோதயக்கல்லூரி அதிபர் செஞ் சொற்செல்வர் ஆறு.திருமுருகன், யூனியன்கல்லூரி அதிபர் கே.இரத்தினகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

எல்லாருக்குமே உங்கள் காதைக் கொடுக்கலாம் ஒரு சிலரிடம் மட்டுமே வாயைக் கொடுக்கலாம். -பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## பிழை யாரிடம் என்பதல்ல; வழி நம்மிடம்!

ஆக்ரோசமான எதிரிகள் போல வெற்றுப் பேச்சுக்களால் சவாலுக்குப் பதில் சவால் விட்டுக் கொண்டிருப்பவர்கள், தத்தம் அரசியல் லாபத்திற்கு ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இப்போது பலரும் சுட்டிக்காட்டத் தொடங்கியுள்ளனர்.

"உன்னை ஒழிக்காமல் ஓயப் போவதில்லை" என்கிற மாதிரியான பகையாவேசப் பேச்சுக்களும் அதற்கு எதிர்வினையான சீண்டல்களும், பிறகு வலிந்து இனவாதத் தாக்குதலாக்கி ஒப்பாரி வைத்து அரற்றி உணர்ச்சிக் கடலில் வாக்குகள் அள்ளியெடுக்கப் படுகின்றன.

கூர்ந்து அவதானிப்பவர்களுக்கு, மக்களை முட்டாள்களாக்கி விட்டு யார் தமக்குள் பரஸ்பர உதவி அரசியலைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது புரியும். இருவர் சண்டை பிடிப்பது போல நடிக்க, சுற்றி நின்று பார்த்துக் கொண்டிருக்கும் மக்களிடம் பணப்பைகளை அபகரித்துக் கொள்ளும் திருட்டுப் போன்றது தான் இது.

தமிழ்த் தீவிரத் தேசியர்களின் அரசாங்கத்திற்கெதிரான படையினருக்கெதிரான வீரவசனங்களும் போராட்டங்களும் அண்மைக்காலத்தில் சற்று மிகையாகியிருப்பதைப் பார்த்த அனுபவஸ்தர் ஒருவர் இவ்வாறு சொன்னார்: இவர்கள் சீறுவார்கள் பதிலுக்கு அவர்களும் இவர்களைச் சீண்டுவார்கள். இவர்கள் உடனே உலகத் தமிழினமே இழிவுபட்டதாக உணர்ந்து துடித்துப் போகும்படியாக ஓங்கிக் குரலெடுப்பார்கள். ஏதோ தேர்தல் வரப்போகிறது என்பதற்கான கட்டியம் அது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் அவ்வளவுதான் என்றார் அவர்.

இனங்களுக்கிடையே மக்களுக்கிடையே கசப்புகளையும் உரசல்களையும் பேணுவதன் மூலம் தங்கள் தங்கள் அரசியல் ஆதாயங்களோடு திருப்திப்பட்டு விடுகிறார்கள். மாறாக, மக்களுக்கு நல்லது ஏதாவது நடக்க வேண்டுமானால், பகை மறந்து கசப்புகள் விலகுவதையே நாம் ஊக்கியாக வேண்டும்.

தவறுகள் நடந்ததை ஒப்புக்கொள்வதும், அவற்றுக்கான பிராயச்சித்த நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதுமே இனங்களுக்கிடையே உருவாகிவிட்டிருக்கும் கசப்புகளை அகற்றும் வழியாகும். இரு பக்கமிருந்தும் அதற்கான இணக்கங்களை உருவாக்கவே எதுவும் பேசப்பட வேண்டும்.

நல்லிணக்கம் உருவாக வேண்டும் என்று விருப்பப்படுகிறவர்கள் – மற்றவர் தவறுகளைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக முதலில் அவரவர் தத்தம் தரப்பிலுள்ள தவறுகளை எடுத்துச் சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கொள்ள முன்வருதல் வேண்டும்.

நாம் நேரிடையாகச் செய்யாத குற்றங்களுக்கு நாம் பொறுப்பில்லை என்று இருந்துவிட முடியாது. குற்றம் நடந்த போது கண்டிக்காமல் இருந்தது, அல்லது அவற்றை அறிந்து கொள்ளாமல் இருந்தது, அவையெல்லாம் நம் விடுதலைக்கும் சுதந்திரத்திற்குமாகச் செய்யப்படும் அவசியங்கள் என்று விபரிக்கப்படுவதை மறுத்துப் பேசாமலிருந்தது கூட எல்லாமே குற்றத்திற்கு உடந்தையாக இருந்தமைதான் என்று புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

கொலைகள், அழிவுகள் எல்லாவற்றையும் அற–அழிப்பு, நியாயமிழப்பு, மனித அவலம், சமூகச் சிதைவு என்ற நிலையில் எல்லாவற்றுக்கும் நம் தரப்பிலும் காரணங்களை ஏற்றுக் கொண்டு, அங்கீகரித்துக்கொண்டு வருத்தத்தைப் பகிர வேண்டியிருக்கிறது.

நாம் வாயிலும் வயிற்றிலுமடித்து முழங்கிக் கொண்டிருக்கிற நம் பிரச்சினைகளை வேறு யாரும் வந்து தீர்க்க முடியாது. என்ன செய்ய வேண்டும் என்று நம்மையேதான் நாம் கேட்டாக வேண்டும். பிழைகள் எல்லாம் எதிரியிடம் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருப்பதல்ல; வழி நம்மிடம் இருக்கிறது என்பதை உணர்ந்து செயற்படுவதன் மூலமே எங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

- ஆசிரியர்

# போரில் வெற்றிபெற்றது போன்று நாட்டையும் வெற்றி கொள்வேன்

## – சரத் பொன்சேகா

கால்வாய்களை சுத்தப்படுத்தவும், புற்களை வெட்டுவதற்காகவும் இராணுவத்தினருக்கு பயிற்சிகள் வழங்கப்படவில்லை எனவும் தனது முறைகளுக்கு ஏற்றவகையிலேயே தான் யுத்தத்தை செய்ததாகவும் முன்னாள இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். சிலர் புத்தகங்களில் உள்ள போர் முறைகளை பின்பற்றி யுத்தம் செய்தனர். எனினும் எனது முறைமைக்கு அமையவே நான் யுத்தம் செய்தேன். எதிரியின் பலம் குன்றிய இடத்தில் நான் தாக்குதல் நடத்தவில்லை. பலமாக இருக்கும் இடத்திலேயே தாக்குதல் நடத்தினேன். இவ்வாறாக நான் உலகப் போர் முறையில் மாற்றங்களைச் செய்தேன். இவ்வாறு செய்த எனக்கு, எனது முறைமைக்கு ஏற்ப அரசியல் கலாசாரத்தையும் மாற்றமுடியும். போரில் வெற்றி பெற்றது போன்று ஒரு நாள நாட்டையும் வெற்றிகொள்வேன்.

தேசிய பாதுகாப்பு வழங்கவே நான் இராணுவத்தினருக்கு பயிற்சியளித்தேனே அன்றி, கால்வாய்களை சுத்தம் செய்யவும் புற்களை வெட்டவும் அல்ல. கால்வாய்களை சுத்தம் செய்ய வேண்டுமானால் அதற்கான ஊழியர்களை இணைத்து கொள்ள முடியும். இது குறித்து நான் மிகவும் கவலையடைந்துள்ளேன். இன்று மக்கள் மத்தியில் இராணுவத்தினருக்கு இருந்த மதிப்பும், மரியாதையும் இல்லாமல் போயுள்ளது. சாதாரண சிப்பாய், தொழிலாளி அடையும் துன்பத்தை விட அதிக துன்பங்களை அனுபவித்து வருகிறார் எனவும் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

# கனிய மணல் கூட்டுத்தாபன ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு

இலங்கை கனிய மணல் கூட்டுத்தாபனத்தை தனியாருக்கு விற்பனை செய்வதான முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகவும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அக்கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் நேற்று திங்கட்கிழமை பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் இக்கூட்டுத்தாபனத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் அனைத்தும் நேற்று ஸ்தம்பிதமடைந்தன இதேவேளை, மேற்படி ஊழியர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டமொன்றும் நேற்று முற்பகல் நடத்தப்பட்டது.

இதன்போது, கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் டிசான் குணசேகர மற்றும் அரச வளங்கள் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் வெலிகமகே ஆகியோர் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படும் இடத்துக்குச் சென்று ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

மேற்படி கூட்டுத்தாபனம் தனியாருக்கு விற்பனை செய்யப்பட மாட்டாது என்று அவர்கள் இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களிடம் உறுதியளித்துள்ளனர்.

கடந்த 2011ஆம் ஆண்டில் 1000 மில்லியன் ரூபாவை திறைசேரிக்கு இலாபமாகப் பெற்றுக் கொடுத்த நிறுவனம் என்ற பெருமை இந்தக் கூட்டுதாபனத்துக்கு உண்டு. அரசாங்கத்துக்கு சொந்தமான நிறுவனங்களின் பட்டியலில் இந்தக் கூட்டுத்தாபனம் முதலிடம் பெற்றுள்ளது.

இந்நிலையில் இந்த நிறுவனத்தை தனியாருக்கு விற்பனை செய்ய இடமளிக்க மாட்டோம். இதுவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குறிக்கோளுமாகும் என்று ஆர்ப்பாட்டக்காரர்களிடம் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் டிசான் குணசேகர தெரிவித்தார்.

அவர்களது உறுதியை அடுத்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்களது ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்ட போதிலும் பணிப் பகிஷ்கரிப்பில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கை பொலிஸ்துறை கடுமையாக முடக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

இலங்கைப் பொலிஸ்துறை முடமாக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நாட்டில் சட்டம் நிலைநாட்டப்படும் என்று அரசாங் கத்தினால் அளிக்கப்பட்ட வாக்குறுதி மீறப்பட்டுள்ளதுடன், நாடு கொந்தளிப்பான நிலைமைக்குத் தள்ளப்படுள்ளது.

"இந்த நாட்டில் நாளுக்கு நாள் குற்றச் செயல்கள் அதிகரித்துச் செல்வதை ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ளத் தொடங்கியுள்ளனர். பொலிஸாரினால் குற்றச்செயல்கைைக் கட்டுப்படுத்த முடியும் என்ற போதிலும், அவர்கள் முடமாக்கப்பட்டுள்ளனர். இந்த நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படும் என ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் பொதுமக்களுக்கு உறுதியளித்திருந்தது. மாறாக நாடு பாதாளத்தில் தள்ளப்பட்டுள்ளது

அரசாங்கத்தின் பாதுகாப்பில் இருந்த குற்றவாளிகளே கட்டுவன படுகொலைச் சம்பவத்திற்கான பொறுப்பாளிகள் ஆவர். எந்தவொரு சிறிய பிள்ளையினாலும் இதனை விளங்கிக் கொள்ள முடியும். பொலிவூட் நட்சத்திரம் போன்று அவர் நீதிமன்றத்தில் சரணடையும் வரை பொலிஸாரினால் ஒன்றும் செய்ய முடியாமல் இருந்தது. நாடு முழுவதும் தற்போது குற்றவாளிகள் பரவிக் காணப்படுகின்றனர்.

ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் நிறுவனத் தலைவர் கொள்ளைச் சம்பவ வழக்கு வந்தபோது சந்தேக நபர்களை உடனடியாக பொலிஸார் கைதுசெய்ததை நாங்கள் கண்டோம். ஆனால் கொழும்பு நூதனசாலையில் கொள்ளையடித்தவர்கள் இன்னமும் அகப்படாமல் உள்ளனர்.

தற்போது பொதுமக்களுக்கு இந்த அரசாங்கத்தின் பலவீனம் நன்கு தெரியும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கயந்த கருணா திலக மேலும் கூறினார்.

# முச்சக்கரவண்டி பின் ஆசனத்தில் மூவர் மட்டுமே பயணிக்கலாம்

## சட்டம் வலுப்படுத்தப்படுகிறது

முச்சக்கர வண்டியில் பின் ஆசனத்தில் மூவர் மாத்திரமே பயணிக்க முடியும் என்ற சட்டம் வலுப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

குருநாகல் - பொத்துஹெர பிரதேசத்தில் பேருந்து ஒன்று முச்சக்கர வண்டியொன்றுடன் மோதுண்டதில் 5 பேர் பலியாகினர்.

முச்சக்கர வண்டியின் தவறு காரணமாகவே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக ஆரம்பக் கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இதற்கு முன்னர் முச்சக்கர வண்டி தொடர்பான சட்டம் வலுப்படுத்தப்பட்ட போதிலும் அதற்கு சில தரப்பினரால் பாரிய எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டன.

எனினும் முச்சக்கர வண்டியின் பின் ஆசனத்தில் மூன்று பேரே பயணிக்க முடியும் என்ற சட்டம் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தை சிலர் பின்பற்றுவதில்லை. எனவே அவ்வாறானவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புலம்பெயர் தமிழர்கள் அரசால் இங்கு வரவேற்கப்பட வேண்டும்

- ஹேமந்த வர்ணகுலசூரிய கட்டுரையிலிருந்து

நாம் நமது அண்டை நாடான இந்தியாவைப்போல ஒரே நாடாக வேகமாக முன்னேற முடியாமலிருப்பது ஏன் என்று நான் அடிக்கடி ஆச்சரியப்படுவதுண்டு. எந்த அரசியல் ஆய்வாளரும் இதற்கான பழி முழுவதையும் அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் அதிகாரிகளின் மீதுதான் சுமத்துவார்கள். இதில் எந்தளவு உண்மை இருக்கலாம் என நிச்சயமாக நான் எண்ணிப் பார்ப்பதுண்டு.

அனைத்து அரசியல்வாதிகளும் அதிகாரத்துக்கு வருவதற்கு நாம் தான் வாக்களித்தோம் என்பதால், சிலவேளைகளில் அவர்களின் செயற்பாடுகளை நாம் மன்னித்து விடுவதுண்டு. தல்கொடபிட்டியா ஆணையம் இலஞ்ச ஊழலில் சம்பந்தப்பட்டதற்காக மொனேகுல மேவை குற்றவாளியாக கண்டு, அவரது குடியியல் உரிமைகளை ஏழு ஆண்டுகாலம் இடைநிறுத்தியிருந்த போதும், அவர் குருணாகல் தொகுதியில் மீண்டும் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார்.

அரசியல்வாதிக்கு ஊழல் புரிவதற்கான தேவை இருக்கிறது என்கிற உண்மையை பொதுவாக மக்கள் ஏற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அவர்களின் அதிகாரத்தையும் சக்தியையும் வெளிக்காட்ட பாதுகாப்பு காவலர்கள் மற்றும் வாகனப் பேரணி கொண்ட ஒரு வியூகம் இருக்க வேண்டும் என்றும் நினைக்கிறார்கள்.

நான் ரோமில் இருந்தபொழுது, புலிகளின் பிரசார இயந்திரம் தற்கொலை குண்டுதாரிகளை மூளைச் சலவை செய்வதில் மட்டுமல்லாது, ஐரோப்பிய ஒன்றியத்தை சேர்ந்த பல உயர்பதவி வகிக்கும் அரசியல்வாதிகளைக்கூட தம்பக்கம் திருப்புவதில் மிகத் திறமையாக பணியாற்றுவதைக் கண்டு திகைப்படைந்திருக்கிறேன். எல்.ரீ.ரீ.ஈ பிரசார இயந்திரங்கள் உள்ளிட்ட பல மூலகங்களிலிருந்தும் தினசரி நூற்றுக்கணக்கான மின்னஞ்சல்கள் எனக்கு வந்த வண்ணமாக இருந்தன.

அவற்றில் ஒன்று அளவுக்கதிகமாக என் மனதை தொட்டது. நீங்கள் எங்களை கொன்று எங்கள் கை, கால்களை உடைத்து ஊனமாக்கி, எங்கள் வீடுகளையும் மற்றும் உடைமைகளையும் எரித்து தரைமட்டமாக்கி, இரவோடிரவாக எங்களை பிச்சைக்காரரின் நிலைக்கு தள்ளி விட்டீர்கள். நீங்கள் எங்கள் தாய் மண்ணிலிருந்து எங்களை விரட்டியடித்தீர்கள். நாங்கள் அகதிகளாகி பிச்சையேந்தும் நிலைக்கு வந்துவிட்டோம். வெளிநாட்டு அரசாங்கங்கள் போடும் பிச்சையில் நாங்கள் வாழுகிறோம், எங்களிடம் எந்த விதமான அவமான உணர்ச்சியும் இப்போது மீதமாக இல்லை. ஆனால் உங்களால் ஒரு காரியத்தை மட்டும் செய்ய முடியவில்லை.

யாராலும் வெற்றி கொள்ள முடியாத எங்கள் இலட்சியங்களையும், வேலை செய்வதற்குரிய நெறிமுறைகளையும் எங்களிடமிருந்து அகற்ற உங்களால் முடியாமற் போயிற்று. முப்பது வருட காலத்துக்குள் இன்று உலகிலேயே அதி சக்தி வாய்ந்த புலம்பெயர் சமூகமாக நாங்கள் வளர்ந்துள்ளோம். ஹிட்லர் என்கிற அரக்கனால் விரட்டியடிக்கப்பட்ட யூதர்களுக்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தில் இன்று நாங்கள் இருக்கிறோம். எங்களை அதிதியாக ஏற்றுக்கொண்ட நாடுகளில் நாங்களும் எங்கள் பிள்ளைகளும் இன்று லட்சாதிபதிகளாக வாழ்கிறோம். உங்கள் பிள்ளைகள் இலங்கையில் ஒருபோதும் அடையமுடியாத உயரத்தை எங்கள் பிள்ளைகள் இன்று எட்டியிருக்கிறார்கள். அவர்களில் அநேகர் தாங்கள் தெரிவு செய்த துறைகளில், அது மருத்துவமோ, விஞ்ஞானமோ,பொறியியலோ, தகவல் தொழில் நுட்பமோ அல்லது விண்வெளிப் பயணமோ எதுவாக இருந்தபோதிலும் அதில் உயர் நிபுணத்துவம் பெற்று விளங்குகிறார்கள்.

எங்கள் புலம்பெயர்ந்த நாடுகளின் அபிவிருத்தியிலும் மற்றும் முன்னேற்றத்திலும் நாங்கள் முக்கிய பங்காளிகளாக விளங்குகிறோம். பிச்சைக்காரர்களாக இருந்த நாங்கள் எப்படி இந்த அந்தஸ்தை அடைந்தோம்? எங்களை உயர்நிலையிலுள்ள வர்த்தகர்களாகவும் மற்றும் தொழில் நிபுணர்களாகவும் எங்களை எப்படி உருமாற்றினோம்? இதை சிங்களவர்களால் ஒருபோதும் அடையமுடியாது. எங்கள் சொந்த தாயகத்தில் எங்கள் சொந்த நாட்டை உருவாக்கும் இலட்சியத்தில்





**இன்று புலம்பெயர் தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கையை தடுப்பதற்கான ஒரேவழி இலங்கைக்கு அவர்கள் வருவதை உற்சாகப்படுத்தும் விதமாக அவர்களிடம் தங்கியுள்ள அநேக பயத்தை அவர்களிடமிருந்து அகற்ற வேண்டும். அவர்களை இலங்கைக்கு வரும்படி நாங்கள் அழைப்பு விடுக்க வேண்டும். வெளிநாடுகளில் அவர்கள் தேடிய செல்வத்தில் பெரும் பகுதியை இங்கே முதலீடு செய்து நமது வளர்ச்சியில் அவர்களையும் பங்காளிகளாக்க வேண்டும்.**

நாங்கள் மிகவும் உறுதியாகவும், தீர்மானமாகவும் இருக்கிறோம். நாங்கள் ஈழத்தை அடையும்வரை இந்தப் போராட்டத்தை விட்டுக் கொடுக்கப் போவதில்லை, அதில் உங்களுக்கு எந்த சந்தேகமும் வேண்டாம் என்று அந்த மின்னஞ்சல் சொல்லியது.

நான் இதை வாசிக்கும்போது, பல வித ஆனால் தெளிவான நினைவாக கறுப்பு ஜூலை எனது நினைவுக்கு வந்தது அன்று கலகக்காரர்கள் எப்படி எனது அயலவரின் வீட்டுக்கு தீ மூட்டினார்கள் என்கிற காட்சி என் கண்முன் நிழலாடியது. ஆர்ப்பரிக்கும் கும்பல் எனது வீட்டில் அலுமாரிகளுக்குள் மறைந்திருக்கும் எனது அயலவர்களை நான் வெளியே அனுப்பாவிட்டால் எப்படி எனது வீட்டையும் தீ மூட்டப் போவதாக அச்சுறுத்தினார்கள் என்பதும் நினைவுக்கு வந்தது.

கருப்பு நிற புகைமூட்டம் நகரையே சூழ்ந்து கொண்டது, கொலை, வன்முறை மற்றும் கலவரங்களைப் பற்றிய கதைகளே எங்கும் நிரம்பியிருந்தன. இந்தக் கடிதம் எனக்கு கிடைத்தபோது பிரபாகரன் இன்னமும் உயிர் வாழ்ந்து கொண்டிருந்தார். வடக்கில் போர் உக்கிரம் பெற்றிருந்தது. இருந்தும் இலங்கையினை சீர்குலைப்பதற்கான தமிழ் புலம்பெயர் சமூகத்தின் ஒரு கற்பனையான இலக்கு அதிகளவு உத்வேகத்துடன் இன்னமும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது போலத் தெரிகிறது.

இந்த வயதானவரின் தவறான அரசியல் செய்தியினை தனியாக ஒதுக்கி விடுங்கள், ஆனால் தமிழ் அகதிகள் இத்தகைய சக்தி வாய்ந்த கூட்டமாக எவ்வாறு உருமாற்றம் அடைந்தார்கள் என்பதை ஆராய்வது தீவிர முக்கியத்துவம் வாய்ந்தது. அவர்களின் பணி நெறிமுறைகள் அவர்கள் இந்த நிலையை அடைவதற்கு எவ்வளவு தூரம் உதவியது.

நான் ரோமிலிருந்த சமயம், ஒரு நாட்டின் செல்வச் செழிப்பு அந்நாட்டு மக்களின் தொழில் நெறிமுறைகளில் தான் பெருமளவில் தங்கியிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டேன்.

இதற்கு நல்ல உதாரணமாக சிங்கப்பூரை எடுத்துக் கொள்ளலாம், அங்கிருந்த ஓப்பியம் போதை மருந்துக்கு அடிமையானவர்களை எல்லாம் லீ குவான் யூ எப்படி தொழில் முனையும் மில்லியனர்களாக மாற்றினார். சீனர்கள் வேலை செய்வதில் வெறித்தனமான போதை கொண்டவர்கள் என்பதைக் கண்டவர்கள் அந்த சீனர்களை அடக்கப்பட்ட சாதியினராக வைத்திருப்பதற்காக அங்கு ஓப்பியம் போதை மருந்தினை அறிமுகம் செய்தார்கள்.

சிங்கப்பூரிலிருந்து தாய்வானுக்கும் மற்றும் தாய்வானிலிருந்து ஹொங்கொங்குக்கும், ஹொங்கொங்கிலிருந்து சீனாவுக்குமாக சென்ற, ஓப்பியம் போதை மருந்தை கைவிட்ட மஞ்கள் சாதியினர், இன்று பூமியிலேயே மிகவும் கடின உழைப்புக்கு பெயர்பெற்ற ஓரினமாகத் திகழ்கிறார்கள். சீனா ஒரு பொருளாதார அதிசயத்தை ஏற்படுத்திக் காட்டியுள்ளது மற்றும் விரைவிலேயே உலகிலேயே மிகவும் சக்தி மிக்க ஒரு நாடாகவும் மாறியது.

உபநிடதத்தில் சொல்லப்பட்ட கர்ம யோகாவில் தொழிலே வழிபாட்டுக்குரியது என்று ஒரு மேற்கோள் சொல்லப்பட்டுள்ளது. இதை நான் ரோமில் இருந்தபோது கண்டேன். அதையும் ஒரு தைப்பொங்கல் தினத்தில்தான் நான் அந்த முடிவுக்கு வந்தேன். அது ஒரு அரசாங்க விடுமுறை தினமாக இருந்தபோதும், தேங்கியிருந்தவேலைகளை முடிப்பதற்காக இந்துக்களை தவிர ஏனைய தூதரக ஊழியர்கள் வேலை செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் அன்றைய தினம் நான் கண்டது மற்றவர்களைக் காட்டிலும் முதலாவதாக வேலைக்கு வந்திருந்த அங்கு பணியாற்றும் ஒரே ஒரு தமிழ் உத்தியோகத்தரையே. அவர் கோவிலுக்குப் போய் தனது தெய்வங்களை வழிபட்டபின் தனது அலுவலக கடமைக்கு சமுகமளித்திருந்தார்.

நான் அவரிடம் நீங்கள் ஏன் ஒரு விடுமுறை நாளில் வேலைசெய்கிறீர்கள் என கேட்டேன். அதற்கு அவர் "ஐயா கடவுளுக்கு அஞ்சலி செலுத்த சிறந்த வழி கடுமையாக வேலை செய்வதுதான். எங்களுடைய மதத்தின்படி செய்யும் தொழிலே தெய்வம்" என்று சிரித்தபடி பதிலளித்தார்.

சட்டத்தொழிலில் முன்னணியிலிருந்த அநேக தமிழர்களை எனக்கு நன்கு தெரியும். அவர்களில் அநேகர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வந்து சலிக்காது,நேரம் காலம் தெரியாது கடுமையாக உழைத்து பெரிய உயரங்களை அடைந்தார்கள். அநேகமான சிங்களவர்கள், தங்கள் சொந்த இனத்தவர்களைக் காட்டிலும் தமிழ் வழக்கறிஞர்களையே நம்பி அவர்களையே வைத்துக்கொண்டனர். இது வழக்கறிஞர்கள் விடயத்தில் மட்டும் உண்மையாகவில்லை, தமிழ் மருத்துவர்களுக்குகூட சிங்கள நோயாளி வாடிக்கையாளர்களை கொண்ட பெரிய கூட்டமே இருந்தது.

இன்று புலம்பெயர் தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கையை தடுப்பதற்கான ஒரேவழி இலங்கைக்கு அவர்கள் வருவதை உற்சாகப்படுத்தும் விதமாக அவர்களிடம் தங்கியுள்ள அநேக பயத்தை அவர்களிடமிருந்து அகற்றவேண்டும். வெளிநாட்டில் வாழ்பவர்களில் கடும்போக்கு எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளர்கள் அல்லாத தமிழர்களை நாங்கள் ஊக்கப்படுத்தவேண்டும். மேலும் ஈழம் கொடியை அசைத்த மற்றவர்களையும்கூட எமது பக்கத்துக்கு கொண்டு வர வேண்டும்.

அநேகமான தமிழர்கள் எல்ரீ.ரீ.ஈயை இராணுவரீதியாக தோற்கடிக்கப்பட்டிருக்க கூடும், மற்றும் பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டார் என்பனவற்றை நம்ப மறுக்கிறார்கள் என்பதை நாங்கள் புரிந்துகொள்ளவேண்டும். அவர் தப்பியிருக்காவிட்டால், அவர் தற்கொலை செய்து கொண்டிருக்க வேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கிறார்கள், மற்றும் அவரது குடும்பத்தினரை மற்றும் அவரது இரண்டு மகன்களையும்கூட அவர் தியாகம் செய்திருக்கிறார் எனவே அவர் உயிரோடிருக்கவேண்டும் என நினைக்கிறார்கள். எல்.ரீ.ரீ.ஈயைதோற்கடித்ததுமூலம் நாங்கள் தமிழர்களின் பெருமையை உடைத்துள்ளோம்.

நாம் நமது வெற்றியில் பெருந்தன்மை உடையவர்களாக இருப்போமானால்,படிப்படியாக நாங்கள் அந்த வெற்றியில் அவர்களையும் அமிழ்த்திக் கொள்ள வேண்டும், கடந்த காலத்திலேயே வாழ்ந்து கொண்டிருப்பதில் எந்தப் பயனுமில்லை. அவர்களை இலங்கைக்கு வரும்படி நாங்கள் அழைப்பு விடுக்க வேண்டும். வெளிநாடுகளில் அவர்கள் தேடிய செல்வத்தில் பெரும் பகுதியை இங்கே முதலீடு செய்து நமது வளர்ச்சியில் அவர்களையும் பங்காளிகளாக்க வேண்டும்.

தமிழர்களை எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளர்களிடமிருந்து தனிமைப்படுத்துவதற்கு இதுதான் ஒரேவழி.தொழிலே தெய்வம், மற்றும் வழிபடவேண்டியது தொழிலையே எனும் அவர்களின் தத்துவத்தையும் நம்முள் விதைத்திட வேண்டும். இந்த நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட தமிழர்கள் நமது தாய்த்திருநாடாம் இலங்கையின் நன்மைக்கு வேண்டி முழுமனதோடு வரவேற்கப்படுகிறார்கள் என்பதை அவர்களுக்கு நாம் காட்ட வேண்டும்.

## அவுஸ்ரேலிய அகதிக் கொள்கை; எதிர்க்கட்சிகளுக்கு இடையில் முரண்பாடு

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவின் அகதிக் கொள்கைத் தொடர்பில் எதிர்க்கட்சியின் மத்தியில் பிளவு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சியான அகதிகளின் வருகை காரணமாக, அரசாங்கம் அவுஸ்ரேலியாவுக்கு வெளியில் அகதிகள் முகாம் ஒன்றை நிர்மாணிக்கவும், மலேசியாவுடன் அகதிகளை பரிமாற்றும் உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்த தீர்மானத்துக்கு அந்த நாட்களில் எதிர்க்கட்சி ஒத்துழைப்பு வழங்கவில்லை. எனினும் தற்போது இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த வாரம் செனட்டில் இந்த தீர்மானத்துக்கு எதிர்க்கட்சியின் பல உறுப்பினர்கள் ஆதரவை வெளியிடுவார்கள் என அவுஸரேலிய எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மெல் வோசர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், பிழையான அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கு எதிர்க்கட்சி துணைபோகாது என எதிர்க்கட்சித் தலைவர் டொனி எபோட் தெரிவித்துள்ளார்.

## பெரிய கல்லாறில் ஆணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரிய கல்லாறு தபாலகத்திற்கு அருகிலிருந்து ஆணொருவரின் சடலம் நேற்று காலை களுவாஞ்சிக்குடி பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

பண்டாரகமவைச் சேர்ந்த மருத முனையிலுள்ள அரிசி ஆலையொன்றில் பணியாற்றும் ஹெவகே குமுது பெரேரா (வயது 35) என இவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சடலத்தின் தலைப்பகுதியில் பலத்த காயம் காணப்படுவதாகத் தெரிவித்த களுவாஞ்சிக்குடி பொலிஸார், இச்சடலத்திற்கு அருகிலிருந்து ஆயுதங்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசியொன்றும் கண்டெடுக்கப்பட்டதாகவும் கூறினர்.

இவர் பெரிய கல்லாறைச் சேர்ந்த பெண்ணொருவரை திருமணம் முடித்து அங்கு வசித்துவந்ததாகவும் பொலிஸாரின் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

சடலத்திற்கு அருகிலிருந்து கண்டெடுக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசியின் உதவியுடன் களுவாஞ்சிக்குடி பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## இணக்கம் தெரிவிக்காததால் பாரிய பிரச்சினை ஏற்படும்

### – பல்கலைக்கழக தொழிற்சங்க ஒன்றியம்

(கொழும்பு)

பிரச்சினைகளுக்கு தீர்வை எட்டும் வகையில் தொழில் ஆணையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ஒப்பந்தத்திற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இணக்கம் தெரிவிக்காமையால் பாரிய பிரச்சினை ஏற்படும் நிலை தோன்றியுள்ளதாக பல்கலைக்கழக தொழிற்சங்க ஒன்றியக் குழுவின் தலைவர் ஆர். எம்.சந்திரபால தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்திற்கு இணக்கத்தை தெரிவிக்காத பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேலும் இரண்டு நிபந்தனைகளை முன்வைத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ளும் வகையில் தொழில் ஆணையாளர் நாயகத்துடன் மூன்று சுற்று பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமக்கு சாதகமாக அமையும் வகையிலான ஒப்பந்தமொன்றை தொழில் ஆணையாளர் தயாரித்திருந்த போதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு சமுகமளிக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

### நீர் வற்றியதால் காட்சியளித்த கோயில்



தற்போதய வெப்பமான காலநிலை காரணமாக காசல்ரீ மற்றும மவுசாகலை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் மிகவும் குறைவடைந்துள்ளதால் மவுசாகலை நீர்த்தேக்கத்தில் மூழ்கிக் காணப்பட்ட பழைய மஸ்கெலியா நகரத்தின் கோயில், விகாரை, முஸ்லிம் பள்ளிவாசல் ஆகியன வெளியே தென்படுகின்றன.

காசல்ரீ மற்றும் மவுசாகலை நீர்த்தேக்கங்கள் இலங்கையின் நீர்மின்னுற்பத்திக்கு பாரிய பங்களிப்பை வழங்கிவருகின்றன. லக்ஷபான, புதிய லக்ஷபான, விமலசுரேந்திர, கெனியன், பொல்பிட்டிய ஆகிய 5 நீர்மின்னுற்பத்தி நிலையங்களுக்கு காசல்ரீ மற்றும் மவு சாகலை நீர்த்தேக்கங்கள் நீரை வழங்கிவருகின்றன. காசல்ரீ மற்றும் மவுசாகலை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 50 வீதம்வரை குறை வடைந்துள்ளதாக இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

## வருமானம் இல்லாத துறைமுகம்

இலங்கையில் உற்பத்தி செய்வதாக கூறப்படும் ரின்மீன்கள், உண்மையில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுவதில்லை என ஜே.வி.பியின் பொது செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஹட்டனில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

காலியில் ரின்மீன் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு சீனாவில் இருந்து ரின் மற்றும் இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டன.

இலங்கையில் மீன் குறைவு என்ற காரணத்தினால், இதற்கு ஜப்பானில் இருந்து மீன்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன என அவர் சுட்டிக்காட்டினார். இதேவேளை அம்பாந்தோட்டையில் நிர்மானிக்கப்பட்ட துறைமுகத்தினால் இலங்கைக்கு எந்த பிரயோசனமும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தினால் வருடத்துக்கு 24 இலட்சம ரூபாய் வருமானமே கிடைக்கிறது. தெரு ஓரத்தில் கூடாரம் ஒன்றை அமைத்தால், சைக்கிள்களைத் திருத்தியே தற்போது 2 இலட்சத்தை சம்பாதிக்க முடியும். இதற்கு துறைமுகம் ஒன்றை நிர்மாணிக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பாகிஸ்தான் பிரஜையின் வயிற்றில் ஹெரோயின் உருண்டைகள்

(கொழும்பு)


பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு ஹெரோயின் கடத்தி வந்த பாகிஸ்தான் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் - கராச்சியில் இருந்து புறப்பட்ட விமானம் 23ஆம் திகதி இரவு 10.30 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியது.

இவ்விமானத்தில் பயணித்தவர்கள் வழக்கம்போல பரி சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது ஒருவர் சந்தேகத்தின் பேரில் கட்டுநாயக்க விமான நிலைய போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அவரது வயிற்றில் ஹெரோயின் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அதன் பின்னர் குறித்த நபர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் மலவாயில் ஊடாக 20 ஹெரோயின் உருண்டைகள்



வெளியில் எடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பிரஜையின் வயிற்றில் மேலும் ஹெரோயின் உருண்டைகள் இருப்பதால் அவர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு கட்டப்பட்ட வீடுகள் கையளிக்கப்படவில்லை

(கொழும்பு)

இலங்கையில் 2004 ஆம் ஆண்டு சுனாமியின் போது இருப்பிடங்களை இழந்த முஸ்லிம்களுக்காக சவுதி அரேபியா அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் இதுவரை உரியவர்களிடம் வழங்கப்படாமல், கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

சுனாமியினால் பெரும் அழிவுகளையும் இழப்புகளையும் சந்தித்த மாவட்டம் என அடையாளம் காணப்பட்ட அம்பாறை மாவட்ட முஸ்லிம்களுக்காக, அக்கரைப்பற்று பிரதேசத்திலுள்ள நுரைச்சோலையில் சவுதி அரேபிய மன்னர் அப்துல்லாவின் பெயரில் அந்த நாட்டு அரசின் நம்பிக்கை நிதியத்தினால் இந்த வீடுகள் அமைக்கப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் சுனாமியின்போது வீடுகளை இழந்த முஸ்லிம் குடும்பங்களில் ஒரு பகுதியினர் தொடர்ந்தும் நிரந்தர வீடுகளின்றி தற்காலிக இருப்பிடங்களிலேயே தங்கியிருக்கின்றனர்.

64 ஏக்கர் நிலப்பரப்பில் 500 வீடுகள், பள்ளிவாசல், வைத்தியசாலை, ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனிப் பாடசாலைகள், திருமண மண்டபம் உட்பட தனித்துவமான இஸ்லாமிய சூழலுக்கு ஏற்ப நிர்மாணிக்கப்பட்ட இக் கிராமம் தற போது கைவிடப்பட்ட நிலையில் காடுறைந்து காணப்படுகின்றது.

மூன்று வருடங்களுக்கு முன்பு இந்த வீடுகள் உரியவர்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்



பட்டிருந்தவேளை, ஜாதிக ஹெல உறுமய தாக்கல் செய்த வழக்கொன்றில் வழங்கப்பட்ட தீர்ப்பின் காரணமாக அந்த நடவடிக்கை தடைப்பட்டது.

பௌத்தர்களின் புனித பிரதேசமான தீகவாபியை அண்டிய பகுதியில் இந்தக் கிராமம் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்ட கட்சி நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தது.

நீதிமன்ற தீர்ப்பின்படி இன விகிதாசார அடிப்படையில் தகுதியானவர்களை தெரிவு செய்யுமாறு அம்பாறை அரசாங்க அதிபருக்கு உத்தர விடப்பட்டது. இரண்டு, மூன்று வருடங்கள் கடந்து விட்ட போதிலும் கூட தீர்ப்பு இதுவரை நடை முறைப் படுத்தப்படவில்லை என சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் கவலையுடன் கூறுகின்றார்கள் .

வீடுகளை இழந்த மக்களைப் பொறுத்தவரை, அவர்கள் உள்ளூர் ஆளும் கட்சி முஸ்லிம் அரசியல்வாதிகள் மீது அதிருப்தியடைந்தவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

## இலங்கைப் பெண்களுக்கு மத்திய கிழக்கில் வேலைவாய்ப்பு


(கொழும்பு)



மத்திய கிழக்கு நாடுகளில் இந்தோனேசியாவின் வீட்டுப் பணிப்பெண்களின் வருகை குறைவடைந்துள்ள நிலையில், அந்த வாய்ப்பு இலங்கைக்கு கிடைத்துள்ளது. இந்தோனேசியா பணிப்பெண்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்புவதில்லை என தீர்மானித்துள்ள நிலையில், பணிபெண்களுக்காக நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கைகளை வெளிநாட்டு முகவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இதன்பொருட்டு ஆறு முகவர்கள் இந்த மாதம் இலங்கைக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள இலங்கை தூதரகம், குறித்த முகவர்களுடன் சந்திப்பு ஒன்றையும் ஏற்பாடு செய்துள்ளது. இதன் அடிப்படையில் இந்த வருடம் 4500 வீட்டுப் பணியாளர்களையும், அடுத்த வருடம் 6000 வீட்டுப் பணியாளர்களையும் அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# தீவகத்தை சகல வழிகளிலும் அபிவிருத்தி செய்வோம்



## யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் உதயன்



(வேலணை)

பின்தங்கிய பிரதேசங்கள் எனக் குறிப்பிடப்படுகின்ற தீவகப் பிரதேசத்தை சகல வழிகளிலும் அபிவிருத்தி செய்து இப்பிரதேச மக்களும் ஏனைய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களைப் போல வாழ்வதற்கேற்ற வகையில் அவர்களது சகல அடிப்படை வாழ்வாதார தேவைகளையும் விரைவில் பூர்த்தி செய்வோம் என ஈபிடிபியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

வேலணை - துறையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரனையுடன் துறையூர் ஐயனார் சனசமூக நிலையம், ஐயனார் விளையாட்டுக் கழகம் என்பவற்றின் 64ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட தீவுகளுக்கான உதைபந்தாட்ட கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டிகளின் இறுதிப் போட்டி நிகழ்வுகளிலும் பரிசளிப்பு நிகழ்விலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; கடந்த கால யுத்தத்தினால் நாம் அனைத்தையும் இழந்து இனி இழப்பதற்கு எதுவுமே இல்லையென்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். தமிழ் மக்கள் தமது வாழ்வாதாரத்தை மீண்டும் அடிப்படையில் இருந்தே கட்டியெழுப்பவேண்டியுள்ளது.

எனவே இவ்வாறு வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப கால தாமதமாகலாம். இருந்தபோதிலும் மக்களது அவசிய வாழ்வாதார தேவைகளை இனங்கண்டு அவற்றை விரைவில் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம். அவ்வாறே தீவகத்தின் அபிவிருத்தியிலுள்ள குறைகளை விரைந்து நீக்குவதற்கான செயற்றிட்டங்களையும் முன்னெடுத்துள்ளோம்.

தீவக மக்களும் ஏனைய பிரதேச மக்களைப் போல சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் வாழ கௌரவ அமைச்சரும் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வழியில் நாமும் எமது கட்சியும் அயராது உழைத்து வருகின்றோம். இந்த ஆண்டும் குறித்த இவ் விளையாட்டுக் கழகத்திற்கு என்னால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தீவுப்பகுதிப் பிரதேச இளைஞர்கள் விளையாட்டுத்துறை கல்வித்துறை ஆகியவற்றில் உயர் நிலை அடைந்து வருவதுடன், கடந்த காலத்தில் சகல துறைகளிலும் பின்தங்கிய நிலையில் இருந்த தீவக மக்கள் சமூகமானது இன்று கல்வியின் மூலம் துரித முன்னேற்றம் அடைந்து வருவதை காணக் கூடியதாக உள்ளது. இதற்குச் சான்றாக கடந்த நான்கு ஆண்டுகளுக்குள் வேலணை மத்திய கல்லூரியில் கல்வி கற்ற அறுபதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளதுடன் இதே பாடசாலையின் பழைய மாணவன் அகீபன் உதைபந்தாட்டத் திறமையின் மூலம் இந்தியாவின் தமிழ் நாட்டு மாநிலப் பல்கலைக்கழகங்களின் உதைபந்தாட்ட அணியில் தெரிவு செய்யப்பட்டுள்ளமையானது தீவக மக்களுக்கு பெருமையைத் தேடித்தந்துள்ளது என்றார்.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வேலணைப் பிரதேச சபை தவிசாளர் சின்னையா சிவராசா (போல்), வேலணைத துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகமானது தீவகத்தின் தலை சிறந்த விளையாட்டுக் கழகமாக திகழ்வதுடன், கடந்த பல ஆண்டுகளாக நாட்டில் நடைபெற்றுவந்த கொடிய யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளமையை அடுத்து, தற்சமயம் தீவகத்தில் காணபடும் விளையாட்டுக்கழகங்கள் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளை முன்னெடுத்து தீவக இளைஞர் யுவதிகளின் விளையாட்டுத் திறமைகளை வளர்க்கும் களமாக அமைந்துள்ளதுடன் பல திறமையான வீரர்கள் இனங் காணப்பட்டு தேசிய அணிகளுக்கு தெரிவு செய்யப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இந் நிகழ்விற்கு வேலணை தெற்கு பிரதேச செயலர் மஞ்சுளா தேவி மற்றும் வேலணை மத்திய கல்லூரி முன்னாள் அதிபரும் தீவகவலய பிரதிக்கல்விப் பணிப்பாளருமாகிய அருணகிரிநாதன், துறையூர் கடற்தொழிலாளர் சங்கத்தலைவர் பாலச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தேர்த்திருவிழா

(புலோலி)

புலோலி பசுபதீஸ்வரர் ஆலய (சிவன் கோயில்) வருடாந்த இரதோற்சவம் நேற்றுக் காலை 8.00 மணிக்கு பக்தி பூர்வமாக இடம் பெற்றது.

தேர்த் திருவிழாவில் சாரணர்களும், பொலிஸாரும், இணைந்து பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். நகர வர்த்தகர்கள் மண்டகப்படி வைத்து பசுபதீஸ்வரரின் அருள் வேண்டி நின்றனர்.

(62)

# சாதாரணதர மாணவர்களுக்கு ஆங்கில வாய்மொழிப் பரீட்சை

2014 முதல் க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கு ஆங்கில பாடத்தில் வாய்மொழி மூலமான பரீட்சை அறிமுகப்படுத்தப் படவுள்ளதாக ஜனாதிபதியின் ஆலோசகரும், ஜனாதிபதி செயலணிக் குழுவின் பிரதித் தலைவருமான சுனிமல் பெர்னாடோ தெரிவித்தார்.

பாடசாலை மாணவப் பருவத்தில் இருந்தே மாணவர்களின் ஆங்கில மொழித் திறமையை வளர்க்கவே இத் திட்டம் எனத் தெரிவித்தார். இந்தத் திட்டத்தின் பிரகாரம் இவ்வாய்மொழிப் பரீட் சைக்கு 10 புள்ளிகள் வழங்கப்படவுள்ளது. வருடம் முழுவதும் இடம் பெறும் இப்பயிற்சியில் வகுப்பாசிரியர் அல்லாத வேறொரு ஆசிரியரால் திறமை பரீட்சிக்கப்பட்டு, குறித்த புள்ளி பொதுப பரீட்சைப் பெறுபேற்றுடன் சேர்த்துக் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


# முல்லை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை புதிய கட்டடம் திறப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் புதிய கட்டடம் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப் பட்டது. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, வட மாகாண ஆளுநர் ஜிஏ.சந்திரசிறி ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டு கட்டடத்தினை திறந்து வைத்தார்கள்.

தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் சி.பி ரட்ணாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் உனைஸ் பாரூக் ஆகியோர் விசேட விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள்.

இக்கட்டட நிர்மாணத்திற்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் ரூபா 39 மில்லியன் ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# கல்வி வளர்ச்சி பற்றி சிந்திக்காதவர்களை சமூகத்திற்கு வெளிப்படுத்துவோம்

## – இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் கல்வி வளர்ச்சி பற்றிச் சிந்திக்காமல் இருப்பவர்களை சமூகத்திற்கு நாம் வெகு விரைவில் வெளிப்படுத்துவோம். அதற்கான ஆதாரங்களும் எம்மிடம் உள்ளன என்று இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வகுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

21.06.2012 நடைபெற்ற ஒன்று கூடலில் வட மாகாண ஆளுநரால் பணிக்கப்பட்ட சில விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அவர்கள் ஆளுநரின் செயலாளர் சகிதம் வடமாகாண பிராந்திய ஆணையாளர்கள், மாகாண கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி பணிப்பாளர்கள், ஆசிரிய தொழிற்சங்கங்கள், வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழு உள்ளிட்ட அனைவரையும் அழைத்து பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தார்.

இது தொடர்பான தகவல்கள் முழுவதும் பதிவு செய்யப்பட்டு ஆவணமாக்கப்பட்டு ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், மாணவர்களிடம "பரீட்சைக்காக கட்டணம் அறிவிட ஆளுநர் மறுப்பு, செயலாளர் எதிர்ப்பு" என்ற செய்தி பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம். வடமாகாணததின் கல்வி வளர்ச்சியில் அக்கறையில்லாத சிலர் விடுகின்ற அறிக்கை தொடர்பில் அனைவரும் அவதானத்துடன் நடந்து கொள்ளவேண்டு மென்று இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

உண்மையில் பாடசாலை மாணவர்களிடம் பரீட்சைக்கு பணம் வசூலிப்பது தொடர்பில் ஆராயப்பட்டதே தவிர முடிவேதும் எடுக்கப்படவுமில்லை. செயலாளரால் மறுப்புத் தெரிவிக்கப்படவுமில்லை. தம்மை அர்ப்பணித்து சேவை செய்யும் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில அதிகாரிகளை அவமானப்படுத்தும் ஒரு செயலாகவே இதனை நாம் பார்க்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(137)

# முரசின் இன்றைய பலன்

(26.06.2012 –செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் ஆனி மாதம் 12 ஆம் திகதி. ஸப்தமி முன்இரவு 6.56 வரை. நட்சத்திரம் உத்தரம் பின் இரவு 3.20 வரை. அமிர்தசித்தம் உதயம் நடேசர் ஆனி உத்தரதரிசனம். அட்டமி முன்னிரவு 6.56 இன் மேல். இராகு காலம் 2.55 - 4.25 வரை. சுப நேரம் 10.25 - 11.55 வரை. எமகண்டம் 8.55 - 10.25 வரை. குளிகை காலம் 11.55 - 1.25 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பகைவரால் தொல்லை, கனவுகள் நனவாகும், பதவியுயர்வு கிட்டும், கடன் வசூலாகும். |
| ரிஷபம் | இருப்பிட வசதி, வீண்பழி கேட்டல், பெற்றோர் உதவி, ஆடம்பரத்தில் ஆசை. |
| மிதுனம் | முயற்சி பலிதம், சுப கருமங்கள் ஈடேறும், கடன் தொல்லை தீரும், தடைகள் அகலும். |
| கடகம் | உயர்வு, கணவர் மதிப்பு, மேலதிகாரிகள் அனுசரணை, விரும்பிய இடமாற்றம். |
| சிம்மம் | கடன் கவலை பணமுடை, ஆதரவு, பெருகும், விபத்துக்கள் ஏற்படலாம். |
| கன்னி | வெற்றிக் களிப்பு, பொருளாதாரம் உயரும், கல்விச் செலவு அதிகம், புதிய சொத்து சேரும். |
| துலாம் | திருப்தி, மேலதிகாரிகள் கண்ழப்பு, தொழிலில் இலாபம், கடமையில் கவனம். |
| விருச்சிகம் | மனத்திருப்தி, வாக்குவாதங்களைத் தவிர்க்கவும், சிக்கனம் தேவை, முன் எச்சரிக்கை. |
| தனுசு | தொழில் உயர்வு, வருமானம் அதிகரிக்கும், வீண் மனஸ்தாபம், சுப கருமங்கள். |
| மகரம் | அரச உதவி, தன்னம்பிக்கை, எதிர்பாராத செய்திகள், கணவர் ஒத்துழைப்பு. |
| கும்பம் | சந்திராட்டமம் புது முயற்சி கூடாது, மனதில் சோர்வு, திடீர் நன்மை, காரியானுகூலம். |
| மீனம் | தொல்லைகள், சமுதாயத்தில் நற்பெயர், எதிர்ப்புகள் மறையும், சேமிப்பு உயரும். |



# புற்றுநோயால் கால்பந்து வீரர் மரணம்

ரியல் பெடிஸ் கால்பந்து அணியின் 23 வயது இளம் கால்பந்து வீரர் மிகி ரோக் நேற்று முன்தினம் புற்றுநோய் காரணமாக மரண மடைந்தார்.

ரியல்பெடிஸ் அணியின் தடுப்பாட்ட வீரர் மிகி ரோக் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். கடந்த 2010-11 சீசனில் ரியல்பெடிஸ் அணிக்காக 12 போட்டிகள் மட்டுமே விளையாடிய மிகி நோயின் தீவிரம் காரணமாக கால்பந்து விளையாடுவதை கைவிட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் அவர் மரணம் அடைந்தார். அவரது மரணம் ஸ்பெயின் கால்பந்து வீரர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஸ்பெயின் தடுப்பாட்ட வீரர் செர்ஜியோ ரமோஸ் கூறுகையில், மிகி மரணம் குறித்து சொல்ல வார்த்தைகள் இல்லை.அவரது இழப்பு பேரிழப்பு என்றார்.

பார்சிலோனா மிட்பீல்டர் செஸ்க் பெப்ரிகாஸ் தனது டுவிட்டர் தளத்தில் எனக்கு மிகவும் துயரத்தை அளித்த செய்தி. அவரது ஆன்மா சாந்தியடைய வேண்டுகிறேன் என்று கூறியுள்ளார்.

கடந்த 2005 முதல் 2009ஆம் ஆண்டு வரை மிகி ரோக் லிவர்பூல் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். லிவர்பூலுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தாலும் பெரும்பாலும் அவர் லோனில் பிற அணிகளுக்காக விளையாடி வந்தார். கடந்த 2011ஆம் ஆண்டு ரியல்பெடிசில் இணைந்தார். அந்த அணிக்காக 12 போட்டிகள் விளையாடி 2 கோல்களையும் அடித்துள்ளார். இந்த இளம் வீரரின் மரணம் உலக கால்பந்து இரசிகர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

# அரையிறுதியில் இத்தாலி



(கீவ்)

யூரோ கிண்ண கால்பந்து தொடரின் காலிறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணியை வீழ்த்தி இத்தாலி அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

யூரோ கிண்ண் கால்பந்தாட்டத் தொடரின் நான்காவது மற்றும் கடைசி காலிறுதிப் போட்டி உக்ரைனின் கீவ் நகரிலுள்ள ஒலிம்பிஸ்கி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இப்போட்டியில் இங்கிலாந்து - இத்தாலி அணிகள் மோதின.

இரு அணிகளும் சமபலம் வாய்ந்தவை என்பதால் போட்டி ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக நடந்தது. மேலும் இரு அணிகளிலும் பல சிறந்த வீரர்கள் இடம்பெற்றிருந்ததாலும் போட்டி பரபப்புக்கு பஞ்சமின்றி நடந் தது. அதிலும் குறிப்பாக இத்தாலி வீரர் பலோடெல்லியின் ஆட்டம் அபார மாக இருந்தது. எனினும் முதல் பாதியில் இரு அணியினரும், கோல் அடிப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் வீணா யின. இரு அணியின் கோல் கீப்பர்களும் சிறப்பாக செயற்பட்டு, எதிரணியினரின் முயற்சிகளைத் தடுத்தனர்.

இரண்டாவது பாதியில் ஆட்டம் மேலும் பரபரப்பான கட்டத்தை எட்டியது. இரு அணி வீரர்களும் கோல் அடிக்க முயன்று, இயலாமல் போவது தொடர்ந்து நடந்தவண்ணம் இருந்தது. 90 நிமிடங்களின் முடிவில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்க முடியாமல் போனதால், கூடுதல் நேரம் வழங்கப்பட்டது.

கூடுதல் நேரத்திலும் இரு அணி வீரர்களும் விடாமல் மல்லுக்கட்டினர். கூடுதலாக வழங்கப் பட்ட 30 நிமிடங்களில் கூட கோல் எதுவும் அடிக் கப்படாததால் போட்டியின் முடிவை தண்ட உதை மூலம் தீர்மானிக்கப்பட்டது. இதில் இத்தாலி அணி 4 - 2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம் இத்தாலி அணி யூரோ கிண்ண கால்பந்து போட்டியின் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது. அரையி றுதி ஆட்டத்தில் இத்தாலி அணி, வலுவான ஜேர்மனியை எதிர்கொள்கிறது. இந்த ஆட்டம் வரும் 29ஆம் திகதி நடக்கிறது. முன்னதாக வரும் 28ஆம் திகதி நடக்க உள்ள முதலாவது அரையிறுதியில் போர்த் துக்கல் அணி, ஸ்பெயின் அணி யுடன் மோதுகிறது. இதையடுத்து அரையிறுதிப் போட்டிகளில் வெல் லும் அணிகள் ஜூலை 1ஆம் திகதி நடக்கும் இறு திப்போட்டியில் மோத உள்ளன.

# இங்கிலாந்து அசத்தல் வெற்றி

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ஒரு ருவென்ரி - 20 போட்டியில் இங்கிலாந்து அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது. நாட்டிங்கொமில், நடைபெற்ற இப்போட்டி யில் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத்தீவு அணிக் கப்டன் டரன் சமி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தார். முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி ஆரம்பத்தில் பெரும் பின்னடைவுக்களை எதிர்கொண்டது. கிறிஸ் கெய்ல், சிமன்ஸ், சாமு வேல்ஸ் ஆகியோர் அடுத்தடுத்து சொற்ப ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழந்தனர். இருப்பினும் ஸ்மித், பிராவோ இணை அணிக்கு நல்ல அடித்தளத்தைப் பெற்றுக் கொண்டது. இறுதி யில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டுவைன் ஸ்மித் 70, டுவன் பிராவோ 54, போலாட் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பின் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 173 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து அணி அலெக்ஸ் ஹாலஸின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் வெற்றியிலக்கை அடைந்தது. இறுதியில் இங்கிலாந்து அணி 19.4 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் அலெக்ஸ் ஹாலஸ் 99 ஓட்டங்களைப் பெற்று ஒரு ஓட்டத்தால் சதம் பெறும் வாய்ப்பை இழந்தார். மற்றும் போபரா 59 ஓட்டங்களைப் பெற்றார். ரவி ராம்போல் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.



# கிண்ணம் வென்றது சிம்பாப்வே



(ஹராரே)

முத்தரப்பு ருவென்ரி - 20 தொடரில், சிம்பாப்வே அணி கிண்ணத்தை வென்று சாதித்தது. நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் தென்னாபிரிக்க அணியை 9 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

சிம்பாப்வே, தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் அணிகள் முத்தரப்பு ருவென்ரி -20 தொடரில் விளையாடின. லீக் சுற்றில் அசத்திய சிம்பாப்வே, தென்னாபிரிக்க அணிகள் நேற்று முன்தினம் ஹராரே யில் நடந்த இறுதிப் போட்டியில் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி தொடக்கத்திலிருந்து ஒரு முனையில் விக்கெட்டைப் பறிகொடுத்து வந் தது. இருப்பினும் மறுபுறத்தில் பொறுப்பாக ஆடிய பிளசிஸ் அணியைக் கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றார். இறுதியில் தென்னாபிரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப்பெற்றது. இதில் பிளசிஸ் 66, அல்பி மோர்கல் 34, இங்ராம் 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜார்விஸ் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

147 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சிம்பாப்வே அணி, மச கட்சா, கப்டன் பிரண்டன் டெய்லர் ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றியிலக்கை அடைந்தது. இறுதியில் சிம்பாப்வே அணி 17.1 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஆட்ட மிழக்காது பிரண்டன் டெய்லர், மசகட்சா தலா 59 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்குத் துணைபுரிந்தனர்.

இந்த வெற்றியின் மூலம், சிம்பாப்வே அணி முத்தரப்பு ருவென்ரி-20 கிண்ணத்தை வென்று சாதித்தது. ஆட்டநாயகன் விருது சிம்பாப்வே கப்டன் பிரண்டன் டெய்லருக்கு வழங்கப்பட்டது. தொடர் நாயகன் விருதை சிம்பாப்வேயின் மசகட்சா பெற்றார்.

# கிண்ணம் வெல்வராம் பெடரர்

(மும்பை)

இந்தாண்டு விம்பிள்டன் ரென்னிஸில் பெடரர் கிண்ணம் வெல்வார் என இந் திய அணியின் நட்சத்திர வீரரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

பெடரரை எனக்கு மிகவும் பிடிக்கும். அவரது ஆட்டம் அருமையாக இருக் கும். ஆட்டத் திறன் என்பது எல்லாவீரர் களுக்கும் ஒரு காலகட்டத்தில் போகும், வரும். ஆனால், அவர்களது தனிப்பட்ட ஆட்டம் என்றும் மாறாது. அந்த வகை யில் பெடரரின் ஆடும் விதம் எனக்கு மிகவும் பிடிக்கும். இந்தாண்டு அவர் தனது முதல் கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை லண்டனில் வெல்வார் என நம்புகிறேன். அவருக்கு எனது முன்கூடிய வாழ்த்துக்கள். ஒருவர் உடல் வலு மற்றும் அதன் தீவிர ஈடுபாடு இருக்கும் வரை போட்டிகளில் பங்கேற்பதில் தவறில்லை.

கிரிக்கெட் ஆட்டத்தை நான் தற் பொழுதும் அனுபவித்து ஆடி வருகின் றேன். அந்த வேகம் என்னை மேலும் சாதிக்கத் துண்டுகின்றது என்றார்.

# ஒலிம்பிக் போட்டிகளில் முதல் முறையாக சவூதி பெண்கள்

சவூதி அரேபியா அதன் மெய் வல்லுநர் வீராங்கனைகளுக்கு 2012 லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு பற்ற முதல் முறையாக அனுமதி வழங்கியுள்ளது.



ஒலிம்பிக் போட்டிகளுக்கு தகுதி பெறக் கூடிய தடகள வீராங்கனைகள் குறித்து நாட்டின் ஒலிம்பிக் குழு மேற் பார்வை செய்து வருவதாக சவூதி அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பால் இனப் பாகுபாட்டின் அடிப்படை யில் தகுதி நீக்க முடியும் என்ற ஊகத்தை இந்த தீர்மானம் முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் பெண்கள் பொது விளை யாட்டு போட்டிகளில் பங்குபற்றுவ தற்கு சவூதி அரேபிய மத பழைமை வாதிகள் தொடர்ந்தும் எதிர்ப்புத் தெரி வித்து வருகின்றனர்.

நாட்டில் இடம்பெறும் பொது விளை யாட்டுப் போட்டிகளில் பெண்கள் பங்கு பற்றுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக் கது.

இதேவேளை, இந்த முடிவை விளை யாட்டு ஆர்வலர்கள்,விளையாட்டு விமர் சகர்கள் வரவேற்றுப் பாராட்டுத் தெரி வித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 209 ஓட்டங்களால் இலங்கை வெற்றி

(காலி)

பாகிஸ்தான் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 209 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலானமுதலாவது டெஸ்ட் போட்டி காலி மைதானத்தில் நேற்று நிறைவடைந்தது. இதில் மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தை பாகிஸ்தான் அணி தொடர்ந்தது. 38 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நான்காவது விக்கெட்டையும் இழந்து பாகிஸ்தான் அணி தடுமாறியது. இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த யுனிஸ்கான், அசைட் சபீக் ஆகியோரின் அணியின் நிலையை உணர்ந்து பொறுப்புடன் ஆடினர். பொறுமையாக ஆடிய இந்த ஜோடி ஐந்தாவது விக்கெட்டுக்காக 151 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை பிரிக்கப்பட்டது. இறுதியில் பாகிஸ்தான் அணி அனைத்து விக்கெட்டுக்களை இழந்து 300 ஓட்டங்களைப்பெற்றுத் தோல்வித் தழுவியது. இதில் யுனிஸ்கான் 213 பந்துகளை எதிர்கொண்டு ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 87 ஓட்டங்களையும், அசைட் சபீக் 165 பந்துகளை எதிர்கொண்டு 13 பவுண்டரிகள் அடங்கலாக 80 ஓட்டங்களையும் பெற்றனர். மற்றும் ஏ. அக்மல் ஆட்டமிழக்காது 105 பந்துகளை எதிர்கொண்டு 40 ஓட்டங்களைப் பெற்றார். வீச்சில் குலசேகல, ரண்டீவ் தலா மூன்று, ரங்கண ஹேரத் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனா சங்கக்கார தெரி- வானார். இலங்கை முதல் இனிங்ஸ் 472. இரண்டாவது இனிங்ஸ் 137/5. பாகிஸ்தான் முதல் இனிங்ஸ் 100.





## தேசிய அணியில் இடம்பிடிக்க எவருக்கும் தடையில்லை

# கல்வியுடன் விளையாட்டிலும் ஈடுபட்டால் தீய எண்ணங்களிலிருந்து விடுபட முடியும்



## தினமுரசுக்கு அரவிந்த பிரத்தியேக செவ்வி

(யாழ்ப்பாணம்)

கல்வியுடன் சம அளவு விளையாட்டிலும் மாணவ, மாணவிகள் ஈடுபட்டால் நிச்சயம் தீய எண்ணங்களி லிருந்து விடுபட்டு பிறந்த மண்ணுக்கும், நாட்டுக்கும் பெருமை தேடிக் கொடுக்கும் சாதனையாளர்களாக உருவாக முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. அவ்வாறு ஈடுபட்டவர்களுக்கு விளையாட்டு நல்ல பாதுகாப்புக் கவசமாக உள்ளது என இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அரவிந்த டி சில்வா தெரிவித்தார்.

கொக்கோகோலா நிறுவனமும், அரவிந்த டி சில்வா கிரிக்கெட் அற நிதியத்தினரும் இணைந்து யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற பயிற்சி முகாம் நிறைவில் எமது செய்தி யாளர் கருத்துக் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

விளையாட்டு என்பது ஒருவரை நல்வழிப்படுத்த, சகிப்புத் தன்மை, வெற்றி, தோல்வியை சம-மாக ஏற்றுக்கொள்ளும் பக்குவம் போன்றவற்றை வளர்த்துக்கொள்ள துணைபுரிகின்றது.

இந்த விளையாட்டை வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள தமிழர்கள் குறிப்பாக பெற்றோர் இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. படிப்பதன் மூலம் எல்லாவற்றையும் சாதித்துவிடலாம் என்ற எண்ணமே அவர்களிடம் அதிகம் காணப்படுகின்றது.

இன்றைய உலகைப் பொறுத்த வரையில் படிப்பு என்பதற்கு அப்பால் விளையாட்டில் ஒருவர் சாதிக்கும் பட்சத்தில் மிக இலகுவாக வெளிக் கொணரப்படுகின்றார்.

படிப்பில் எவ்வாறு பெற்றோர் பிள்ளைகளை வழிநடத்துகின்றரோ அதேபோன்று சம அளவு விளையாட்டிலும் பிள்ளைகளை வழிநடத்த வேண்டும். இவ்வாறு வழி நடத்தும் பட்சத்தில் நல்ல பிரஜைகள் உருவாவதற்கு வழிவகுக்கும். விளையாட்டை விளையாட்டாக எவரும் எடுத்துக் கொள்ளக்கூடாது.

அதன் மூலம் நல்ல தேக ஆரோக்கியம் கிடைக்கும். பிரபலம், புகழ் எ[illegible] தேடி வரும். வைத்தியசாலைகளுக்குப் போகவேண்டிய தேவையில்லை.

கிரிக்கெட்டைப் பொறுத்த வரையில் தற்போது வடபகுதியில் விளையாடப்பட்டு வரும் மற்றிங் ஆடுகளங்களில் ஆடினால் தேசிய அணியில் இடம் பிடிக்க முடியாது என்று கூறமுடியாது. சர்வதேச ஆடுகளங்களில் ஆடினால் மட்டுமே தேசிய அணியில் இடம்பிடிக்க முடியும் என்ற தவறான எண்ணத்தைக் கொண்டிருப்போர் தயது செய்து அதனை களைந்துவிடுங்கள். நான் 18 வயது வரை மற்றிங் ஆடுகளத்திலேயே விளையாடினேன். நான் கிரிக்கெட் மீது கொண்ட காதலாலும், அதில் தீவிர பயிற்சியை மேற்கொண்டதுமே எனக்கு வெற்றிக் கிடைத்தது. அதைப் போன்று ஒவ்வொருவரும் எந்த விளையாட்டில் ஈடுபடுகின்றீர்களோ அதில் தீவிர பயிற்சியையும், பயிற்சியாளருக்குக் கீழ்படிந்து நடந்து முழு மன-துடன் ஈடுபட்டால் நிச்சயம் அந்த இலக்கை அடைய முடியும்.

கொக்கோகோலா நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்ப்டுகின்ற இந்தப் பயிற்சி முகாம் வ்டபகுதியிலுள்ள வீரர்களுக்கு கிரிக்கெட் மீதான ஆர்வத்தை மேலும் அதிகரிக்கச் செய்யவும், கொழும்பு போன்ற முதல் தர மாவட்டங்களிலுள்ள சிறந்த பயிற்றுநர்களை இந்த வீரர்களுடன் இணைத்து செயற்பட வைத்து அவர்களை உற்சாகப்படுத்துவதன் மூலம் மேலும் கிரிக்கெட் மீதான ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்யவேண்டும் என்பது எமது நோக்கம். அத்துடன் இந்தப் பயிற்சி முகாம் ஊடாக நல்ல வீரர்கள் இனங்காணப்படுவார்கள்.

இருப்பினும், சில அடிப்படை நுணுக்கங்கள் தெரியாத சில வீரர்களையும் இங்கு நாம் காண முடிகின்றது. இவ்வாறானவர்கள் தேசிய மட்டப் போட்டிக்குத் தயாராவதற்கு கடினமாக உழைக்க வேண்டும்.

கொழும்பு போன்ற முக்கிய நகரங்களில் 9 வயதிலிருந்து சிறந்த பயிற்றுநர்களிடம் கிரிக்கெட் பயிலுகின்றார்கள். அவ்வாறான செயற்பாடு வட-பகுதியில் இருப்பதாக எமக்குத் தெரியவில்லை. கல்வியுடன் ஊடிய விளையாட்டில் ஈடுபடும் ஒருவர் தீய வழிகளில் பயணிக்காதிருக்க நல்ல கவசமாக விளையாட்டு அமைகின்றது என்பது அனுபவம்.

இதில் இவ்வாறான பயிற்சி முகாம்கள் ஊடாக தேசிய அணிக்கு வீரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்பதற்கு அப்பால், வீரர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய ஈடுபாடு இல்லை எனில் இது போன்ற பயிற்சி முகாம் என் சர்வதேச தரத்திலான பயிற்சி முகாம்கள் போல் அமைந்தாலும் அந்த இலக்கை அடைய முடியாது என்பதை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும்.பயிற்சியாளர்கள் உங்களை நெறிப் படுத்தலாம். அதற்கு மேல் எல்லாமே உங்கள் அர்ப்பணிப்பைப் பொறுத்தது. இதனை கிரிக்கெட் வளரவேண்டும் என்ற எண்ணம் கொண்டுள்ளோர் முதலில் புரிந்துகொள்ளவேண்டும்.

திறமை வாய்ந்த எந்தவொருவருக்கும் அந்தத் திறமைக்குரிய கௌரவம் நிச்சயம் அளிக்கப்படும். இதற்கு முத்தையா முரளிதரன், சனத் ஜெயசூரிய, மஹகரூப் போன்றோர் நல்லதொரு எட்டுக்காட்டு என்றே நான் நினைக்கின்றேன். ஏனெனில், அவர்கள் திற மையின் மூலமே அணியில் இடம்பிடித்தார்கள். அவர்களின் திறமை இனங்காணப்பட்டு வாய்ப்பளிக் கப்பட்டதன் மூலமே அவர்கள் இன்று பிறந்த ஊருக்கும், நாட்டுக்கும் பெருமை தேடிக் கொடுத்திருக்கின்றார்கள். சாதனையாளர்களாக எம்முன் வலம் வருகின்றார்கள். வளர்ந்து வரும் இளம் வீரர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றார்கள்.

எனவே, திறமையுள்ள ஒவ்வொருவருக்கும் அதற்குரிய கௌரவம், வாய்ப்பு நிச்சயம் இருக்கும் என்பதை என்னால் உறுதியாகக் கூறமுடியும். அதனைப் பயன் படுத்திக் கொள்வது அவரவரைப் பொறுத்தது.

விளையாடிய காலப்பகுதியில் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியதே மறக்க முடியாத ஒரு நிகழ்வு.

அதுவும் இந்திய அணியுடனான போட்டியில் முதல் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய நிலையில் இப்போட்டியில் நான் அடித்த அரைச் சதம் மற்றும் இறுதிப் போட்டி போன்றவை என் கிரிக்கெட் வாழ்வில் பசுமையான நினைவுகள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எஸ்.பி.)

# கிளிநொச்சி மாவட்ட மட்ட கராத்தே விஜயராஜின் மாணவர்கள் முதலிடம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட மட்ட கராத்தேப் போட்டியில் சென். சே விஜயராஜ் ஆசிரியரிடம் கராத்தே கலையை பயிலும் மாணவர்கள் ஐந்து தங்கம் உட்பட 20 பதக்கங்களைக் கைப்பற்றி முதலிடத்தைப் பிடித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி சதானந்தனின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இக்கராத்தேப் போட்டி கடந்த 16ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

திறந்த போட்டியாக நடைபெற்ற இக்கராத்தேப் போட்டியில் சண்டை மற்றும் காட்டாப் போட்டிகள் இடம்பெற்றது. இதில் ஐந்து தங்கம் உட்பட 20 இடங்களை சென்.சே விஜயராஜ் ஆசிரியரிடம் கராத்தே கலையைப் பயிலும் மாணவர்கள் கைப்பற்றியுள்ளதுடன் மாவட்டத்திலும் முதலிடத்தையும் பிடித்துள்ளனர். பதக்கம் வென்றவர்கள் மாகாண மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. பதக்கம் வென்ற வீரர்கள், நடுவர்கள், விருந்தினர்களுடன் நிற்பதைக் காணலாம். (எஸ்.பி.)

விளையாட்டுச் செய்திகள்

## மாகாண மட்ட கராத்தேப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் மாகாண மட்ட காரத்தேப் போட்டி அடுத்த மாதம் முற்பகுதியில் யாழ்ப் பாணத்தில் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மேற்படி திணைக்கள வட்டாரங்களிலிருந்து கிடைக்கப்பெறும் தகவல்கள் தெரிவிக் கின்றன.

இப்போட்டி அடுத்த மாதம் 7ஆம், 8ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதாகவும், இதில் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் பங்கு கொள்கின்றார்கள் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# வட மாகாண சபைத் தேர்தலுக்கான நிர்ப்பந்தங்களும் எதிர்பார்ப்புக்களும்

- சாலையூரான் -

வடக்கு மாகாண மட்டத்தில் அதன் எல்லைக்குள் வாழும் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை முழுமையாக பிரதிபலிக்க வேண்டுமெனக் கூறி அதற்கான மாகாண சபைத் தேர்தலை நடத்திவிட வேண்டும் என்பதில் தமிழ் தேசியத் தீவிரவாதிகளும் இப்போது ஆர்வமாக இருப்பதாக தெரிகிறது.

போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு முழு நாடும் அரசின் கட்டுப்பாட்டிற்கு கீழ் கொண்டு வரப்பட்டிருந்தாலும், தமிழ் மக்கள் மனங்களில் விதைக்கப்பட்டிருக்கும் அரசுக்கு எதிரான சமகால உணர்வலைகளைப் பயன்படுத்தி இந்த மாகாண சபைத் தேர்தலை எப்படியாவது வென்றுவிடலாம் என்பதே இவர்களின் எதிர்பார்ப்பாகும்.

இதற்கு வசதியாக இறுதிக் கட்டப் போரில் நடைபெற்ற போர்க் குற்றங்களுக்காக சர்வதேசத்தின் முன் அரசை பொறுப்புக்கூற வைக்கும் முயற்சியில் சிறு சிறு பலன்கள் கிடைத்தாலும் அவற்றை உணர்ச்சிகரமாகப் பிரசாரப் படுத்தி, அதன் மூலமான தமிழர் ஆதரவையும் பெற்றுக் கொண்டு விட வேண்டும் என்பதும் அவர்களின் குறியாக இருப்பதாகத் தெரிகிறது.

நடைபெற்று முடிந்த முப்பதாண்டு கால போரினது பாதிப்பை மூன்று வருட காலத்தில் அரசு முழுமையாக நிவர்த்தி செய்வது என்பது நடைமுறையில் இயலாத காரியம்.

தடுப்பிலிருக்கும் கைதிகளில் இன்னும் விடுவிக்கப்படாதோரின் பிரச்சினைகள், மீளக் குடியேறியும் இயல்பு வாழ்வுக்கு முழுமையாக திரும்புவதில் மக்கள் எதிர்கொள்ளும் நடைமுறைப் பிரச்சினைகள், பிந்தியதாக பாதுகாப்பு காரணங்களுக்காக காணிகளை பெற்றுக் கொள்ள அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளில் நிகழ்ந்துள்ள தவறுகள் இந்த தீவிரத் தேசியவாதிகளுக்கு வசதியாக அமைந்திருக்கின்றன.

இதனை விட அதிகரித்துள்ள எரிபொருட்களின் விலை, இதனைத் தொடர்ந்த பொருட்களின் விலை அதிகரிப்பும், இதன் பலனாக சுய முதலீட்டாளர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளையும் அரசுக்கு எதிராக வெளிப்படுத்தி வடக்கு மாகாண சபை நிர்வாகத்தை கைப்பற்றி விடலாம் என்பது இவர்களின் விருப்பமாக இருக்கிறது.

ஆனால், கைப்பற்றி அதை வைத்துக்கொண்டு என்ன செய்வார்கள் என்பதும் எல்லோருக்கும் தெரிந்ததுதான். அடுத்த தேர்தல் வரைக்கும் "ஒன்றும் சரிவராது" என்பதைச் சொல்லிக் கொண்டிருக்க அவர்களுக்குக் காரணங்கள் கிடைத்துக் கொண்டிருக்கும். எப்போதும் போல உணர்ச்சிகரமான எதிர்ப்புப் பேச்சுகளிலேயே காலம் கழித்துக் கொண்டிருக்கலாம்.

முன்னர், புலிகள் நிலைகொண்டிருந்த சூழலில் தேர்தல் விடயத்தில் எந்தத் தேர்தலாயினும் புலிகளின் ஒப்புதலின்றி அதில் பங்கு பெறுவது என்பது சாத்தியமற்ற ஒரு விடயம்.

ஆனால், உள்நாட்டில் புலிகளின் வலு முற்றாக செயலிழக்கப்பட்டிருக்கும் தற்போதைய நிலைமையும், தென்னிலங்கை சிங்கள சிறுபான்மை கட்சிகள் தமிழ் தலைவர்களுக்கு எதிராக குரல் எழுப்பும் தற்போதைய சூழலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைப் பொறுத்தவரை மிகவும் வசதியான ஒரு நிலைமையாகும்.

தற்போதைய நிலைமையில் வடக்கு மாகாணசபைத் தேர்தலின் வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இனநல்லிணக்கத்திற்கான முயற்சிகளை பரஸ்பரம் அரசுக்கும் தமிழ் தரப்புக்கும் இடையே எழாதவாறு பார்த்துக் கொள்வது இவர்களைப் பொறுத்தவரை மிக அவசியம்.

அந்தவகையில் நோக்கும் போது உள்நாட்டில் மட்டுமன்றி, வெளியேயும் நிலைமைகளை சாதகமாக்கிக் கொள்ளும் வாய்ப்பு இந்த தமிழ்த் தீவிரத் தேசிய வாதிகளுக்கு தற்சமயம் இருப்பதாகவே தென்படுகிறது.

சிங்கள பேரினவாதிகளால் மட்டுமன்றி தமிழ் இனவாதிகளாலும் முடுக்கிவிடப்பட்ட தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தால் கடந்த மூன்று தசாப்த காலத்தில் இத் தமிழ் தேசியத் தீவிரவாதிகள் தமது அணிசார்ந்து தமக்கான நலன்களை கூட்டாக பேணிக் கொள்வதில் பல இடர்களை சந்தித்து வந்திருக்கின்றனர்.

பிந்தியதாக தமது இருப்பையும் வாழ்வையும் கூட உள்நாட்டில் சுமுகமாக நகர்த்திச் செல்வது இத் தமிழ் தலைவர்களுக்கு சிரமமாக போய்விட்டிருக்கும் நிலையில் வடக்கின் நடுநிலை அணியினர் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களும் அரசியலில் பிரவேசிக்கும் வாய்ப்புக்கள் இப்போது உருவாகியிருப்பது இவர்களுக்கு அச்சம் தருவதாக இருக்கிறது.

அதுமட்டுமன்றி இதுவரை நடைபெற்ற தேர்தல்கள் மூலம் பெற்றுக் கொண்ட நாடாளுமன்ற ஆசனங்கள் அவர்களின் பாதுகாப்பையும் சொந்த வாழ்வின் முன்னேற்றத்தையும் போதுமான அளவிற்கு உறுதிப்படுத்துவதாக அமையவில்லை என்பதும் தீராப்பிரச்சினையாக அவர்களின் மனதை எப்பொழுதும் அலைக்கழிக்கும் ஒரு விடயமாக அவர்களைத் தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

இந்த நிலையில் வடக்கு மாகாணசபையை அதுவும் வெளிச்சக்திகளின் ஒத்தாசையுடன் கைப்பற்றுவது தமது நீண்டகால எதிர்கால நலன்களை பேணிக்கொள்ளும் வாய்ப்பாக அமையும் என்பது இவர்களின் எதிர்பார்ப்பாகும்.

இறுதியாக நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர், தமிழ் மக்களது பகுதிகளில் அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்த உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் நலனோம்பு திட்டங்களால் அரசிற்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுப்பதில் நெருக்கடிகளை சந்தித்து வந்த தேசியத் தீவிரவாதிகளுக்கு இப்போது படையினரின் காணி சுவீகரிப்புக்கு எதிரான பிரசாரங்கள் வசதியாக கைகொடுத்திருக்கின்றன.

வடக்கு மாகாணசபைக்கு தேர்தலை நடத்த வேண்டுமென்ற வெளி அழுத்தங்களும் தற்போது அதிகரித்துள்ள நிலையில், இந்த ஆண்டுக்குள் இத்தேர்தல் நடைபெறலாம் என்ற எதிர்பார்ப்புகளும் இப்போது அதிகரித்துள்ள[illegible]

இவ்வாறானதொரு சூழலில் குடாநாட்டில் அரசுக்கெதிராக நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் மேலும் வலுவாக நடைபெறுவதற்கான சூழலை தீவிரப் படுத்துவதுடன் இப் போராட்டங்களுக்காக தாம் அடிவாங்குவதையும் சிறை செல்வதையும் நோக்காகக் கொண்டும் இத் தேசியத் தீவிரவாதிகள் இனி செயற்பட(?) ஆரம்பிப்பார்கள் என நாம் எதிர்பார்க்கலாம்.

கரகாட்டக்காரன் வாழைப்பழ காமெடியை தமிழ்கூறும் நல்லுலகம் இன்னும் ஒரு கால் நூற்றாண்டுக்காவது மறக்காது என்பது திண்ணம். அந்த நகைச்சுவையை எழுதியவர் ஏ.வீரப்பன்.

டணால் தங்கவேலு, நாகேஷ், தேங்காய் சீனிவாசன் காலத்திலிருந்து இவருடைய நகைச்சுவை தமிழ் சினிமாவில் வயிறு குலுங்க வைத்திருக்கிறது, மனது நிறைய வைத்து வந்துள்ளது. சமீபத்திய காலங்களில் கவுண்டமணி, செந்தில் டைப் காமெடி என்று ஒரு பெயர் ஏற்படுத்திய காமெடி இவருடையதுதான். எனக்குத் தெரிந்து வடிவேலு, விவேக் காலம் வரை இவருடைய நகைச்சுவை தொடர்ந்து கொண்டிருந்தது.

இவருடைய நகைச்சுவை படம் நெடுக்க தொடர்புடைய நகைச்சுவையாக இருக்கும். அங்கங்கே தனித்தனியாகக் கட்டித் தொங்கவிட்ட சிரிப்புத் தோரணமாக இருக்காது.

# அவருதாம்பா இவரு!



ஒரு படத்தில் கவுண்டமணி மரத்துக்கு மரம் சாமி படம் போட்டு உண்டியல் கட்டி தினமும் அலுவலகம் வருகிற மாதிரி வந்து கலெக்ஷன் செய்துகொண்டு போவார். முதலில் நடந்து வருவார். பிறகு சைக்கிள், டி.வி.எஸ். 50 என்று கடைசியில் காரில் வந்து கலெக்ட் செய்வதுவரை போகும் அந்த காமெடி. மெல்லிய சமூக அங்கதம் கலந்த அவை படம் ஆரம்பித்ததும் ஆரம்பித்து படம் முடிவதற்கு சற்று முன்பு வரை நம்மை தொடர்ச்சியாக பங்கெடுத்துச் சிரிக்க வைக்கும்.

ருத்ரதாண்டவம் என்ற படம் இவர் கதை வசனத்தில் வெளியான மிகவும் முக்கியமான படம். கடவுள் பூமிக்கு வந்து அவருடைய பார்வையில் சமூகப் பிரச்சினைகளை அலசியிருப்பார். பொதுவாக அவருடைய எல்லா நகைச்சுவையிலும் சமூகப் பிரச்சினை உருளும். ஒரு படத்தில் கவுண்டமணி தேங்காயில் பாம் வைத்துவிட்டதாகப் புரளி கிளப்பிவிட நாடு முழுக்க தேங்காய்கள் உடைக்கப் படாமல் தேங்கிக் கிடப்பதாகச் சொல்லியிருப்பார். பணத்துக்கு ஆசைப்பட்டு ஊமையனாக நடிப்பார் ஒரு படத்தில் கவுண்டமணி. ஆனால் அவருக்கு இளையராஜாவின் இசையில் பின்னணி பாட வேண்டும் என்பதாக ஆசை இருக்கும். இப்படி நிறைய சொல்லலாம்.

ஒருநாள் காலை வண்ணத்திரை அலுவலக பாதுகாப்பு அலுவலர் என்னைத் தொடர்பு கொண்டு வீரப்பன் என்பவர் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார் என்று சொன்னபோது நான் இவரை எதிர்பார்க்கவில்லை.

தட்டுத் தடுமாறி அறைக்குள் வந்தார். கைத்தாங்கலாக அவரை ஒருவர் அழைத்து வந்திருந்தார். முள்ளென முளைத்திருந்த சிறிய தாடியினாலும் பார்வை தெரியாதவராக இருந்ததாலும் அவரை சட்டென நான் அடையாளம் காண முடியவில்லை. உடன் வந்தவர்தான் அறிமுகம் செய்தார். எத்தனையோ காமெடி நடிகர்களை ஆளாக்கிவிட்ட இவரை இப்போது யாரும் கண்டுகொள்வதே இல்லை என்று உடன் வந்தவர் வருந்தினார்.

ஏ.வீரப்பன் கையை உயர்த்தி "இருக்கட்டும் இருக்கட்டும் அதனாலென்ன?" என்பது போல சைகையால் சொன்னார்.

"உங்கள் பத்திரிகையில் ஏதாவது நகைச்சுவைத் தொடர் எழுத முடியுமா என்று தெரிந்து கொள்வதற்காகத்தான் வந்தேன்" என்றார்.

"தாராளமாக எழுதுங்கள்" என்றேன்.

"நான்கு அத்தியாயங்கள் எழுதி அனுப்புகிறேன். பார்த்துவிட்டு முடிவு செய்யுங்கள்"

சினிமாவில் கிடைக்கும் சம்பாத்தியம் போல பத்திரிகையில் கிடைக்காது. அவர் ஒரு படத்துக்கு எழுதுவதை அவர் ஒரு வருடமெல்லாம் பத்திரிகையில் எழுதினாலும் சம்பாதிக்க முடியாது என்பதைத் தெரிவித்தேன்.

"அது தெரியும்" எனச் சொல்லிவிட்டுக் கிளம்பினார். மனசு நகைச்சுவைக்கு இடம் தருவதாக இருந்தாலும் வயது இடம் தராத நிலைமை அவருக்கு. பார்வையில்லாமல் தடுமாற்ற நடையில் இன்னொருவர் துணையோடு நடந்து கொண்டிருக்கும்போது அவருடைய நகைச்சுவையின் முகம் மாறிப்போய்விட்டதை உணர முடிந்தது.


அவர் போன பிறகு அலுவலக ஊழியர்கள் யார் அவர் என்று விசாரித்தார்கள். அவரைப் பற்றிச் சொன்னேன்.

"அவரா இவரு?" என்று ஒருவர் ஆச்சர்யப்பட்டார்.

இன்னொருவர் வாழைப்பழ காமெடியின் தொனியிலேயே "அவர்தாம்பா இவரு" என்றார். எல்லோரும் சிரித்தனர்.


நகைச்சுவை என்பது இன்னொருவரை செல்லமாகப் புண்படுத்துவது என்று சொல்லுவார்கள். சுமார் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக சிரிப்பு உற்பத்தி செய்து கொண்டிருந்தவர் இன்று இன்னொருவர் கைத்தாங்கலாக வந்து வாய்ப்பு கேட்டபோது வருத்தமாக இருந்தது. நான் சிரிக்கவில்லை.

## சாமர்த்தியம்



அமெரிக்காவைச் சேர்ந்த நகைச்சுவை ஆசிரியர் மார்க் ட்வெயின், அவரது நண்பர் இருவரும் ஒரு கப்பலில் பயணம் செய்தார்கள். கப்பல் அதிகாரிகள் அவர்களுக்கு ஒரு சிறப்பு விருந்து அளித்து அவர்களைப் பேசச் சொன்னார்கள். மார்க் ட்வெயின் முதலில் பேசினார்: அரைமணி நேரம் தொடர்ந்து பேசினார். அவரது பேச்சு பெரும் ஆரவாரத்துடன் கை தட்டலைப் பெற்றது. பிறகு அவர் நண்பர் பேச எழுந்தார். "அன்பர்களே! நானும் மார்க் ட்வெயினும் இந்த விருந்துக்கு வரும்போது ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டோம். பேச்சுகளைப் பரிமாறிக் கொள்வதாக. அதன்படி, நான் தயாரித்த பேச்சை அவர் பேசி முடித்துவிட்டார். நீங்கள் அதைக் கை தட்டி வரவேற்றது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. மார்க் ட்வெயின் தயாரித்து என்னிடம் பேசத் தந்த குறிப்புகள் தொலைந்து போய்விட்டன. எனவே, அவர் பேச நினைத்ததை நான் பேச முடியாமல் போனதற்காக மிகவும் வருந்துகிறேன்" என்று கூறிவிட்டு அமர்ந்தார். இப்போது கை தட்டல் இன்னும் பலமடங்கு ஓங்கி ஒலித்தது!

## இலாபத்தில் பங்கு



கதாசிரியர் ரூட்யார்ட் கிப்ளிங்குக்கு அமெரிக்கர் ஒருவர் கடிதம் எழுதினார். "நீங்கள் எழுதும் ஒவ்வொரு வார்த்தையும் ஒரு டொலர் மதிப்புள்ளது என்று அறிகிறேன். நான் இத்துடன் ஒரு டொலர் நோட்டு அனுப்பியுள்ளேன். எனக்கு ஒரு வார்த்தை எழுதி அனுப்பவும்".

கிப்ளிங், அவர் அனுப்பிய ஒரு டொலரை எடுத்துக்கொண்டு, "நன்றி" என்று கடிதம் எழுதிப்போட்டார். ஒரு வாரம் கழித்து அமெரிக்கர் பதில் எழுதினார். "நீங்கள், நான் அனுப்பிய டொலருக்கு பதிலாக "நன்றி" என்று ஒரு வார்த்தை அனுப்பிய விஷயத்தை நான் துணுக்காக எழுதி ஐந்து டொலர் சம்பாதித்துவிட்டேன். நான் முதலில் அனுப்பிய ஒரு டொலர் போக, எனக்கு நாலு டொலர் இலாபம். அதில் பாதி இரண்டு டொலரை இலாபத்தில் பாதியாக உங்களுக்கு அனுப்பியிருக்கிறேன் பெற்றுக்கொள்ளுங்கள்"!

# புதிய தவளைகள்!



இந்தியாவில் இதுவரை கண்டறியப்படாத 12 புதிய வகை தவளையினங்களை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். தவிரவும் அழிந்துவிட்டதாக கருதப்பட்டு வந்த வேறு 3 தவளையினங்களையும் இவர்கள் மறுபடியும் கண்டுபிடித்துள்ளனர். தென்னிந்தியாவில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் காடுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்தப் புதிய தவளையினங்கள் மிகவும் அரிதானவை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பூனை போல மியோவ் என்று ஒலியெழுப்பக்கூடிய இரவில் வேட்டையாடும் தவளையினம், ஒரு கிரிக்கெட் பந்து அளவுக்கு வளரக்கூடிய கேரளத்தின் வயநாடு பகுதியில் காணப்படும் இரவில் வேட்டையாடும் தவளையினம் உள்ளிட்டவை புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள தவளையினங்களில் அடங்கும். ஸுடாக்ஸா என்ற சர்வதேச அறிவியல் சஞ்சிகையில் இந்தக் கண்டுபிடிப்புகள் பற்றிய ஆய்வுக் கட்டுரை வெளியாகியுள்ளது.

# இதய நோயும் பர்மா பாம்பும்



பாம்பின் இரத்தத்திலிருந்து எடுக்கப்படும் இரசாயனப் பொருட்களால் இதய நோய்களைக் குணப்படுத்த முடியலாம் என்று ஆய்வாளர் ஒருவர் கருதுகிறார். அதுவும் சாதாரணப் பாம்பெல்லாம் இல்லை. பர்மாவின் மலைப் பாம்புகள் (பர்மீஸ் பைத்தான் பாம்பு). அவற்றைக் குறித்த விவரணை நம்மை மலைக்க வைக்கிறது. ஒரு வருடம் கூட இவற்றால் பட்டினி கிடக்க முடியுமாம். 300 இறாத்தல் இறைச்சியை அதால் விழுங்கி விட முடியும், அதை சில நாட்களில் ஜீரணிக்கையில் அதன் இதயத்தின் தசைகள் (muscle) 40 வீதம் அதிகரிக்கின்றனவாம். இன்னும் அதிசய விவரங்கள் இந்த ஆய்வாளரின் கட்டுரையில் உண்டு.

இதன் இரத்தத்திலிருந்து பிரிக்கப்பட்ட மூன்று அமிலங்கள்தான் இந்தப் பாம்புகளின் அசாதாரண சக்திக்குக் காரணம். அவ்வளவு கொழுப்பை அத்தனை துரிதமாக ஜீரணிக்கவும், அதற்குத் தேவையான பிராணவாயுவைப் பெற்று எரித்து அதைத் தன் இதயத்தின் வழியே பயன்படுத்தவும் இந்தப் பாம்பால் முடிகிறது என்பதற்கு இந்த மூன்று அமிலங்களின் கலவைதான் காரணம் என்கிறார் ஆய்வாளர் - a mixture of myristic acid, palmitic acid, and palmitoleic acid ஆகியன இந்த அமிலங்கள்.

லெஸ்லி லைன்வண்ட் (Leslie Leinwand) என்னும் இந்தப் பெண் உலகில் ஏராளமானவர் இதயங்களில் எதிர்காலத்தில் வீற்றிருப்பார் என்று தோன்றுகிறது. இவர் சுட்டும் பாதை உண்மையிலேயே இதயத் தசைகளை மிக வலுப்படுத்த உதவும். இந்த அமிலங்களைக் கொண்டு ஒரு மாத்திரை அல்லது திரவத்தைத் தயாரித்து அது மனித இதயங்களுக்கு உதவ வேலை செய்து விட்டால், இதய நோய் என்பதை இல்லாமல் ஆக்கி விடலாம் என்பதோடு, உலகில் உள்ள பல பந்தயக்காரர்களுக்கு விளையாட்டரங்கில் பிரமாதமான வேகம், திறன், வலு எல்லாம் கிட்டவும் வாய்ப்புண்டு.

பாம்பிடம் இருந்து பெறும் அறிவைப் பெரும் நாசம் என்று அறிவிக்கிறது மேற்கத்திய மதம். பாம்பைக் கழுத்திலும், மெத்தையாகவுமே வைத்திருப்பது இந்தியப் புராண மதங்கள் என்று நினைத்தால் சற்று வேடிக்கையாகவே இருக்கிறது.

ஏற்கனவே இந்தியாவில் பாம்பின் விஷத்திலிருந்து பெறும் மருந்தொன்றை வைத்து இரத்த அழுத்தத்திற்கு மருந்து தயாரிக்கிறார்கள் என்பது நாம் கேள்விப்பட்டிருக்கும் ஒரு விஷயம்தான். இப்போது வேறு சில மிருகங்களிடம் இருந்தும் இத்தகைய மருந்துகளைப் பெற முடியும் என்று நம்புகிறார்கள்.

ஹீலா மொன்ஸ்டர் எனப்படும் உடும்பு போன்ற ஒரு மிருகத்தின் எச்சிலிலிருந்து கடும் விஷங்கள் பிரித்தெடுக்கப்பட்டு அவற்றில் சில சுத்திகரிக்கப்பட்டு, மனிதர் நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றன. 2005 இல் ஒரு மருந்து நீரிழிவு நோய் வகை ஒன்றிற்குப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டதாம். மேலும் பல மருந்துகள் சோதனையில் இருக்கின்றன.

டராண்டுலா எனப்படும் சிலந்தி வகைப் பூச்சிகளின் விஷத்தில் தசை அழிப்பு நோயான மஸ்குலர் டிஸ்ட்ரோ∴பி எனப்படும் நோயைத் தடுக்கக் கூடிய இரசாயனப் பொருட்கள் உள்ளன என்று ப∴பலோ பல்கலை ஆய்வாளர்கள் கண்டிருக்கிறார்கள். இரத்தம் உண்ணும் வௌவால்களும் இத்தகைய மருந்துகளுக்கு இருப்பிடமாக இருக்கும் என்றும் தெரிகிறது.

# எகிப்தின் அரசியல்நிலை மீண்டும் கேள்விக்குள்ளாகிறது!

- பி.எம்.புன்னியாமீன் -

2011 எகிப்திய மக்கள் புரட்சியின் பின்பு கடந்த 16ஆம், 17ஆம் திகதிகளில் நடைபெற்ற எகிப்திய ஜனாதிபதித் தேர்தலில் இஹ்வான்களது வேட்பாளர் கலாநிதி முர்ஸி வெற்றி பெற்றுள்ளதாக அவரது பிரசார அலுவலகம் அறிவித்துள்ளது. கலாநிதி முர்ஸி 52.50 வீதமான வாக்குகளை பெற்றுள்ளதாகவும், போட்டியாளரான அஹ்மத் சபீக் 47 வீத வாக்குகளைப் பெற்றுள்ளதாகவும் முர்ஸியின் பிரசாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதே நேரம் இந்த தேர்தலில் தாமே வெற்றிபெற்றதாக எதிர்த்து போட்டியிட்ட அஹமட் சபீக் குறிப்பிட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கின் அரசில் பிரதமராக இருந்த அஹமட் சபீக்கின் தேர்தல் பிரசார அலுவலகம் விடுத்துள்ள அறிவிப்பில் தமது கணக்கெடுப்பில் அஹமட் சபீக் 52 வீதமான வாக்குகளை வென்றிருப்பதாகவும் முர்ஸி ஆதரவாளர்கள் மில்லியன் கணக்கான வாக்கு அட்டைகளை எண்ண தவறிவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளது.

எகிப்து ஜனாதிபதி தேர்தலின் உத்தியோகபூர்வ முடிவுகள் வியாழக் கிழமை (21) வெளியிடப்படப்படுமென கூறப்பட்டது. இருப்பினும் முடிவை அறிவிப்பதை தேர்தல் அலுவலகம் ஒத்திவைத்துள்ளது. இதனால் எகிப்தில் அரசியல் நெருக்கடி மேலும் தீவிரமடைந்துள்ளது. தேர்தல் முறை கேடுகள் குறித்து விசாரணைகள் நடத்தப்படுவதால் இறுதி முடிவை அறிவிப்பதற்கு மேலும் கால அவகாசம் தேவை என தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

சுயாதீன கண்காணிப்பாளர்கள் மற்றும் அரசு ஊடகம் பெரும்பாலான சுயாதீன ஊடகங்கள் மொஹமட் முர்ஸி மூன்று அல்லது நான்கு வீத வாக்கு வித்தியாசத்தில் வென்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளன. அல்ஜெஸீரா செய்தியில் முர்ஸி 52.50 வாக்குகள் பெற்றுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளது. ஸலபிக்களின் கட்சியான அந்-நூர் கட்சியின் உத்தியோகபூர்வ பேச்சாளர் நாதர் பாக்கர் தனது டுவிட்டர் செய்தியில் கலாநிதி முர்ஸியின் வெற்றி முழு எகிப்திய மக்களின் வெற்றியாகும் எனத் தெரிவித்திருந்தார். உலகெங்கிலுமுள்ள இஸ்லாமியவாதிகள் இந்த வெற்றியால் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை தனது பிரசார அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய கலாநிதி முஹம்மத் முர்ஸி, “இது எல்லா எகிப்தியர்களுக்குமான வெற்றியாகும். நாம் சமாதானத்தின் செய்தியையே கொண்டுவந்தோம். புரட்சியில் சஹீதானவர்களது குடும்பத்திற்கு, அவர்களது சட்ட ரீதியான உரிமை கிடைக்கும் என நான் உறுதிப்படுத்துகிறேன். நவீன சிவில் அரசாங்கம் ஒன்றை அமைப்பதே எமது முதன்மையான பணி. கிறிஸ்தவர்களது அடிப்படை உரிமைகள் மதிக்கப்படும். அவர்களைப் பழிவாங்கும் எண்ணம் எமக்கில்லை” எனவும் தெரிவித்தார். இதன்பின்னர், “சுதந்திரமான புரட்சியாளர்களது வெற்றி தொடரும். இராணுவ ஆட்சி வீழட்டும்” என ஆதரவாளர்கள் கோஷம் எழுப்பினர்.

அதே நேரம் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பை பெரும்பான்மையாகக் கொண்ட எகிப்து நாடாளுமன்றம் இராணுவ கவுன்ஸிலால் கடந்த வெள்ளிக்கிழமை கலைக்கப்பட்டது. தேர்தல் முடிவுகள் கசிவதற்கு முன்னர் தேர்தல் மூலம் தேர்வு செய்யப்பட்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தி நாட்டின் முழு அதிகாரங்களையும் தன்னிடம் தக்க வைக்கும் வகையிலான இடைக்கால அரசியல் அமைப்பொன்றை அறிவித்துள்ளது. இதன்படி இராணுவ கவுன்ஸிலுக்கே முழு அதிகாரமும் உள்ளதாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இடைக்கால அரசியலமைப்பின் படி எகிப்தில் புதிய நாடாளுமன்றம் அமைக்கப்படும் வரை சட்டங்கள் எழுதுவது மற்றும் வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கும் அதிகாரம் இராணுவ கவுன்ஸிலின் கைவசம் இருக்கும். இராணுவ கவுன்ஸில் அரசியல் அமைப்பு குழுவை நியமித்து நிரந்தர அரசியல் அமைப்பு வரையப்படும். அதனைத் தொடர்ந்து அது மக்கள் கருத்துக்கணிப்புக்கு விடப்படும். புதிய அரசியல் அமைப்பு நிறைவேற்றப்பட்டு ஒரு மாதத்திற்குள் நாடாளுமன்ற தேர்தல் நடத்தப்பட வேண்டும் போன்ற அம்சங்கள் உள்ளடங்கியுள்ளன.



இந்த இடைக்கால அரசியலமைப்பை நோக்குமிடத்து எகிப்தில் ஹொஸ்னி முபாரக் அரசு கவிழ்க்கப்பட்டதன் பின் ஜெனரல்களைக் கொண்டு அமைக்கப்பட்ட இராணுவ கவுன்ஸிலின் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் ஒன்றாகவே புலப்படுகின்றது. இந்த இடைக்கால அரசியல் அமைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு இது சட்டத்திற்கு முரணானது என தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

எகிப்து மக்களால் தேர்வுசெய்யப்பட்ட சிவில் அரசிடம் முழு அதிகாரத்தையும் வழங்குமாறு ஆளும் இராணுவ கவுன்ஸிலுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்துள்ளதாக ராய்ட்டர் மற்றும் சி.என்.என் செய்திகள் தெரிவித்துள்ளன. அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் பில்லியன் டொலர் கொண்ட எகிப்துக்கான இராணுவ மற்றும் சிவில் உதவிகள் குறித்து மீள் பரிசீலனை செய்ய வேண்டி வரும் எனவும் அமெரிக்கா எச்சரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அமெரிக்காவின் மேற்படி அறிவிப்பு இராணுவ கவுன்ஸிலுக்கு நெருக்கடிகள் ஏற்படலாம் என எதிர்பார்க்கலாம்.

அமெரிக்காவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த பிராந்திய நட்பு நாடான எகிப்தில் கடந்த ஆண்டு ஏற்பட்ட ஹொஸ்னி முபாரக் அரசுக்கு எதிரான மக்கள் எழுச்சிக்கு பராக் ஒபாமா நிர்வாகம் ஆதரவளித்திருந்தது. எனினும் எகிப்தில் இஸ்லாமிய அமைப்பான முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் வளர்ச்சி குறித்து அமெரிக்கா கவலையடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டில் இடம்பெற்ற எகிப்திய புரட்சி முஸ்லிம் உலக நாடுகளின் ஒருவித விழிப்புணர்வினை ஏற்படுத்தியது உண்மைதான். ஆனாலும் புரட்சியில் ஏற்பட்ட வெற்றிகள் சில மேற்கத்திய சக்திகளினால் தமக்கு சார்பான வகையில் திருப்பிக் கொள்ள மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவுகளாகவே இராணுவ நிர்வாகத்தின் செயற்பாடுகள் ஆய்வாளர்களினால் கருதப்படுகின்றது. எவ்வாறாயினும் தற்போதைய நிலையில் மக்களின் ஆதரவிற்கு இராணுவ நிர்வாகம் ஒத்துழைப்பினை வழங்காவிடின் சர்வதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் நெருக்கடிகளை சந்திக்க நேரிடும் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும்.

இவ்விடத்தில் இராணுவ கவுன்ஸிலுக்கு எதிராக முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது. “மில்லியன் மனிதர்களின் ஆர்ப்பாட்டம்” என இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அந்த அமைப்பு பெயர் சூட்டியுள்ளது. எனவே எகிப்தின் ஸ்திர அரசியல் நிலை மீண்டும் கேள்விக்குறியாகியே உள்ளமை அவதானிக்கத்தக்கது.

# பிரிட்டன் - 2012

பொதுவாக வசந்த மற்றும் வேனிற்காலங்கள் பிரிட்டனின் சுவாரசிய பருவங்கள். இருண்ட குளிர் காலத்திலிருந்து மெல்ல மெல்ல வெளிச்சக் கதவுகள் திறக்கும் பருவங்கள் (கொஞ்சம் கொஞ்சமாகத்தான், அவ்வப்போதுதான்). Daffodil எனப்படும் மஞ்சள் பூக்களும் Blue Bell எனப்படும் நீலப்பூக்களும் இன்னும் பல பெயர் தெரியாத பூக்களும் தோகை விரித்து படரும் பருவங்கள். இந்த

**ஒரே ஒருதரம் உலகக் கோப்பை வென்றிருக்கிறார்கள், 1966. அதுவும் ஒரு சர்ச்சைக்குரிய கோலுடன். அதற்கப்புறம் ஒவ்வொரு உலகக் கோப்பைக்கும் நம்பிக்கையோடு போவார்கள். பரிதாபமாக தோற்று, பற்பல காரணங்களைக் காட்டி ஊர் திரும்புவார்கள். எனக்கு ஆச்சரியமாக இருக்கும், என்ன நம்பிக்கையில் இவ்வளவு வீரவசனம் பேசுகிறார்கள் என்று! தோற்ற இரவு போஸ்ட் மோர்ட்டம் நடக்கும். அடுத்த நாள்- ஜோக்கடித்துக் கொண்டே (அடுத்த தடவை கண்டிப்பாய் நமக்குதான்) வேறு வேலை பார்க்கப் போய்விடுவார்கள்.**


பருவங்களையெல்லாம் இங்கு இருந்து அனுபவிப்பதை விட்டுவிட்டு இந்த பிரிட்டிஷ்காரர்கள் என்னத்தைத் தேடி உலகம் முழுவதும் அலைந்து கொண்டிருந்தார்கள் என்று வியப்பளிக்க வைகக்கூடிய பருவங்கள். (பதில் பின்னால் வரும் இலையுதிர்காலத்திலேயே தெரிந்துவிடும்!)

**வழக்கமான விம்பிள்டன்.**

வருடாவருடம் ஜூலை மாதம் இரு வாரங்கள் இந்த The championship திருவிழா. இடையிடையே மழை வந்து விசாரித்துவிட்டுப் போகும்.

இங்கிலாந்துக்காரர்கள் ஒரு மாதிரி சேட் சுகவாசிகள். உலகம் முழுவதும் இருக்கும் திறமையான விளையாட்டு வீரர்களை அவர்கள் ஊரில் கூட்டி வைத்து ஸ்ரோபெர்ரியும் கிரீமையையும் கலந்து சாப்பிட்டுக்கொண்டே விளையாட்டை இரசிப்பார்கள்- இங்கிலிஷ் பிரிமியர் லீக் ஒரு உதாரணம்.. ஆனால் உள்ளூர்க்காரர்கள் உள்ளே இறங்கி ஆடி விம்பிள்டன் கப்பை வென்று வருடங்களாகின்றன. பெர்ரி என்பவர்தான் விம்பிள்டன் கப்பை வெற்றிகொண்ட கடைசி பிரிட்டிஷ்காரர் - வருடம் 1936 (இவர் லான் டென்னிஸில் மட்டுமல்ல, டேபிள் டென்னிஸிலும் உலகச் சம்பியன்).

சமீபத்தில் கொஞ்ச நாள் டிம் ஹென்மென்னை நம்பிக் கொண்டிருந்தார்கள். அவர் கொஞ்சம் பிரபலமாக இருந்தார். அப்புறம் அவ்வளவுதான், ரிட்டயர்மெண்ட் அறிவித்து தன் தோல்வியை ஒத்துக் கொண்டு விட்டார். இப்போது இருக்கிற ஒரே நம்பிக்கை முரேதான். ஸ்கொட்டிஷ்காரராக இருந்தாலும் வேறுவழியில்லை. திறமையானவர். மனதிற்குள்



ஸ்கொட்லாந்தில் பால கறந்து கொண்டிருந்த பையனெல்லாம் என்று கிண்டல் செய்து கொண்டே வெளியில் நம்பிக்கையோடு இருக்கிறார்கள். அவரும் கலரியிலிருக்கும் அம்மாவைப் பார்த்து பம்மிக்கொர்ண்டே நம்பிக்கைப்பால் வார்த்துக் கொண்டிருக்கிறார்.

இப்போது ஃப்ரென்ச் ஓபனில் இடுப்பைப் பிடித்துக்கொண்டே தட்டுத்தடுமாறி குவார்ட்டர் பைனல் வரை வந்து பின் ரிசர்வ் பெட்ரோலும் தீர்ந்து போன பைக்காய் நின்றுவிட்டார். பார்க்கலாம், இந்த வருட விம்பிள்டனில் எத்தனை ரவுண்ட்கள் தாங்குவார் என்று.

கால்பந்திலும் இதே கதைதான். ஒரே ஒருதரம் உலகக் கோப்பை வெனறிருக்கிறார்கள், அதுவும் 1966. அதுவும ஒரு சர்ச்சைக்குரிய கோலுடன். அதற்கப்புறம் ஒவ்வொரு உலகக் கோப்பைக்கும் நம்பிக்கையோடு போவார்கள். பரிதாபமாக தோற்று, பற்பல காரணங் களைக்காட்டி ஊர் திரும்புவார்கள். மனேஜருக்கு கெட்டித்தோல் வேண்டும்.

எனக்கு ஆச்சரியமாக இருக்கும், என்ன நம்பிக்கையில் இவ்வளவு வீரவசனம் பேசுகிறார்கள் என்று! தோற்ற இரவு போஸ்ட் மோர்ட்டம் நடக்கும். அடுத்த் நாள் ஜோக்கடித்துக் கொண்டே (அடுத்த தடவை கண்டிப்பாய் நமக்குதான்) வேறு வேலை பார்க்கப் போய் விடுவார்கள்.

இந்த வருட நம்பிக்கை Euro 2012. புது மனேஜர். இதற்கு முன்னர் இருந்த இத்தாலித் தாத்தா இதோ ஏதோ செயயப்போகிறார் என்று எல்லாரும் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவரும கணக்கு வாத்தியார்களுக்கே உரிய கடுமையான கண்ணாடிப் ப்ரேமை மாட்டிக்கொண்டு சைட் லைனில் நின்று கொண்டு வருடக்கணக்காய் டிமிக்கி கொடுக்கும் கடனாளியைப் பார்த்து உணர்ச்சி வசப்படுவது போல் உணர்ச்சி வசப்பட்டுக் கொண்டிருந்தார். இவரது ஆங்கிலமே கேள்விக்குறி. இந்த இலட்சணத்தில் என்ன கத்தியிருப்பார், யாருக்கு புரிந்திருக்கும் ஹம்ஹூம், ஒன்றும் வேலைக்காகவில்லை. திடீரென ஒரு மதிய செய்தியில் தலை காட்டி சொந்த ஊருக்கே போய்விட்டார்.

அணியில் சேம்பர்லின், வோல்கொட், வெல்பெக் போன்ற நம்பிக்கைச் சிறார்கள் எட்டு வருடங்களுக்கு முன் Euro 2004இல் விளையாடும்போது ரூனிக்கு பதினெட்டு வயதுதான் (எத்தனையாவது வயதிலிருந்து சம்மர் சோல்ட் அடிக்கத் தொடங்கினார்?) அன்றும் முதல் மாட்சிலேயே ப்ரான்ஸுடன் மோதல். லாம்பார்ட் முதல் பாதியில் கோல் அடித்து இங்கிலாந்து கடைசி விசிலுக்கு கொஞ்சம் முன்னால் வரை முன்னால் இருந்தது. நாட்டிலுள்ள எல்லா மது பானக்கடைகளிலும் ரஜினி பட முதல் நாள் சத்தம்.

தொண்ணூறாவது நிமிடத்தில் சிடானே அற்புத ப்ரீ கிக் அடித்தார். சத்தங்கள், கொண்டாட்டங்களில் ஒரு பேஸ் போய விட்டது. தொண்ணூற்று மூன்றாவது நிமிடத்தில் பெனால்டி, இன்னொரு கோல்' இப்போது எல்லா பேஸ்களும் போய் மயான அமைதி' இங்கிலாந்திற்கென ஒரு இராசி இருக்கிறது!

இந்த வருடம் இரண்டாவது மாட்சில் ஸ்வீடனுடன் கிட்டத்தட்ட இதே கதைதான் ஆறடி மூன் றங்குல கரோலின் சரியான ஹெட்டர் மூலம் இங்கிலாந்து முன்னிலையில் இருந்தது. பாதிநேர இடை வெளியில் எல்லாரும் பல்லெல்லாம் வாயாக உள்ளே சென்றார்கள். சுவாரசிய தகவல்களை மேய்ந்துவிட்டு வருவதற்குள் (யார் ஜனாதிபதி?) இரண்டாவது பாதி ஆரம்பித்து ஸ்வீடன் இரண்டு கோல்களும் போட்டுவிட்டார்கள்! இங்கிலாந்து அணியில் வழக்கமான பீதி' ஜெய்ஸ்வீடன்!

புது மனேஜர் ஒரு உருப்படியான காரியம், அதுவும் தாமதமில்லாமல் செய்தார்.



தியோ வோல்கொட்டை களமிறக்கினார். இந்த இளைஞர் ஒரு அற்புத ஆர்சனல் அணிக்காரர்./பொரெ ஸ்ட் கம்ப் (Forest Gump) ரேஞ்சிற்கு படு வேகமாய் ஓடுவார் (என்ன, பந்துடன்). சிறிது நேரத்தில் பதட்டமே இல்லாமல் ஒரு தெளிவான ஹிட். பந்து ஸ்வீடிஷ் கோல் கீப்பரை ஊடுருவிச் சென்றது. அடுத்த பதினாலாவது நிமிடத்தில் 'ரன் ஃபொரெஸ்ட் ரன்' கணக்கில் ஓடி மேன் A வெல்பெக்கிற்கு ஒரு பிரமாதமான பாஸ் செய்ய, அவர் கவிதையாக ஒரு பேக் ப்ளிப் மூலம் மூன்றாவது கோல்'! கவிதை, கவிதை!

இந்த 23 வயதான வோல்கொட் இதுவரை நான்கு புத்தகங்களை (சிறுவர்களுக்கான) எழுதியிருக்கிறார் என்பது உபரித் தகவல்! இது தவிர ஒரு சுயசரிதையும் வெளியாகியிருக்கிறது.

மொத்த பிரிட்டிஷ் மீடியாவும் இந்த இரு கறுப்பு இளைஞர்களையும் மனேஜரையும் தூக்கிக் கொண்டாடிக்கொண்டு இருக்கிறது.

பிரிட்டிஷ்காரர்கள் பழம் பெருமைகளை மட்டுமே ஏன் பேசுகிறார்கள் என்று இப்போது புரிகிறதா? இருக்கும் பெருமைகள் எல்லாமே பழசு!

இந்த மாதிரி வழக்கமான வசந்த, வேனிற் கால சீசன் விஷயங்களைத் தாண்டி இந்த வருடம் நிறைய ஸ்பெஷல்.

முதல் ஸ்பெஷல் - ராணி இரண்டாம் எலிசபெத் முடிசூடி இந்த 2012 உடன் அறுபது வருடங்கள் பூர்த்தி ஆகின்றன. இந்த வைர விழாவிற்காக நான்கு நாட்கள் பிரிட்டன் முழுக்கக் கொண்டாடடம். நாடெங்கும் கார்கள், வீடுகள், தெருக்கள், டவுன் சென்ரர்கள், ஷொப்பிங் மால்கள் டிவி சனல்கள், வெப் சைட்கள் - எங்கெங்கும் சிவப்பும் நீலமுமாய் யுனியன் ஜாக் கொடிகள் டைமண் ஜூபிளி என்றால் பொதுவாக 75 வருடங்கள் முடிந்ததைத்தான் குறிக்கும். இது 60 வருடங்களுக்கு என்று மாற்றப்பட்டது ராணி விக்டோரியா காலத்தில் ராணி அவர் கணவர் இறந்தவுடன் பொது வாழ்க்கையிலிருந்து ஒதுங்கி இருந்தார். இது நாடு முழுவதும் ஒரு மாதிரியான குழப்ப நிலையை உண்டாககியது. எனவே இந்தக் கொண்டாட்டதுக்கு 75 என்பதை அடித்துவிட்டு 60 ஆக மாற்றி எழுதிவிட்டார்கள். அவர்களுக்கென்ன இராஜவம்சம், என்னவேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். இரண்டும் மூன்றும் ஆறு என்று பக்கிங்ஹாம் பால்கனியிலிருந்து கத்திச் சொன்னால் மொத்த தீவும் ஒத்துக் கொள்ளும்

மொத்தம் நான்கு நாட்கள் கொண்டாட்டம். லண்டனில் தேம்ஸில் நடந்த படகுகளின் (கிட்டத்தட்ட ஆயிரம் படகுகள்) அணிவகுப்பை ராணி பார்வையிடுவதைப் பார்ப்பதற்காக முதல் நாளிரவன்றே மக்கள் தேம்ஸ் கரையோரம் டெண்ட் அடித்து, கொட்டும் மழையில் தங்கி விட்டிருந்தனர். வியபளிக்கும் இராஜ(ராணி) விசுவாசம். அடுத்த நாள் சற்று கடுமையான மழைதான் என்று மணப்பெண்ணின் தந்தைக் குரிய கவலையுடன் வானிலை அறிவிப்பாளர் தெரிவித்திருந்தார்.

எதிர்பார்த்தது போலவே வானம் கொஞ்ச நேரம் மழை தூவியது; பின்னர் திருமண மண்டபத்தின் நுழைவாயிலில் உற்சாக சிறு பெண்ணின் கையில் சிக்கிய பன்னீர் சொம்பாய் பளீரென அடித்தது. மாலையில் ஒப்ஷயல் வெரஷன் மழை..மாமழை மழை இல்லாமல் பிரிட்டனா? இந்த நாளைக கொண்டாடுவதற்கு மழை அவசியம், பொருத்தமாக இருந்தது.

**சிவப்பு, நீல நிறங்களுடன் மழைப்பச்சை.**

அடுத்த நாள் பக்கிங்ஹாம் அரணமனையின் முன் மிகப் பெரிய பிபிசியின் இசைஅரங்கம் (concert). இந்த அரண்மனையை முதன்முதலில் பார்த்துவிட்டுத் துணுக்குற்று நின்றது நினைவு வருகிறது (மைசூர் அரண்மனைக்கு பக்கத்தில்கூட வராது). ராணி பாதி நிகழ்ச்சியில் வந்தார். பிரதம மந்திரி சில வரிசைகள் பின்னால், கும்பலோடு கும்பலாய் இருந்தார்.

ராணியின் இளமை புகைப்படங்கள், வீடியோப் படங்கள் அவருக்கு நன்றாகச் சிரிக்கத் தெரியும் என்பதை உணர்த்தினாலும் பின்னர் அவ்வளவாக தெரியவில்லை.

இவ்வளவு திரளான மக்கள் கூட்டத்திலும் எங்கும் தள்ளுமுள்ளு நடந்ததாகப் பதிவாகவே இல்லை. இசை நிகழ்ச்சிக்கு மட்டும் 500,000 பேர் குழந்தைகளுடன் மிக ஒழுங்காக வரிசையில் வந்தனர். இத்தனை பெரிய ஜனக்கூட்டத்தில் கொஞ்ச தள்ளு முள்ளு போதும், குழப்ப அலை பரவுவதற்கு. பிரமிக்க வைத்த ஒழுங்கு.

காவல்துறையினர் உட்பட தொலைகாட்சியில் சிரித்த, சந்தோஷ முகங்களே தெரிந்தன.. பிரிட்டிஷ்காரர்கள் வட கொரியர்கள் மாதிரி அவ்வளவு

**- சிவா கிருஷ்ணமூர்த்தி**

பெரிய நடிகர்கள் கிடையாது, அதிலும் இத்தனை ஆயிரம் பேருமா நடிப்பார்கள்!

**இரண்டாவது ஸ்பெஷல் - ஒலிம்பிக்ஸ்.**

ஏழு வருடங்களுக்கு முன் லண்டன் ஒலிம்பிக்ஸிற்கு தேர்வு செய்யப்பட்டதை அறிவித்தபோது ட்ரபால்கர் சதுக்கத்தில் நடந்த சந்தோஷக் கொண்டாட்டங்கள் நினைவிற்கு வருகின்றன. கூடவே அடுத்த நாள் லண்டனில் நான்கு திசைகளில் நடந்த குண்டு வெடிப்புகளும், அதைத் தொடர்ந்து லண்டனும் பின்னர் கொஞ்ச நேரம் கழித்து உலகமும் ஸ்தம்பித்தது நினைவிற்கு வந்து தொலைக்கிறது.

ஒலிம்பிக்ஸ் டிக்கெட்கள் அனைத்தும் விற்றுத் தீர்ந்துவிட்டன.

ஒலிம்பிக்ஸிற்கு இன்னும் நாட்கள் இருக்கின்றன. இப்போதைக்கு ஒலிம்பிக்ஸ் கிராமங்களைப் பார்ப்பதற்கு சுற்றுலா ஏற்பாடுகள் செய்து பணம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் இதைப் பார்ப்போம்.

# தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் நினைவும்

(ஷர்மி-சிகரம்)

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவும், பாடசாலையின் நிறுவுனர் நினைவு தினமும் பாடசாலை அதிபர் கு.வேல்சிவானந்தன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பாவலர் துரையப்பாபிள்ளை கேட்போர்கூடத்தில் சமய வழிபாடுகளுடன் ஆரம்பமாகி, மங்கள விளக்கேற்றல், நந்திக் கொடியேற்றல், தமிழ்த்தாய் வாழ்த்து, சிந்தனைச சோலை, விருந்தினர் கௌரவித்தல் என்பன நடைபெற்றன.

வரவேற்புரையினைத் தொடர்ந்து, பாடசாலை அதிபர், இவ் ஆண்டுக்கான அதிபர் அறிக்கையினை வாசித்தார்.

அடுத்து முன்னாள் கணித ஆசிரியரும் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் யாழ். மாவட்ட முகாமையாளருமான த.முருகையா பிரதம விருந்தினராகவும், வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன், வலிகாமம் கல்வி வலய மாணவர் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் மற்றும் தெல்லிப்பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுல்குமாரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து



கொண்டனர்.

தமிழ்த்துறை தேசிய கல்வி நிறுவன பிரதம செயற்றிட்ட அதிகாரியும் பாடசாலையின் பழைய மாணவருமான வானதி காண்டீபன் நினைவுப் பேருரையினை ஆற்றினார்.

தொடர்ந்து, கல்வி மற்றும் ஏனைய துறைகளில் சிறந்து விளங்கும் மாணவர்களை பரிசில் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றதுடன், மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இறுதியாக பழைய மாணவர் சங்க செயலாளர் செ.உமாகாந்தன் நன்றியுரை வழங்கினார்.

# கிளி. ஆனந்தபுரம் பகுதியில் இளைஞர்கள் அட்டகாசம்

(கிரு-சிகரம்)

கிளிநொச்சி-ஆனந்தபுரம் பகுதியில் உள்ள கடையொன்றில் தங்கிநின்று வேலைசெய்யும் இளைஞர்கள் சிலர் அந்தப் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையத்திற்கு வருகின்ற மாணவிகளிடமும், பெண்களிடமும் சேஷ்டையில் ஈடுபட்டுவருவதாக பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவர்களின் இவ்வாறான செயற்பாடுகள் ஏற்கனவே யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இவர்களை மேலும் மனரீதியாகப் பாதிப்படையச் செய்வதாகவும் அவர்கள் கூறினர்.

அத்துடன், இந்தப் பகுதியில் இவ்வாறு பெண்களை பாதிக்கும் வகையில் செயற்படும் இளைஞர்கள் தொடர்பில் ஆராய்ந்து, இவற்றைத் தடுத்து நிறுத்துமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# புதிய கட்டடத்தில் கொமர்ஷல் வங்கி

(சாந்தன்-சிகரம்)

அச்சுவேலி இல.13, ராஜ வீதி என்ற முகவரியில் தற்காலிகமான கட்டடமொன்றில் இயங்கி வந்த கொமர்ஷல் வங்கி நேற்று முதல் புதிய கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இலங்கையின் மிகச் சிறந்த வங்கி என்று சர்வதேச ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட கொமர்ஷல் வங்கி தனக்கான சேவைகளாக, நடைமுறைக்கணக்குகள், சேமிப்புக் கணக்கு கள் மற்றும் நிலையான வைப்புக் கணக்குகள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் கடன்கள், மேலதிகப் பற்றுகள், ஏற்றுமதி/இறக்குமதி நிதி வசதிகள், 24 மணிநேர வங்கிச் சேவை 520 க்கும் மேற்பட்ட தன்னியக்க டெலர் இயந்திரங்களில் பெறமுடியும்.

கணினி மயப்படுத்தப்பட்ட நாடு பூராகவும் உள்ள 218 நிலையங்களில் கொம்நெட் வங்கிச் சேவை சிறுவர் மற்றும் இளைஞர் சேமிப்புக் கணக்குகள், சிரேஷ்ட பிரஜைகளுக்கான முதியோர் கணக்குகள், விசேட தனிப்பட்ட கடன் வசதிகள், வீடமைப்பு மற்றும் வர்த்தகக் கடன்வசதிகள், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் கடன் வசதிகள், துரித லீசிங் வசதிகள், கொம்பாங் ஈ எக்ஸ்சேஞ், மணிக்கிராம் வெளிநாடுகளிலிருந்து விரைவாக பணம் அனுப்பும் சேவை, பொற் கடன் அடகுச்சேவை உட்பட பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றது.

# பாடசாலை மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டன

கிளிநொச்சியில் நடைபெற்ற போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான சாரதிப் பயிற்சிப் பட்டறையின் நிறைவு நிகழ்வு கிளிநொச்சியில் அமைந்துள்ள பல நோக்கு கூட்டுறவு மண்டபத்தில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கு தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவினரால் மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட, போக்குவரத்தில் சிரமங்களை எதிர்கொள்ளும் பகுதிகளில் அமைந்துள்ள, 13 பாடசாலைகளைச்சேர்ந்த 100 மாணவர்களுக்கு தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவினரால் மிதிவண்டிகள் வழங்கப்பட்டன. இவற்றை தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் சி.பி ரட்ணாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜபக்ச, ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடமாகாண ஆளுனர் ஜிஏ சந்திரசிறி, தேசிய போக்கு வரத்து ஆணைக்குழுவின் தலைவர் றொசான் குணவர்த்தன, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் மாணவர்களுக்கு வழங்கினர்.

இந்நிகழ்வில் பிதேச செயலர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொணடனர். இந்நிகழ்வில் போக்குவரத்து விதிகள் தொடர்பான பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



# பதிவிறக்கப் பெட்டகம்

நேற்று முன்னாளில் வந்த
உறவன்றடீ; மிக
நெடும் பண்டைக்
காலமுதல்
நேர்ந்து வந்ததாம்!
– பாரதி

உனக்கும் எனக்கும்
ஒரே ஊர் –
வாசுதேவ நல்லூர்...
நீயும் நானும்
ஒரே மதம்
திருநெல்வேலிச்
சைவப்பிள்ளைமார்
வகுப்புங் கூட...
உன்றன் தந்தையும்
என்றன் தந்தையும்
சொந்தக்காரர்கள் –
மைத்துனன்மார்கள்...
எனவே
செம்புலப்பெயல் நீர்போல
அன்புடை நெஞ்சம்
தாம் கலந்தனவே.
– மீரா

பெண்களைத்
தெரியவந்தது முதலில்.
பெண்களைப்
பிடித்துப் போயிற்று அப்புறம்.
பெண்கள் இல்லாமல்
முடியாமல் போனது பிறகு.
பெண்களால்
கீறிக் கிழிபட நேர்ந்தது
அப்புறம் அப்புறம்.
பெண்களால்
கெட்டழிந்து கொண்டிருக்கிறது
கடைசியில் இப்போது.
இந்திரனோ
சந்திரனோ இல்லை நான்
எளிய மனிதன்
என்ன செய்வேன்.
– விக்ரமாதித்யன்

உன்
பாதங்கள் பட்டதால்
வலி தாளாமல் அரற்றும்
இந்தப்
புற்களின்
புலம்பல்களை...
என்னால்
புரிந்துகொள்ள முடிகிறது
ஏனென்றால்...
நானும் உன்னால்
இதேபோல்
மிதிக்கப்பட்டவன்தானே!
– அறிவன்

1023 ½ கண்களின்
அலட்சியப் பார்வை
29 மூஞ்சியப் பாரு குரங்கு
431 ஆங்கில கெட்ட வார்த்தை
(பெரும்பாலும் புரியாதவை)
14 செருப்பு பிஞ்சிடும்
1 புன்னகை (அதுவும் எனக்குப் பின்னால்
பைக்கில் வந்தவனுக்கு)
எனக்கும் பெண்களுக்குமான உறவு
இந்த கதியில் போனாலும்
எதிரில் வரும் பெண்ணைப் பார்த்து
மீண்டும் மீண்டும் ஆவலோடு
கண்களை நீட்டச் சொல்லும் இதயம்
எனக்கு வந்து வாய்த்திருக்கிறது.
– தபூ சங்கர்

அன்பிற்கும் உண்டு
அடைக்கும் தாழ்,
உன்னை
என் மனதில்.
– மயூரா ரத்னசாமி

என் ஸ்கூட்டரின்
முன் ஸ்கூட்டரில்
பின் அமர்ந்து
போகிறவளே
உன் இடுப்பு மடிப்புக்குள்
விழுந்து கிடக்குது கண்கள்
பிடுங்க முடியாமல்.
வீட்டில்
மனைவி உண்டு
பிள்ளைகள் உண்டு
உயிரோடு போகணும் நான்
எப்படிச் சொல்வேன்
என் அவஸ்தைகளை
உன்னிடம்
– ரவி சுப்ரமணியன்

இரு மருங்கிலும்
பெட்ரோல் வாகனங்கள்
இருந்தும்
கடக்கத்தான் வேணும்
சாலையை!
சாமான்யமான காரியமா
உரச நினைக்கும்
ஓட்டுனர்களுக்கு டிமிக்கி
கொடுத்துக் கடப்பதென்பது?
மயிர்க்கால்கள்
குத்திட்டு நிற்கும்
ரோடு கடக்கையில்!
பதட்டத்திலும்...
அரசல் புரசலாய்க்
கொலுசொலி கேட்க,
திரும்பிப் பார்க்கச் சொல்லும்
பாழாய்ப் போன மனது!
– ரகு

நீயும் காதலித்தாய்
நானும் காதலித்தேன்
ஆனால்
நீயும் நானும் காதலித்துக்
கொள்ளவில்லை! – பூமா

எனக்குப் பிடித்த
செவியோர இளங்குழல்
எனக்குப் பிடித்த
இசை ஒழுகும் குரல்
எனக்குப் பிடித்த
இதமான இதழ்
எனக்குப் பிடித்த
மடி விழுந்த இடை
எனக்குப் பிடித்த
இருள் பெயர்ந்த நிறம்
எனக்குப் பிடித்த
... ... ... ...
... ... ... ...
கொண்டதால் உன்னை
இதயத்தில் பூட்டிவிட்டேன்.
உனக்குப் பிடித்த ஒன்றாவது
என்னிடம் உள்ளதா?
என்பதறியாமல். – நாசர்

அம்புலியைப்
பிடித்துத் தருவதாகச்
சொன்ன அம்மா
தண்டச்சோறு என
வார்த்தை வீசும் அப்பா
உன் கவிதை அற்புதம்
சொல்லி நகரும் நண்பன்
உன் நிழல் நான்
காதல் வசனம் பேசி பின்
வங்கி அலுவலரின்
ஸ்கூட்டர் பில்லியனில்
இடம் பிடித்த அவள்
யாவருமே குருதான்.
அவர்கள் கற்றுத் தந்தது
பொய் சொல்லத்தான்
என்றாலும்
கற்றுத் தந்தவர்கள்
குருதானே.
– சந்தானகிருஷ்ணன்

# அல்லாரை தும்புத் தொழிற்சாலையின் தேவைகள் குறித்து ஆராய்வு

(தென்மராட்சி)

தென்மராட்சி அல்லாரையில் அமைந்துள்ள தும்புத் தொழிற்சாலைக்கு கடந்த சனிக்கிழமை மாலை விஜயம் செய்த பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், அத் தொழிற்சாலையை பார்வையிட்டதுடன் தேவைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பிலும் ஆராய்ந்து கொண்டார்.



அமைச்சரின் பெரும் முயற்சி காரணமாக இத் தொழிற்சாலை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், தொழிற்சாலையின் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பில் பிரதானமாக கலந்துரையாடப்பட்டது.

இத் தேவைகளை அவதானத்தில் கொண்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், உடனடியாக நிதி ஒதுக்கீடு மேற்கொண்டு இத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதே நேரம் அதே பகுதியில அமைந்துள்ள மரக்கன்றுகள் உற்பத்திப் பகுதிக்கும் அமைச்சர் விஜயம் மேற்கொண்டார்.

இத்திட்டமும் அமைச்சர் அவர்களது நிதி உதவி மற்றும் முயற்சிகள் காரணமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காணி அபகரிப்பு பிரசாரத்தில் கூட்டமைப்புக்கு ஆதரவளிப்பதில்லை

– சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

அரசாங்கம் பலவந்தமாக மக்களின் காணிகளை அபகரித்து வருவதாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசாரங்களுக்கு ஆதரளிக்கவில்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

காணி அபகரிப்பிற்கு எதிரான கூட்டமைப்பின் போராட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸும் இணைந்து கொண்டுள்ளதாக சில ஊடகங்களில் தகவல் வெளியாகியிருந்தது. எனினும், இந்தத் தகவல்களில் உண்மையில்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பசீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான முக்கிய விடயங்களில் கட்சியின் அதி உயர் பீடமே தீர்மானம் எடுக்கும் எனவும், அவ்வாறான எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் காணிப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும் அவற்றுக்கு அரசாங்கம் காத்திரமான தீர்வுகளை வழங்கும் என எதிர்பார்ப்பதாகவும் பசீர்சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

# பெருந்தோட்ட ஆசிரியர்களுக்கு நவீன கணினிப் பயிற்சி

(கொழும்பு)

பெருந்தோட்டப் பகுதிகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான கணினிப் பயிற்சி திட்டமொன்றை கண்டியிலுள்ள இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்துள்ளது.

22 நாட்களைக் கொண்ட இந்தப் பயிற்சித் திட்டம் எதிர்வரும் ஜூலை மாதம் 16 ஆம் திகதி வரை ஹட்டன் ஹைலண்டஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

2011ஆம் ஆண்டும் 45 நாட்களைக் கொண்ட கணினி பயிற்திட்டத்தை 15 பெருந்தோட்ட ஆசிரியர்களுக்கு சென்னையிலுள்ள தேசிய தகவல் தொழில்நுட்ப நிறுவனம் வழங்கியுள்ளதாக கண்டியிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்முறை உள்ளூர் ஆசிரியர்களுக்கு நவீன கணினிப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட பகுதிகளில் ஆசிரியர்களுக்கான இந்தப் பயிற்சி திட்டத்திற்கு இந்திய வெளிவிவகார அமைச்சு நிதி ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த பயிற்சியின் போது பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள நூலகங்களுக்கு கணினி கல்வி சார்ந்த ஒரு தொகுதி புத்தகங்களையும் கண்டியிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் வழங்கவுள்ளது.

# 2012 வரை பட்டம் பெற்றோருக்கு நியமனம் வழங்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

நாட்டிலுள்ள ஏனைய ஏழு மாகாணங்களில் 2012 காலப்பகுதி வரை பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு பட்டதாரி பயிலுனர் நியமனம் வழங்கப்பட்டுள்ள போதிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாத்திரம் 2009 ஆம் ஆண்டு காலப்குதியை வரையறை செய்து நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது.

இதனை தளர்த்தி 2012 ஆம் ஆண்டு வரை பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு பட்டதாரி பயிலுனர் நியமனம் வழங்குமாறு அரசைக் கோரும் தீர்மானமொன்று அம்பாறை மாவட்ட பட்டதாரிகளால் நிறைவேற்றப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் 2010 தொடக்கம் 2012 வரையான காலப்பகுதியில் பட்டம் பெற்ற பட்டதாரிகளின் ஒன்றுகூடல் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


இவ்விடயம் தொடர்பாக மாவட்டத்திலுள்ள அமைச்சர்களை சந்தித்து அவர்களுடாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று நியமனம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் கலந்துரையாடப்பட்டது.

பட்டதாரி பயிலுனர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட போது, அதில் பட்டம் பெற்ற ஆண்டு வரையறை செய்யப்படவில்லை. அவ்வாறு விண்ணப்பித்து நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்காமல் ஏமாற்றப்பட்டுள்ளார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 1350 பட்டதாரிகளுக்கு பயிலுனர நியமனம் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்ட போதிலும், அம்பாறை மாவட்டத்தில் இதுவரை 1180 பேருக்கு மாத்திரமே நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பான மகஜரொன்றை ஜனாதிபதி, நிதி அமைச்சர், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர், அரசாங்க அதிபர் ஆகியோர்களுக்கு அனுப்புவதற்கும் ஒன்றுகூடலில் தீர்மானிக்கப்பட்டது.

# போலி விசாவில் பயணம் செய்த இலங்கையர் புதுடில்லியில் கைது



(கொழும்பு)

போலி விசாவில் பயணித்த குற்றச்சாட்டின் பேரில் இலங்கைப் பிரஜை ஒருவர் இந்தியாவில் உள்ள் புதுடில்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


கொழும்பிலிருந்து சென்ற கிருபாகரன் முத்துலிங்கம் என்ற மேற்படி நபர், கடந்த வியாழக்கிழமை புதுடில்லியை சென்றடைந்திருந்தார். இவர் கடந்த வெள்ளிக்கிழமை காலை ஏயார் பிரான்ஸ் விமானத்தில் பாரிஸுக்கு பயணிக்கவிருந்தார்.

இவரது கடவுச்சீட்டை குடிவரவு அதிகாரி சோதனையிட்டபோது, அதில் 13 ஆவது பக்கம் போலியானது என்பதை கண்டுபிடித்ததாக சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கூறினார். பின்னர் ஏயார் பிரான்ஸ் ஆவணங்களுக்கான ஆலோசகர் ஒருவர் குறித்த விசா போலியானது என்பதை உறுதி செய்தார்.

இதனைத் தொடர்ந்து மேற்படி நபரிடம் விசாரணை மேற்கொண்டபோது, கொழும்பைத் தளமாகக் கொண்ட முகவர் ஒருவர் 200,000 ரூபாவுக்கு மேற்படி விசாவை ஏற்பாடு செய்து கொடுத்ததாகக் கூறினார். பயண முகவர் நிலையம் ஒன்றில் கடமையாற்றும் ரமேஷ் என்னும் நபர் குறித்த விசாவை வழங்கியதாக சந்தேக நபர் கூறியதாக அதிகாரிகள் கூறினர்.

இந்திய குடிவரவை மீறிய குற்றச்சாட்டின் பேரில் மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டு விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். கிருபாகரன் முத்துலிங்கம் என்பவர் கைது செய்யப்பட்டமை பற்றி இந்தியாவின் சாணக்கியபுரியில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆன்ம ஈடேற்றந் தரும் ஆனி உத்தரம்



உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம் பொருளான சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கப்பெறும் சிவ விரதங்களில் இந்த ஆனி உத்தரம் மிகவும் புனிதமானது.

ஆதியும் அந்தமும் இல்லாத ஆண்டவன் ஆன்மாக்கள் மீது கொண்ட அளப்பெருங் கருணையினால் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்தொழில்களையும் புரிகின்றார். அவன் ஆடுகின்றான். நாங்களும் ஆடுகின்றோம். அவனது அருளால் தான் இப்பூமியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

தில்லைச் சிதம்பரத்திலே பொன்னம்பலத்தாடும் பெருமானாக கனகசபையின் கண்ணே திருநடனமிடும் ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருவருட்டிறம் சொல்லில் அடங்காது. அவரது அருளுக்குப் பாத்திரமாக வேண்டுமாயின் இன்றைய ஆனி உத்தர விரதத்தைப் பக்தியுடன் நோக்க வேண்டும்.

இன்றும் இந்த விரதத்தை அனுட்டிக்க விரும்புவோர் காலை எழுந்து புனித புண்ணிய நீராடிச் சந்தியாவந்தனம் முடித்துச் சிவாலய தரிசனஞ் செய்து சிவ தோத்திரங்களைப் பாடிய வண்ணம் ஆரம்பிக்கலாம்.

மதியம் ஒரு பொழுது உணவு உண்டு முடியுமாயின் இன்னொரு சிவனடியாருக்கு உணவளித்து அவரை வணங்கி வாழ்த்தி ஆசி பெற்றுக் கொள்ளலாம்.

'கோயில்' என்று சிறப்பாக கருதப்பெறும் சிதம்பரம் கோயிலிலே இன்றைய ஆனி உத தரம் வெகு சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது. இறைவன் தில்லைச் சிற்றம்பலத்து ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு இன்று பால், தேன், தயிர், வீபூதி, சந்தனம், குங்குமம், பஞ்சாமிருதம், கரும்பு, இளநீர் முதலானவற்றால் ஆனந்த அபிஷேகம் நடைபெறும்.

இந்த ஆனந்த மயமான அற்புத அபிஷேகத்தைக் காண்பதற்காக அடியார்கள் முண்டியடித்துக் கொண்டு ஒருவரை ஒருவர் தள்ளி விழுத்தி முன்னேறிச் செல்லும் காட்சி பக்தி மயமானது, அருள் வடிவமானது.

வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனான சிவன எமக்கு எதற்காக இவற்றைத் தந்திருக்கின்றான்? அவனை வணங்கி முத்தியின்பம் பெரும் பொருட்டேயாம்.

இன்று இந்த ஆனி உத்தர நன்னாளில் தில்லை நடராஜப் பெருமான் ஆடி ஆடி அசைந்த வண்ணம் சிதம்பரம் கோயிலிலே சிறப்புத் திருத்தாண்டவம் செய்யும் காட்சி காண்பதற்கு பூர்வஜென்ம புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

எமது இலங்கையிலும் ஈழத்துச் சிதம்பரமான காரைநகர் சிவன் கோயில் ஆலயம் முதலியவற்றிலும் இன்றைய ஆனி உத்தர தரிசனத்தை அடியார்கள் கண்டு களிக்கலாம்.

ஆகவே இன்றைய ஆனி உத்தர நன்னாளில் சிவதாண்டவ தரிசனத்தைக் கண்டு உய்தி பெற்று மனிதப் பிறவி எடுத்ததன் மாண்பினைப் பெற்றுக் கொள்வோமாக.

**குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்**
**இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்**
**மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே!**

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்.

Grade - 13 | க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள் | G.C.E. (A/L) Examination model Paper | 02 T II


பௌதிகவியல் - I
Physics - I

கல்வி முரசு


நேரம் :
2 மணித்தியாலம்

*பௌதிகவியல் I தொடர்ச்சி....*

40. A,B என்பன செப்புக்குழாய்களாகும். A யானது குளிர் நீரையும் B யானது சுடு நீரையும் காவுகின்றன. ஒரு கல்வனோமானி ஒன்று படத்தில் காட்டியவாறு இரு உலோகக் கம்பிகளால் இணைக்கப்பட்டுள்ளன. எவ் உருவமைப்பில் கல்வனோமானி பூச்சிய வாசிப்பை காட்டாது.






41. 24 V அழுத்த வழங்கியில் ஓர் நேரோட்ட மோட்டார் செயற்படுகின்றது. அது செயற்படும் போது 1.0 A மின்னோட்டத்தை உறிஞ்சுகின்றது. அமேச்சரின் தடை 2 Ω ஆயின் மோட்டாரின் பொறிமுறை வலு





1) 288 W  2) 26 W  3) 24 W
4) 22 W  5) 2 W

42. சீரான கடத்திச் சட்டம் XY யானது இரு பெரிய செப்புக் குற்றிகளுக்கு இணைக்கப்பட்டுள்ளது. அத்துடன் XY யானது மின்னோட்டம் I யினால் சூடாக்கப்படுகிறது. உறுதிநிலை அடைந்தபின் XY வழியேயான வெப்பநிலை மாறலைக் காட்டும் வரைபு.









43. $Q_1$, $Q_2$ என்னும் புள்ளி ஏற்றங்கள் r இடைத்தூரத்தில் அவற்றிற்கு இடையே l தடிப்படைய செப்புத்தட்டு வைக்கப்பட்டுள்ளது. இது உருவில் புள்ளிக்கோடுகளால் காட்டப்பட்டுள்ளது. தட்டை வைப்பதற்கு முன்பும் தட்டு வைத்த பின்பும் ஏற்றங்களுக்கிடையிலான விசை F உம் F உம் ஆகுமாயின்,





1) $F = \frac{r^2 F_o}{(r-\ell)^2}$  2) $F = \frac{F(r-\mathring{l})^2}{r^2} Fo$  3) $F_o = F$
4) F முடிவிலியாகும்  5) $F = 0$

44. பொருள் A ஆனது உராய்வுடைய தளம் ஒன்றில் வைக்கப்பட்டு தளத்தின் சாய்வு படிப்படியாக அதிகரிக்கப்படும் போது (B பற்றி சுழற்றுவதன் மூலம்) பொருளின் ஆர்முடுகலானது தளத்தின் சாய்வுடன் (θ) மாறுபடுவதைக் காட்டும் வரைபு. (பொருள் கீழ் வழுக்கும் போது தளத்திற்கும் பொருளுக்குமிடையிலான உராய்வு விசை மாறிலி எனக் கருதுக).








45. ஓர் சீரான U குழாயின் அரைப்பகுதிக்கு திரவம் நிரப்பப்பட்டு அதன் பின் திறந்த முனைகள் அடைக்கப்படுகின்றன. திரவமேற்பரப்புக்கு மேலுள்ள வெளியில் வளி இல்லை எனவும், அதன் சொந்த ஆவி மாத்திரம் உள்ளது எனக் கொள்க. ஆரம்பத்தில் உரு (a) இல் காட்டப்பட்டுள்ளவாறு நிலைக்குத்தாக வைக்கப்பட்டுள்ளது. இப்போது உரு (b) இல் காட்டியவாறு கிடையுடன் மெதுவாக சாய்வாக சரிக்கப்படுகின்றது. உருக்கள் (a) யிலும் (b) யிலும் திரவ மட்டங்கள் பற்றிய கூற்றுக்களை கருதுக.





1) புயம் A யில் உள்ள ஆவியமுக்கம் புயம் B யில் உள்ள வாயுவின் அமுக்கத்திலும் பெரியது.
2) இரு புயங்களிலும் ஆவியமுக்கம் தொடர்ந்து மாறிலியாகும்.
3) இரு புயங்களிலும் திரவத்தின் மேலுள்ள ஆவியின் மொத்த மூல் எண்ணிக்கை மாற்றமடையும்.
4) புயம் B யை விட புயம் A யில் திரவநிரலின் உயரம் மேல் இருக்கும்.
5) ஒவ்வொரு புயத்திலுமுள்ள ஆவிமூலக்கூறுகளின் எண்ணிக்கை தொடர்ந்து மாற்றமடையாதிருக்கும்.

46. A, B என்னும் சவர்க்காரக் குமிழிகள் கண்ணாடிக் குழாயின் முனைகளில் உருவாக்கப்பட்டு வால்பு $T_1$ திறக்கப்படுகின்றது.





1) குமிழ்களின் ஆரை சமனாகும் வரை A யில் இருந்து B யிற்கு வளிப்பாய்ச்சல் இருக்கும்.
2) குமிழ்கள் சமனாகும்வரை B யில் இருந்து B யிற்கு வளிப் பாய்ச்சல் இருக்கும்.
3) B யிலும் பார்க்க A யின் ஆரை சிறியதாக இறுதியாக வரும்.
4) B யில் இருந்து A யிற்கு வளிப் பாய்வதுடன் A பெரியதாவதுடன் B சிறியதாகும்.
5) எந்த ஒரு மாற்றமும் இல்லை.

47. திரவம் ஒன்றின் குளிரல் வளையி அருகே தரப்பட்டுள்ளது. வளையியின் புள்ளி Q வில் படித்திறன் $20^\circ C\ min^{-1}$ திரவம் முழுவதும் திண்மமாகுவதற்கு எடுக்கும் நேரம் 20 min ஆயின் $\frac{\text{திரவத்தின் தன்வெப்பக் கொள்ளளவு}}{\text{திரவத்தின் உருகலின் தன்மறை வெப்பம்}}$ என்னும் விகிதம், (பாத்திரத்தின் தன்வெப்பக் கொள்ளளவு புறக்கணிக்கத்தக்கது எனக் கொள்க)





1) $1/40\ K^{-1}$  2) $1/20\ K^{-1}$  3) $1\ K^{-1}$
4) $10\ K^{-1}$  5) $40\ K^{-1}$

48. கலம் A யினதும், B யினதும் மின்னியக்க விசைகள் முறையே 6V, 2 V ஆகும். அவற்றின் அகத்தடை புறக்கணிக்கத்தக்கதாயின் 10 uf கொள்ளளவுள்ள கொள்ளளவியில் சேமிக்கப்பட்டுள்ள ஏற்றம்,





1) 0 μC  2) 20 μC  3) 30 μC
4) 40 μC  5) 60 μC

49. E மின்னியக்க விசையும் r அகத்தடையுமுடைய சர்வ சமனான 10 மின் கலன்கள் படத்தில் காட்டியவாறு தடை R இற்கு இணைக்கப்பட்டுள்ளது. தடை R இனூடாக மின்னோட்டம்.





1) 4E/r
2) 3E/r
3) 2E/r
4) 10E/r
5) 0





50. படத்தில் காட்டியவாறு சர்வ சமனான R தடையுடைய தடையிகள் இணைக்கப்பட்டுள்ளன. X,Y இற்கு இடையிலான விளையுள் தடை,

1) 5/8R
2) 2R
3) 4R
4) 3/4R
5) 2/3R

51. அழுத்தம் (V) யுடன் ஒளிமின்னோட்டம் (I) ஆனது மாறுபடுவதை அருகிலுள்ள வளையி காட்டுகிறது. A, B, C என்பவற்றின் அலை நீளங்கள் முறையே $\lambda_A$, $\lambda_B$, $\lambda_C$ ஆகும் ஆயின்




1) $\lambda_C > \lambda_B > \lambda_A$
2) $\lambda_C > \lambda_A > \lambda_B$
3) $\lambda_A > \lambda_B > \lambda_C$
4) $\lambda_A > \lambda_C > \lambda_B$
5) $\lambda_B > \lambda_C > \lambda_A$





52. வெப்ப இயக்கம் செய்கை ஒன்றை அருகிலுள்ள உரு காட்டுகிறது. 600j, 200j வெப்பங்கள் முறையே தொகுதியில் A யில் இருந்து B இற்கும், B யில் இருந்து C இற்கும் வழங்கப்படுகின்றது. A யில் இருந்து C யிற்கு தொகுதியில் அகச்சக்தியில் உள்ள மாற்றம்,

1) 560 J
2) 800 J
3) 600 J
4) 640 J
5) 720 J


53. X,Y என்னும் இரு கதிர்தொழிற்பாட்டு மூலகங்கள் t=0 ஆக இருக்கும் போது கருக்களின் எண்ணிக்கை $A_0$ ஆகும். X இனதும் Y யினதும் அரை ஆயுட்காலங்கள் முறையே 24 நாட்களும், 16 நாட்களும் ஆகும். இரு மூலகங்களினதும் சேர்க்கை யானது 48 நாட்களின் பின் இருக்கும் கருக்களின் எண்ணிக்கை.

1) $A_0/12$
2) $3A_0/16$
3) $A_0/4$
4) $3A_0/8$
5) $5A_0/16$

54. ஆறு கடத்தம் தட்டுக்கள் படத்தில் காட்டியவாறு இணைக கப்பட்டுள்ளன. தட்டுக்களின் பரப்பு A ஆகவும் அடுத்துள்ள தட்டுகளுக்கிடையிலுள்ள இடை வெளி d ஆகவும் உள்ளது. X,Y இற்கு இடையேயான கொள்ளளவும்.





1) $\frac{\varepsilon_o A}{3d}$
2) $\frac{\varepsilon_o A}{2d}$
3) $\frac{5\varepsilon_o A}{d}$
4) $\frac{\varepsilon_o A}{d}$
5) $\frac{3\varepsilon_o A}{d}$





55. ஒளி படும் போது LDR இன் தடை பூச்சியமாகும் இருட்டில் தடை மிக உயர் வாகும். இரு சந்தர்ப்பங்களிலும் பயப்பு வோல்றறளவு ($V_0$) முறையே

1) 1.2 V, 0 V
2) 2 V, 1.2 V
3) 6 V, 6 V
4) 8 V, 2 V
5) 10 V, 10 V


56. ஒன்று பூரணகரும்பொருள் ஒன்றாகவும் மற்றையது சாம்பல் நிறப் பொருள் ஒன்றாகவும் உள்ளன. புள்ளிக் கோடுகளால் காட்டப்பட்டுள்ள வரைபு சாம்பல் நிறப்பொருளுக்குரியதாயின் ஒரே வெப்பநிலையில் உள்ள இருவேறு பொருட்களின் செறிவுப் பரம்பல் வளையிகளை சரியாகக் காட்டும் வரைபு





57. ஓர் அலுமியத் தட்டானது கிடை அச்சுக் குறித்து காந்தப்புலத்தினுள் (Horse Shoe Magnet) சுழல்வதை உருக்கள் காட்டுகின்றது. தட்டுக்களின் சுழற்சித் திசை மணிக்கூட்டுத் திசையில் உள்ளது. ஆயின் அலுமியத்தட்டில் துண்டப்பட்ட சுழப்போட்ங்கள்.





58. கூம்புருவான பொருள் ஒன்று பிசுக்குத் திரவம் ஒன்றுள்ள தளத்தின் மேல் மாறா வீதத்தில் சுழல்கின்றது. திரவப்படைகளின் நிலைக்குத்து வேகப்படித்திறன் R ஆகவும் சுழற்சி அச்சில் இருந்து கருதப்பட்ட புள்ளிக்கான செங்குத்துத் தூரம் S ஆகவும் இருப்பின் பின்வரும் தொடர்களில் சரியான தொடர்பு





1) $R \propto S$
2) $R \propto S^2$
3) $R \propto \frac{1}{S}$
4) $R \propto \frac{1}{S^2}$
5) R ஆனது S இல் தங்கியிருக்காது.



59. கடத்தும் வடம் ஒன்று படத்தில் காட்டியவாறு சீரான வேகத்துடன் செலுத்தப்படுகிறது. தூண்டப்பட்ட மின்னியக்க விசை மாறுபடுவதைக் காட்டும் வரைபு.




60. முழு அலை சீராக்கி ஒன்றின் $I_1$ உம் $I_3$ யும் மாறு படுவதை கீழுள்ள வரைபுகள காட்டுகிறது. ஆயின் $I_2$, ஆனது நேரம்(t) யுடன் மாறுபடுவதை திறம்படக் காட்டுவது,



# வீடுகளில் கழிப்பறையே இல்லை அக்னி ஏவுகணை தேவையா?



(ஓரிசா)

சுகாதாரப் பிரச்சினைகளை சரிவர நிவர்த்தி செய்யாத பட்சத்தில், அக்னி போன்ற ஏவுகணைகளை செலுத்துவதால் எந்த நன்மையும் ஏற்பட்டுவிடாது என மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார். ஓரிசா மாநிலம், தம்ராவில் உள்ள இராணுவ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கழகம் சார்பில் நடைபெற்ற விழாவில், சுற்றுச்சூழலுக்கு உகந்த கழிப்பறை திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, விண்ணிற்கு அக்னி போன்ற ஏவுகணைகளை அனுப்புவதை விட, ஒவ்வொருவரது வீட்டிலும் கழிப்பறையை அமைப்பது தான் முக்கியம். சுகாதாரத்தை தவிர்த்து விட்டு, ஏவுகணை-களை அனுப்புவதால் எந்தவிதமான நன்மையும் ஏற்படப்போவதில்லை. ஒவ்வொருவரது வீட்டிலும் கழிப்பறையை ஏற்படுத்தித் தருவது தான் அரசுக்கு இப்போதுள்ள மிகப்பெரிய சவால். இப்பிரச்சினையை எப்படி சமாளிப்பது என, நாள் ஒன்றுக்கு நான் 18 மணி நேரம் சிந்திக்கிறேன்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த உயிரி கழிப்பறை திட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வருவது, நாட்டில் சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்காக விழிப் புணர்வு ஏற்படுத்திய மகாத்மா காந்திக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும். இராணுவத்துக்கு ஒதுக்கப்படும் நிதியைப் போலவே, பொது நல நடவடிக்கைகளுக்கும் ஒதுக்கப்பட வேண்டும். பட்ஜெட்டில், ஊரக வளர்ச்சித் துறைக்கு ஒதுக்கப்பட்டது 99 ஆயிரம் கோடி ரூபாய். ஆனால், இராணுவத்துக்கு இரண்டு மடங்கு அதாவது, 1 இலட்சத்து 93 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இராணுவ அமைச்சகத்துக்கு நிதி ஒதுக்கீட்டை குறைக்க வேண்டும் என, நான் கூறவில்லை. அதே நேரத்தில், பொது நலத்திற்கும் அதே அளவிற்கு நிதி ஒதுக்க வேண்டும் என்று தான் கூறுகிறேன். இவ்வாறு ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்தார்.

# அலைக்கற்றை ஒதுக்கீட்டில் நட்டமா? கேள்வி எழுப்புகின்றார் ராஜா


நாட்டில் ஏற்பட்ட மிகப்பெரிய ஊழல் என்று கருதப்படும் 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் ஒரு ரூபாய் கூட நஷ்டம் ஏற்படவில்லை என்று முன்னாள் மத்திய அமைச்சரும் நீலகிரி மக்களவை உறுப்பினருமான ஆ.ராசா தெரிவித்தார்.

திருப்பூர் மாவட்டம், அவிநாசி அருகே சேவூரில் நடைபெற்ற ஒன்றிய தி.மு.க. செயற் வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆ.ராசா பேசியதாவது, 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் 1 இலட்சத்து 76 ஆயிரம் கோடியை நான் எடுத்துக் கொண்டதுபோல வழக்கு தொடரப்பட்டு, 15 மாதம் சிறை சென்று வந்துள்ளேன்.

சி.ஏ.ஜி. கொடுத்த அறிக்கையில் 1 இலட்சத்து 76 ஆயிரம் கோடி நஷ்டம் என்று தெரிவித்துள்ளனர். சி.பி.ஐ குற்றப் பத்திரிகையில் 33 ஆயிரம் கோடி ரூபா நஷ்டம் என்று கூறியுள்ளனர். இவ்வழக்கில் நானே வாதாடி வருகிறேன். ஒரு ரூபாய்கூட நஷ்டம் இல்லை என்பதை நிரூபிப்பேன். ஒரு நிமிடத்திற்கு ஒரு ரூபாயாக இருந்த தொலைபேசிக் கட்டணத்தை 30 பைசாவாகக் குறைத்தது, 30 கோடி பேர் மட்டுமே பயன்படுத்திய தொலைபேசி சேவையை 90 கோடி பேர் பயன்படுத்தும் வகை யில் உயர்த்தியது, ரூபா 310 ஆக இருந்த சராசரி தனிநபரின் மாத தொலைபேசிக் கட்டணத்தை ரூபா 100 ஆகக் குறைக்க வைத்தது ஆகியவைதான் நான் செய்த தவறுகள் என்றார்.




# மும்பை தாக்குதலில் தொடர்புடைய அபு ஹம்சா கைது



புதுடில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுக் காலை அபு ஹம்சா பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கடந்த 2008, நவம்பர் 26ஆம் திகதி பாகிஸ்தானைச் சேர்ந்த தீவிரவாதிகள் மும்பை சத்ரபதி சிவாஜி ரயில் நிலையம், தாஜ் ஹோட்டல் உட்பட சில முக்கிய இடங்களில் துப்பாக்கி சூடு நடத்தியதில் 150 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலை நடத்திய தீவிரவாதிகளுக்கு உதவும் நோக்கில் அதாவது, தாஜ் ஹோட்டல் எங்கிருக்கிறது, சிவாஜி ரயில் நிலையம் எங்கிருக்கிறது என தகவல் கொடுத்ததன் அடிப்படையில் அபு ஹம்சாவை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர், இந்தியன் முஜாஹிதீன் அமைப்பை சேர்ந்தவர் என்றும் பாகிஸ்தானின் லஷ்கர் - இ - தொய்பா அமைப்பிடம் பயிற்சி பெற்றவர் என்பதும் தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்டு தற்போது டில்லி பொலிஸிடம் இருக்கும் அபுவிடம் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

# சீன எல்லையில் ரஷ்யாவும் இந்தியாவும் போர் ஒத்திகை

சீன எல்லையில் இந்தியா - ரஷ்யா இணைந்து போர் ஒத்திகை நிகழ்ச்சியினை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கவுள்ளன. இந்தியா - ரஷ்யா ஆகிய நாடுகள் இணைந்து பயங்கரவாதத்தினை எதிர்த்து போர் ஒத்திகை மேற்கொள்வதென முடிவு செய்ததன்படி "இந்திரா" என்ற பெயரில் முதன்முறையாக கடந்த 2005ஆம் ஆண்டு ராஜஸ்தானில் மேற்கொண்டன.

இதைத்தொடர்ந்து 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் இரு முறை இராணுவம் மற்றும் கப்பற்படை போர் ஒத்திகை நடந்தது. தற்போது 4ஆவது முறையாக இந்தியா - ரஷ்யா இணைந்து பயங்கரவாதத்தினை எதிர்கொள்வது குறித்து இந்திரா - 2012 என்ற பெயரில் போர் ஒத்திகையினை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடத்த திட்டமிட்டுள்ளன. இருதரப்பிலும் 250 வீரர்களுடன் சீன-மங்கோலிய நாடுகளின் எல்லையில் இந்த ஒத்திகை நடக்கவுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இரண்டு ஹெலிகள் எரிந்து நாசம்



(பிஜாப்பூர்)

திருவனந்தபுரத்திலிருந்து ஹெலிகொப்டர்களை ஏற்றிக் கொண்டு, கர்நாடகா வழியாக, ராஜஸ்தான் சென்று கொண்டிருந்த கென்டெய்னர் லொறியில் தீப்பிடித்ததால், ஹெலிகொப்டருடன் லொறி எரிந்து சாம்பலானது.

கேரள அரசுக்கு சொந்தமான இரண்டு மினி ஹெலிகொப்டர்களை ஏற்றிக்கொண்டு, திருவனந்தபுரத்திலிருந்து ராஜஸ்தானுக்கு, கென்டெய்னர் லொறி ஒன்று, கர்நாடகா வழியாக சென்று கொண்டிருந்தது.பிஜாப்பூர் தேசிய நெடுஞ்சாலையில், லொறி வந்து கொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இந்த தகவல், உடனடியாக, அப்பகுதி தீயணைப்பு நிலையத்துக்கு தெரிவிக்கப் பட்டது.

தீயை அணைக்க, சம்பவ இடத்துக்கு இரண்டு தீயணைப்பு வாகனங்கள் வந்தன. அதற்குள், ஹெலிகொப்டர் உட்பட, லொறி முழுவதும் எரிந்து சாம்பலானது. லொறியில் டீசல் ஒழுக்கு ஆகி தீப்பிடித்திருக்கலாமா அல்லது வேறு காரணம் உள்ளதா என்று பிஜாப்பூர் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.



அமர்நாத் யாத்திரை செல்வதற்காக ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் தங்களின் பெயர்களைப் பதிவு செய்வதற்காக வரிசையில் காத்திருக்கும் சன்னியாசிகள்.

# அதிசயம் நிகழ்ந்தால் நான்தான் ஜனாதிபதி

அதிசயம் நிகழ்ந்தால் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவேன் என்றும் அதிசயங்கள் நிகழும் என்பதில் தமக்கு நம்பிக்கை உண்டு எனவும் பி.ஏ. சங்மா தெரிவித்துள்ளார். அ.தி.மு.க. பிஜு ஜனதா தளம் ஆகிய கட்சிகளால் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக மக்களவை முன்னாள் சபாநாயகர் பி.ஏ. சங்மா முன்னிறுத்தப்பட்டார்.

பின்னர் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அவரை தனது வேட்பாளராக அதிகாரப்பூர்வமாக முன்னிறுத்தியுள்ளது. எனினும் ஜனாதிபதி தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி வேட்பாளரான பிரணாப் முகர்ஜி வெற்றி பெறவே அதிக வாய்ப்பு உள்ளது. இந்நிலையில் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் சங்மா கூறியிருப்பது; உலகில் அதிசயங்கள் நிகழ்வது உண்மை தான். எனக்கும் அதிசயங்கள் நிகழ்வதில் நம்பிக்கை உண்டு. எனவே குடியரசுத் தலைவர் தேர்தலிலும் அதிசயம் நடக்க வாய்ப்பு உள்ளது.

கடவுள் எனது பக்கம் இருக்கும் பட்சத்தில் தேர்தல் முடியும் முன்னரே நான் தோல்வியடைவேன் என்று கூற முடியாது. அரசியலில் காட்சிகள் மிகவேகமாக மாறும். எப்போது வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும் நிகழலாம். தேர்தல் என்பது அரசியல். எனவே இங்கும் மாற்றங்கள் நிகழும். என்ன மாற்றங்கள் வருகின்றன என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என்றார்.

# அடுத்த நிதியமைச்சர் யார்? குழப்பத்தில் மன்மோகன்



(புதுடில்லி)

அடுத்த நிதியமைச்சராக யாரை நியமிப்பது என்பது தொடர்பாக என் மனதில் குழப்பம் ஏற்பட்டுள்ளது என பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக, தற்போதைய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியின் பெயர் அறிவிக் கப்பட்டுள்ளதால், அவர் தன் பதவியை இன்று இராஜினாமா செய்கிறார். இதையொட்டி, அவருக்கு அடுத்தபடியாக, நிதியமைச்சர் பொறுப்பை வகிக்கப்போவது யார் என்ற எதிர்பார்ப்பு எல்லோரிடமும் உள்ளது.

இந்நிலையில், ஏற்கனவே நிதி அமைச்சராக இருந்தவரான மன்மோகன் சிங்கே, இணையமைச்சர்கள் நமோ நாராயண் மீனா மற்றும் பழனிமாணிக்கம் ஆகியோரது உதவியுடன் நிதியமைச்சர் இலாகாவை தன் பொறுப்பிலேயே வைத்துக் கொள்வார் என்ற ஒரு பேச்சும் அடிபடுகிறது. மேலும், பிரதமரின் பொருளாதார ஆலோசகரான கவுசிக் பாசுவும், இதே கருத்தை வலியுறுத்தியுள்ளார். மிகச் சிறந்த பொருளாதார நிபுணரான மன்மோகன் சிங் மட்டுமே, நிதித் துறையை கவனிக்க தகுதியானவர் என தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

# சிரியாவில் தாக்குதல் தீவிரம்; ஒரு வாரத்தில் 660 பேர் பலி



சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் அசாத்திற்கு எதிரான போராட்டம் நாளுக்கு நாள் வலுவடைந்து வருகிறது. இந்நிலையில் போராட்டக்காரர்கள் மீது இராணுவம் நடத்திய தாக்குதலில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 660 பேர் பலியானதாக மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் பதவி விலகக் கோரி கடந்த ஓராண்டுக்கும் மேலாக போராட்டம் நடைபெற்று வருகிறது. ஐ.நா.சபை சமரச முயற்சியில் ஈடுபட்டபோதிலும் பலன் கிடைக்கவில்லை. இந்நிலையில், அலப்போ மாகாணத்தின் தரா அசா மற்றும் அல்-அடாரிப் உள்ளிட்ட பகுதிகளில் போராட்டக்காரர்கள் அரசுக்கு எதிராக நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களை ஒடுக்குவதற்காக இராணுவம் நடத்திய தாக்குதலில் 16 பேர் உயிரிழந்ததாக மனித உரிமை அமைப்பைச் சேர்ந்த அப்துல் ரஹ்மான் தெரிவித்தார்.

இதுகுறித்து அப்துல் ரஹ்மான் கூறியதாவது, அண்டை நாடுகளுடன் போர் நடைபெற்ற காலத்தில் கூட, சராசரியாக ஒரு நாளைக்கு 20 பேர் கூட கொல்லப்படவில்லை. ஆனால் உள்நாட்டுப் போரில் தினமும் 100இற்கும் மேற்பட்டோர் பலியாகின்றனர். கடந்த வாரத்தில் மட்டும்இராணுவத் தாக்குதலில் மொத்தம் 660 பேர் பலியாகி உள்ளனர். இது மிகவும் மோசமான வாரம் ஆகும். சிரியாவில் நிகழும மனிதப் படுகொலையைச் சர்வதேச நாடுகளால் தடுக்க முடியவில்லை. ஐ.நா பார்வையாளர்களும் சமரச முயற்சியைக் கைவிட்டு விட்டனர். இதனால் நிலைமை மோசமாகி வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

# ஆப்கானில் வெள்ளம்; 30 பேர் பலி



ஆப்கானிஸ்தானில் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் இதுவரை 37 பேர் இறந்துள்ளனர், பலர் காணாமல் போயுள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் கோர் மாகாணத்தில் கடந்த சில நாட்களாக பயங்கர சூறாவளி மற்றும் கடும் மழை பெய்து வருகிறது.

இதில் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. நூற்றுக் கணக்கான விவசாய நிலங்களில் பயிர்கள் நாசம் அடைந்துள்ளன. பல வீடுகள் வெள்ளத்தில் இடிந்து நொருங்கி உள்ளன. இதுகுறித்து மாகாண 'அரசு செய்தித் தொடர்பாளர் அப்துல்ஹை காட்பி கூறுகையில், வெள்ளத்தில் இதுவரை 37 பேர் பலியாகி உள்ளனர். பலர் காணாமல் போயுள்ளனர். அவர்களை தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்புப் படையினர் தீவிர நடவடிக்கையில் இறங்கி உள்ளனர் என்றார்.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் வசித்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதுபோன்ற கடும் சூறாவளி, மழை ஆண்டுதோறும் இந்த மாதத்தில் வழக்கமானதுதான். எனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனால் பலி எண்ணிக்கை குறைந்துள்ளது எனத் தெரியவருகின்றது. ஆனால் வழக்கத்தை விட இந்த ஆண்டு மழை அதிகம். பனி மலைகள் உருகுவதும் வெள்ளத்துக்கு காரணம் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த மே மாதம் சரிபுல் மாகாணத்தில் பெய்த கடும் மழையில் பெண்கள், குழந்தைகள் உள்பட 50 பேர் இறந்தன

உலகச் செய்திகள்

# சீனாவில் நில நடுக்கம்; 2 பேர் பலி, 100 பேர் காயம்



சீனாவில் நேற்றுமுன்தினம் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் 2 பேர் உயிரிழந்தனர், 100இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

சீனாவின் தென் மேற்கு பகுதியில் உள்ள யுன்னான் மற்றும் சிசுவான் எல்லைப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டர் அளவுகோலில் 5.7ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தில் 2 பேர் பலியானார்கள், 100 பேர் காயம் அடைந்தனர். மலைப்பகுதி என்பதால் வீடுகள் இடிந்து சரிந்தன, தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விட்டன. கட்டிட இடிபாடுகளுள் சிக்கி பலர் தவித்தனர். நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மீட்புக் குழுவினரும், நிவாரணப் பொருட்களும் அனுப்பி வைக்கப்பட்டன. இதேவேளை ரஷ்யாவில் சக்தி வாய்ந்த பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம்(யு.எஸ்.ஜி.எஸ்) தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கம் கிழக்கே காமட்சகா தீபகற்பத்தினை மையமாக கொண்டு கடலுக்கு அடியில் ஏற்பட்டதாகவும், ரிக்டர் அளவுகோலில் 6.1ஆக பதிவானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு சிரியாவுக்கு துருக்கி கடும் கண்டனம்

போர் விமானத்தை சிரியா சுட்டு வீழ்த்தியதற்கு துருக்கி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. மேலும் நேட்டோ நாடுகளுடன் பேசி அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது. சிரியாவில் ஜனாதிபதி அசாத்துக்கு எதிரான போராட்டம் நாளுக்கு நாள் வலுத்து வரும் நிலையில், பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக வெளியேறி துருக்கியில் தஞ்சம் புகுந்து வருகிறார்கள்.


இதுமட்டுமல்லாமல் போராட்டக்காரர்களுக்கு துருக்கி உதவி செய்து வருவதாக சிரியா கூறி வருகிறது. இதன் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையில் பிரச்சினை நிலவுகிறது. இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு துருக்கி போர் விமானம் ஒன்று எல்லைப்பகுதியில் பறந்த சென்றது. இந்த விமானத்தை சிரியா சுட்டு வீழ்த்தி விட்டது.

இதற்கு சிரியா தரப்பில் கூறுகையில், தங்கள் நாட்டு எல்லைக்குள் நுழைந்ததால் விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக கூறியது. இந்த சம்பவம் தொடர்பாக துருக்கி தீவிர விசாரணை நடத்தி விட்டு சிரியாவுக்கு கடும் கண்டனம் தெரிவித்தது. இதற்கிடையில் சிரியா ஜனாதிபதி அசாத்தை ஆதரிக்கும் ஈரான் இந்த விவகாரத்தை சமாதானமாக தீர்க்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.



ஸ்பெயின் சான் ஜுவன் பகுதியில் தீ மிதிப்பு விழா நடந்தது. இதில் இளைஞர் ஒருவர் பெண்ணைத் தோளில் சுமந்து கொண்டு தணலில் நடந்து செல்வதைக் காணலாம்.

# கடலுக்குள் 7000 மீற்றர் பயணம்; சீனர்கள் புதிய சாதனை




கடலுக்கு அடியில் 7000 மீற்றர் ஆழத்திற்குச் சென்று சீனர்கள் புதிய சாதனை ஒன்றை நிகழ்த்தி உள்ளனர். கடலுக்கு அடியில் புதைந்து கிடக்கும் ஏராளமான கனிமங்களையும், இன்னும் சில பொருட்களையும் கடல் ஆராய்ச்சி நிபுணர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

கடலின் மிக அதிக ஆழம் வரை செல்லும் வீரர்களின் துணையோடு, சில ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு கடலின் அதிக ஆழம் செல்வதற்கு சிறிய ரக நீர்மூழ்கி கப்பல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

ஜியாவ்லாங் என்ற நீர்மூழ்கி கப்பல் 3,759 மீற்றர் ஆழம் வரை செல்வதற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டு 17 முறை சீன கடல் பகுதியில் ஆய்வு மேற்கொண்டது. இதற்கிடையே கடந்த 15ஆம் திகதி பசுபிக் கடலின் மேற்கு பகுதியில் ஜியாவ்லாங் நீர்மூழ்கி கப்பலில் மூன்று சீன வீரர்கள், 7 ஆயிரத்து 15 மீற்றர் ஆழம் வரை சென்று சாதனை படைத்துள்ளனர். டைட்டானிக் திரைப்படத்தை தயாரித்த இயக்குநர் ஜேம்ஸ் கேமரூன், 11 ஆயிரம் மீற்றர் ஆழம் வரை சிறிய நீர்மூழ்கி கப்பலில் சென்று ஏற்கனவே சாதனை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# டைட்டானிக் கப்பலின் சகோதரி கனடா சென்றது



டைட்டானிக் கப்பலின் சகோதரி என்று அழைக்கப்படும் S.S.Keewatin என்ற கப்பல் கனடாவிற்கு சென்றது. 1905ஆம் ஆண்டில் ஸ்காட்லாந்தில் கட்டப்பட்ட Keewatin என்ற கப்பல் 50 ஆண்டுகளாக, சுப்பீரியர் ஏரிக்கும் ஜியார்ஜியா வளைகுடாவுக்கும் இடையே கடல் போக்குவரத்துக்கு உதவியது.

1965ஆம் ஆண்டில் பணி ஓய்வு பெற்றதும், 1967ஆம் ஆண்டில் கலமாசூ ஏரியில் டக்ளஸ் நகரத்தில் நிறுத்தப்பட்டது. அதன் பின் ஒரு கண்காட்சிப் பொருளாக இருந்து வந்தது. இந்தக் கப்பலின் உரிமையாளரான ஸ்கைலைன் சர்வதேச மேம்பாட்டு நிறுவனம் .ஒரு மில்லியன் டொலர் செலவில் ஆற்றோர மணலுக்கு அப்பால் ஆழமாக ஒரு நீர் வழிப் பாதையை ஏற்படுத்தியது. பின்பு இந்த பாதை வழியாக மே 28ஆம் திகதி இந்தக் கப்பல் 1000 கி.மீ பயணித்து மெக் நிக்கோல் துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்தக் கப்பலை வரவேற்க துறைமுகமே விழாக்கோலம் பூண்டது. 21 துப்பாக்கி வெடித்து, இசைக்குழு, ஆடல் பாடல் நிகழ்ச்சிகளோடு இந்தக் கப்பலை வரவேற்க மக்கள் காத்திருக்கின்றனர். 2 மில்லியன் டொலர் செலவில் இந்தக் கப்பலில் விடுதி, கடை, கலை அரங்கம் என்று மறுகட்டமைப்புப் பணிகள் நடந்துள்ளன. இதனால் இனி 3000 பேருக்கு வேலையும், 1000 மில்லியன் டொலர் வருவாயும் கிடைக்கும். ஆண்டொன்றுக்கு சுமார் ஒரு மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சிறுப்பிட்டி அண்ணமார் அம்மன் ஆலய தேவைகள் குறித்து விசேட ஆலோசனை



(கொழும்பு)

சிறுப்பிட்டி தெற்கு அண்ணமார் அம்மன் ஆலய நிர்வாகத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க வலி.கிழக்கு பிரதேசசபை எதிர் கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பியின் கோப்பாய் பிரதேச இணைப்பாளருமாகிய இராமநாதன் ஐங்கரன் கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்கு விஜயம் செய்து நிர்வாகத்தினருடன் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

இதேவேளை, மின்சாரப் பிரச்சினை தொடர்பாகவும் கலந்துரையாடியதுடன் அதனை வடக்கின் வசந்தம் ஊடாகப் பெற்றுக் கொடுப்பதற்கு மிக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

ஏற்கனவே இவ் ஆலயம் தொடர்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு சென்றதற்கிணங்க இந்து கலாசார அமைச்சின் ஊடாக இவ் ஆலயத்திற்கு ஒரு இலட்சம் ரூபா நிதியினைப் பெற்றுக்கொண்டதற்கு நிர்வாகத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினருக்கும் தங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் ஆசைப்பிள்ளை சசீந்திரன் உடனிருந்தார்.

# புற்றுநோய் சிகிச்சைப் பிரிவிற்கு உபகரணங்கள் அன்பளிப்பு



யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் விடுதிக்கு 8 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை பீபிள் லீசிங் கம்பனி கையளித்துள்ளது. குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் வளிச்சீராக்கி உட்பட விடுதிக்குத் தேவையான படுக்கை விரிப்பு, தலையணை உறைகள் எனப் பல்வேறு உபகணத் தொகுதிகள் கையளித்ததுடன், புற்றுநோய் விடுதியின் ஒரு பகுதியை பீபிள் லீசிங் கம்பனியின் யாழ். மாவட்ட முகாமையாளர் திறந்து வைத்தார்.

யாழ். போதனா வைத்தியசாலைப் புற்றுநோய் வைத்திய நிபுணர் டாக்டர் ஜெயக்குமார் தலைமையில் நேற்று மதியம் 1.00 மணியளவில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ சங்க உறுப்பினர்கள், மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் உட்பட யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர். (எஸ்)

## ஐ.நா.வின் விசாரணையை எதிர்கொள்ளத் தயார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளினால் நடத்தப்படவுள்ள மனித உரிமைகள் தொடர்பான விசாரணைக்கு முகங்கொடுக்க இலங்கை தயாராகி வருவதாக மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்தத் தகவலை மனித உரிமைகள் ஆணையாளரான சட்டத்தரணி பிரதீபா மஹநாமஹேவா தெரிவித்துள்ளார்.

ஐ.நா.வின் வருடாந்த மீளாய்வு விசாரணையின் போது இலங்கை உள்ளிட்ட ஏனைய நாடுகள் குறித்து விசாரணை மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டார். இந்த விசாரணைகள் ஒகடோபர் மற்றும் நவம்பர் மாத காலப்பகுதியினுள் இடம்பெறும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கு ஏற்ற பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் சட்டத்தரணி பிரதீபா மஹநாமஹேவா தெரிவித்துள்ளார்.

# உயர் கல்வி அமைச்சர் பதவி விலகவேண்டும்

## கோருகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

இஸெட் புள்ளி முறைமை தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புடன் உயர் கல்வி அமைச்சர் தமது பதவியில் இருந்து விலக வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

புதிய மற்றும் பழைய பாடத்திட்டங்களுக்கு அமைய பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான இஸட் புள்ளி வெவ்வேறாக கணிக்கப்பட வேண்டும் என தமது கட்சி முன்னர் சுட்டிக்காட்டியிருந்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைய உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புத் தொடர்பில், தமது கட்சி மகிழ்ச்சி அடைந்துள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வருடத்திற்கான உயர்தரப் பரீட்சைகள் நடைபெறுவதற்கு இரண்டு மாதங்களே எஞ்சியுள்ள நிலையில், உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள இந்தத் தீர்ப்பின் பின்னர் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அரசாங்கம் எவ்வாறான தீர்வுகளை முன்வைக்கப் போகின்றது என தமது கட்சி கோரிக்கை விடுப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

### இஸட் புள்ளிகள்...

வினால் மனுதாரர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன எனவும் நீதிமன்றம் தெரிவித்தது. 2011 பரீட்சை பெறுபேறுகளை திருத்துவது குறித்து மனுவில் கோரப்படாதநிலையில் இப்பரீட்சைப் பெறுபேறு விடயத்தில் தான் தலையிடப் போவதில்லை என நீதிமன்றம் தெரிவித்தது. பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம். என்.ஜே. புஷ்பகுமார, கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் ஆர்.ஓ. தட்டில், சட்டமா அதிபர் ஆகியோர் இம்மனுக்களில் பிரதிவாதிகளாக குறிப்பிடப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### வடக்குத்...

உறுப்பினர்களை மதிப்பதில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்தப்படுவதில்லை. அவர்கள் யாழ்ப்பாணத்தில் விகாரைகளை கட்டுகின்றனர். காணிகளை கைப்பற்றுகின்றனர். அரசாங்கம் இந்தப் பிரதேசத்தில் அராஜகம் செய்கிறது.

வடக்கில் தேர்தல் நடத்தப்பட்டால், கிழக்கில் பிள்ளையான் வென்றது போல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெறும் எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார்.

### தந்தையின்...

வாகனத்தைப் பின்புறமாகச் செலுத்தியபோது சில்லில் அகப்பட்டு சிறுமி இறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. சிறுமியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மருத்துவ மனையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது. தந்தையாகிய திருச்செல்வத்தை கைதுசெய்துள்ள பளைப் பொலிஸார் அவரைக் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேறகொண்டு வருகின்றனர். (77,149)

### பலாலி...

இது வணிக மற்றும் இலங்கை விமானப்படையின் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

உள்நாட்டு விமானங்களுக்காக 10 விமான நிலையங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் உள்நாட்டு விமான நிலையங்களுக்கான பெரிய தளமாக இரத்மலானை விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். கண்டியில் மூன்றாவது சர்வதேச விமான நிலையத்தை அமைக்கவுள்ளதாக சிலர் கூறுகின்றபோதிலும், அங்கு உள்நாட்டு விமான நிலையத்தை மாத்திரம் நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எங்களிடம் 2 சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன. அவற்றிலொன்று கட்டுநாயக்க விமான நிலையமென்பதுடன் அம்பாந்தோட்டை, மத்தளவில் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் நிர்மாணிக்கப்படுகின்றது. கண்டியில் உள்நாட்டு விமான நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டது எனவும் அவர் கூறினார்.

### புலம்பெயர்ந்த...

தமிழ்த தேசியக் கூட்டமைப்பு இவ்வாறான பிரசாரங்கள்ள மேற்கொண்டு வருகிறது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் கலந்து கொள்ளுமாறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு புலம்பெயர் தமிழர்கள் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

நாட்டு மக்களின் காணிகளை அபகரித்துக் கொள்ளும் எந்த விதமான திட்டமும் அரசாங்கத்திற்கு கிடையாது.

எனினும், தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் நெகிழ்வுப் போக்கைப்பின்பற்றுவது நடை முறைச் சாத்தியமற்றது. யுத்த நிறைவின் பின்னர் பலர் சொந்த இடங்களுக்கு திரும்பி வருவதாகவும், காணிகள் அபகரிக்கப்பட்டிருந்தால் நீதியின் உதவியை நாடமுடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### மீள்குடியேற்ற...

குறிப்பாக இப்பகுதியில் மக்கள் மீள்குடியமர்வதற்கான போக்குவரத்து, குடிநீர், மலசலகூட வசதிகள், மாணவர்கள் கல்வி கற்பதற்கான பாடசாலைகளை மீள ஆரம்பித்தல் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பது, அவர்களை விரைவாக குடியேற்றுவது குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடப்பட்டது. இதன்போது கூட்டத்தில் கலந்துகொண்ட உள்ளூர் மற்றும் வெளியூர் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள், மீள்குடியேறவுள்ள மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தருவதாகத் தெரிவித்தன.

அதேநேரம் மீள் குடியமர்த்தப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டது. மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கான போக்குவரத்திலுள்ள குறைபாடுகள், குறித்த பகுதிகளுக்கான மின்விநியோகம் சீர்ப்படுத்தப்படாமை என்பன குறித்து அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ், இதுவரை மின்விநியோகம் வழங்கப்படாமைக்கான காரணத்தை தெளிவுபடுத்தித் தமது அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு மின்சாரசபையினருக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் வடமராட்சி கல்விவலயத்தில் மேலதிகமாக 19 கணித ஆசிரியர்கள் உள்ளதாகவும், ஆனால் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளில் கணித ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாகவும், மேலதிகமாக உள்ள ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டும், அவர்கள் அப்பகுதிக்குச் செல்லவில்லை எனவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இந்த விடயம் தொடர்பாக ஆளுநர் உரிய கவனமெடுத்து, அவ்வாறு செல்லாத ஆசிரியர்களை பணியிலிருந்து இடைநிறுத்துமாறும், அமைச்சர் தெரிவித்தார்.

நேற்றைய இந்தக் கூட்டத்தில் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம். யாழ். மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன், பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள் உள்ளூர், வெளியூர் அரச சார்பாற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், படைத்தரப்பினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### சொந்தக் காணிகளில்...

காணிகளுக்குரிய ஆவணங்கள் இல்லாத காரணத்தினால், அவர்கள் உரிமை கோருகின்ற காணிகள் அவர்களுடையதுதானா என்பதை உறுதி செய்வதற்கு கால அவகாசம் தேவைப்படுவதாகவும் இதன் காரணமாகவே அந்தக் குடும்பங்கள் மீண்டும் மெனிக்பாம் முகாமுக்குக் கொண்டு செல்லப்படவுள்ளன என்றும் அவர் தெரி வித்தார்.

காணிக்கு உரிய உரிமையாளர்கள் யார் என்பதை உறுதி செய்வதற்கு மூன்று அல்லது நான்கு வாரங்கள் எடுக்கும் என்றும், அதன் பின்னர் தற்போது மெனிக்பாம் முகாமுக்குக் கொண்டு செல்லப்படும் குடும்பங்கள் திருமுறிகண்டியில் மீள்குடியேற்றம் செய்யப்படுவார்கள் என்றும் வேதநாயகன் கூறினார்.

திருமுறிகண்டியில் மீள்குடியேற்றப்படுகின்ற குடும்பங்களுக்கு ஆளுநரின் நிதியுதவி மூலம் தற்காலிக வீடுகள், கழிப்பறைகள் என்பவற்றைக் கட்டிக்கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்றும் முல்லைத்தீவு அரச அதிபர் தெரிவித்தார்.

# அரச காணிகளைக் கொள்ளையிடும் அதிகாரிகளும், அரசியல்வாதிகளும்



## அமைச்சர் ஜனக பண்டார குற்றச்சாட்டு

பிறந்த மண்ணில் ஒரு அங்குலம் நிலத்திற்கும் உரிமையற்றவர்களாக இருக்கும் வறிய மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள அரச காணிகளை அதிகாரிகளும், பிரதேச அரசியல்வாதிகளும் இணைந்து கொள்ளையிட ஆரம்பித்துள்ளனர் எனவும் தனது அமைச்சின் பணிகளை முன்னெடுக்கும்போது வாழ்க்கை குறித்து மனமுடைந்து போவதாகவும் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் 'காணி உரிமம்' என்ற சர்ச்சைக்குரிய காணிகளின் பிரச்சினைகளைத் தீர்த்து உரியவர்களிடம் ஒப்படைக்கும் தேசிய வேலைத் திட்டத்தை தம்புள்ளை தேசிய பாடசாலையில் நேற்று முன்தினம் ஆரம்பித்துவைத்து உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

காணிப் பிரச்சினை குறித்து பிரச்சினைகளுடன் வரும், தாய், தந்தையின் கதைகளைக் கேட்கும்போது இருதயம் வெடிப்பதைப் போல வலி ஏற்படுகிறது. இந்தக் காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பது என்பது மிகவும் சிரமமான காரியம் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# பாதுகாப்பு, அபிவிருத்தியில் இராணுவம் மறுசீரமைப்பு

பாதுகாப்பு, அபிவிருத்தி ஆகிய துறைகளின் கீழ் இலங்கை இராணுவம் மறுசீரமைக்கப்படும் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நாட்டில் போர்ச்சூழல் இல்லை என்ற போதிலும் தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டியது இராணுவத்தினரின் முதல் கடமையும், பொறுப்பும் என்பதால் இராணுவ அதிகாரிகளும், சிப்பாய்களும் தொடர்ந்தும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இராணுவத்தில் சேவைகள், தொழில்துறை சார்ந்த பிரிவுகள் இருக்கின்றன. அவற்றிலுள்ள படையினர் நாட்டின் அபிவிருத்தி, விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இராணுவத்தின் மதிப்புக்கு குந்தகம் ஏற்படாத வகையில் புதிய மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

# தமிழினியின் விடுதலையில் அரசியல் நோக்கம் இல்லை

அரசாங்கத்தின் அரசியல் தேவைகளுக்காக தமிழினி விடுதலை செய்யப்படுவதாகக் கூறப்படுவதில் உண்மை இல்லை என்று மீள் குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்துள்ளார்.

அரசு தனது வெளிப்படைத் தன்மையை சர்வதேசத்துக்கு காட்டும் நடவடிக்கையே அது என்றும் அவர் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் முக்கிய தாக்குதல் அணிகளில் அங்கம் வகித்த ஆயிரக்கணக்கான முன்னாள் போராளிகள் கூட புனர்வாழ்வுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் விடுதலைப் புலிகளுக்கு சிறு உதவிகளைச் செய்தவர்களும் சந்தேக நபர்களும் சிறைகளில் வாடுவது நியாயமில்லை

அரசு அமைக்கவுள்ள மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் ஊடாக இந்தக் கைதிகளின் பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும் என்று நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# விரிவுரையாளர் சங்கத் தலைவர் பாதுகாப்பு அமைச்சிற்கு அபகீர்த்தி



தான் உள்ளிட்ட தனது குடும்ப உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறித்து பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்து ஊடகங்களுக்கு தகவல் வழங்கிய பின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தன்னை தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்டதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர்மால் ரங்ஜித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

அச்சுறுத்தல் குறித்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பியதை அடுத்து பாதுகாப்புச் செயலாளர் தன்னுடன் கடந்த வெள்ளிக்கிழமை தொலைபேசியில் தொடர்புகொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சு எனக் கூறிக் கொண்டு நிர்மால் ரங்ஜித்தின் வீட்டுக்கு வந்த சி... அயலவர்களிடம் தன்னைப் பற்றி விசாரித்துள்ளதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது பாதுகாப்பு குறித்து அவதானம் செலுத்துவதை விடுத்து பாதுகாப்பு அமைச்சை அபகீர்த்திக்கு உட்படுத்தியுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் தன் மீது குற்றம் சுமத்தியதாக நிர்மால் தெரிவித்துள்ளார்.

இந்த அச்சுறுத்தல் சம்பவத்துடன் பாதுகாப்பு அமைச்சை தொடர்புபடுத்துவது நியாயமானதல்ல என பாதுகாப்புச் செயலாளர் தன்னிடம் தெரிவித்ததாக கலாநிதி நிர்மால் ரங்ஜித் தேவசிறி கூறியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமைக்கு பாதுகாப்புச் செயலாளர் அதிருப்தியை வெளியிடும் வகையில் தன்னுடன் தொலைபேசியில் உரையாடியதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

# கோரிக்கைகள் நிறைவேறினால் போராட்டத்தை கைவிடத்தயார்

(கொழும்பு)

கடந்த பெப்ரவரி மாதம் அமுல்படுத்துவதற்கு உயர் கல்வி அமைச்சு இணங்கிய யோசனைகள் அமுல்படுத்தப்பட்டால் பகிஷ்கரிப்பை கைவிடத் தயார் என கல்விசாரா ஊழியர் தொழிற் சங்க கூட்டுக் குழுவின் பேச்சாளர் விஜயதிலக்க ஜயசிங்க கூறினார்.

அதேவேளை, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பகிஷ்கரிப்பு தொடர்பாக உயர் கல்வி அமைச்சு, திறைசேரி மற்றும் சம்பந்தப்பட்ட அமைப்புகளுக் கிடையிலான கலந்துரையாடல்களுக்கு அவசர தேவை உள்ளது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு தொடர்ச்சியான பேச்சுவார்த்தை அவசியம் எனவும் கல்விசாரா ஊழியர்களுடனான சந்திப்பில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறினார். இவ்விடயத்தில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலையிட வேண்டுமென பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக் குழு கோரிக்கை விடுத்தது.

மூன்றாவது வாராமாக தொடரும் கல்விசார ஊழியர்களின் பகி'கரிப்பினால் பல்கலைக்கழக செயற்பாடுகள் முடங்கியுள்ளன. தமது சம்பளப் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் பகிஷ்கரிப்பை தொடரப்போவதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

# ஐ.ஓ.எம்.அடையாள அட்டைகள் முன்னாள் போராளிகளுக்கு நிறுத்தம்

(கொழும்பு)

இறுதிக்கட்டப் போரின்போது படையினரிடம் சரணடைந்த பின்னர் புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் பேராளிகளுக்கு ஐ.ஓ.எம். எனும் 'சர்வதேச தொண்டு நிறுவனம் வழங்கி வந்த அடையாள அட்டைகளின் விநியோகத்தை நிறுத்துமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட போராளிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இந்த அடையாள அட்டைகள் ஐ.ஓ.எம். நிறுவனத்தால் வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில் அரசாங்கத்தின் இந்த உத்தரவை அடுத்து இந்த அடையாள அட்டைகளை வழங்கும் பணிகளை ஐ.ஓ.எம். நிறுவனம் நிறுத்தியுள்ளது.

இந்த அடையாள அட்டைகள் தமக்கு மேலதிக பாதுகாப்பை வழங்குவதாக தான் சந்தித்த பெரும்பாலான முன்னாள் போராளிகள் குறிப்பிட்டதாக ஐ.ஓ.எம் நிறுவனத்தின் இலங்கைக்கான தலைவர் றிச்சர்ட் டன்சிகர தெரிவித்துள்ளார்.

# அக்கராயனில் மரக்கடத்தல் நான்கு பேர் சிக்கினர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - அக்கராயன்குளம் பகுதியில் சட்டவிரோதமாக மரம் வெட்டிய நான்கு சந்தேகநபர்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையிரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

40 ஆயிரம் ரூபா பெறுதியான வெவ்வேறு வகை மரக்குற்றிகள் 22 மற்றும் அதனை ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்ட உழவு இயந்திரம் என்பவற்றை விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கிளிநொச்சி மற்றும் வன்னேரிக்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

# ஊடகவியலாளர் மீது பொலிஸார் தாக்குதல்

மவ்விம பத்திரிகையின் வர்த்தகச் செய்திப் பிரிவு ஆசிரியர் சந்துன் ஜீவன்ன மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஊடகவியலாளரான ஜீவன்ன மீது கிரிபத்கொட நகரில் வைத்து நேற்று இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கிரிபத்கொட நகரிலுள்ள வங்கி ஒன்றின் முன்னால் தனது வாகனத்தை நிறுத்தி விட்டு கடை ஒன்றுக்குச் சென்ற போது, பிழையான முறையில் வாகனத்தை நிறுத்தி வைத்துள்ளதாகக் கூறி இவர் மீது பொலிஸார் தாக்குதலை நடத்தியுள்ளனர். கிரிபத்கொட பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த பொலிஸாரே இவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தன் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து பேலியகொட பொலிஸில் ஊடகவியலாளர் சந்துன் ஜீவன்ன முறைப்பாடு செய்ததனையடுத்து இது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# இலங்கைப்பணிப்பெண்கள் குறித்து சிங்கப்பூரில் கலந்துரையாடல்

இந்தோனேசியாவில் இருந்து தற்போது பணிப்பெண்களை பணிக்கு அமர்த்துவதில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் இலங்கை பணிப்பெண்களை பணிக்கு அமர்த்துவது குறித்து சிங்கப்பூர் முகவர்கள் கலந்துரையாடி வருகின்றனர்

இது தொடர்பாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தவும் சிங்கப்பூர் முகவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இந்தநிலையில், ஏற்கனவே இலங்கையில் இருந்து பணிப்பெண்களை தெரிவு செய்யும் நடவடிக்கைகளில் முகவர்கள் ஈடுப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக சிங்கப்பூரில் பணிப்பெண்களுக்கான பற்றாக்குறையினை இலங்கை பணிப்பெண்கள் தீர்த்து வைப்பர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போது சிங்கப்பூரில் 4500 இலங்கை பணிப்பெண்கள் பணியாற்றி வருகின்றனர். இந்தத் தொகையினை இந்த வருட முடிவிற்கு முன்னர் 6 ஆயிரமாக உயர்த்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மகிந்தவை எதிர்க்கட்சித் தலைவராக நியமித்தது மிகப்பெரிய தவறு

## என்கிறார் சந்திரிகா



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராக நியமித்ததே தான் செய்த மிகப்பெரிய தவறு என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க தெரிவித்துள்ளார். அண்மையில் நடைபெற்ற திருமண வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்கியதே நான் செய்த மிகப் பெரிய தவறு. அன்று செய்ய வேண்டிய சிறந்த விடயத்தையே நான் செய்தேன். அப்போதைய அரசாங்கம் எம்மவர்களுக்கு இடையூறுகளைச் செய்தது. ஆயிரத்து 600 முறைப்பாடுகள் வரை கிடைத்திருந்தன. இதன் காரணமாக நான் அன்று அந்த முடிவை எடுத்தேன். ரணிலுடன் இணைந்து செயற்பட எவ்வளவு முயற்சிகள் செய்த போதிலும் அது கை கூடவில்லை. நான் மீண்டும் அரசியலில் ஈடுபடமாட்டேன். எந்தப் பக்கத்தையும் சாரமாட்டேன். விரும்பியவர்களுக்கு ஆலோசனை வழங்குவேன் எனவும் சந்திரிக்கா குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூன் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.